விலை ரூபா: 15.00

-Registered as a Newspaper in Srilanka




# வலம்புரி

பக்கங்கள்: பதினாறு — Valampurii

சங்கு 10 வள்ளுவர் ஆண்டு 2040 புரட்டாதி 11 ஞாயிற்றுக்கிழமை (27.09.2009) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 282

# வவுனியா நலன்புரி முகாமில் படையினர்-பொதுமக்கள் மோதல்

## இருவர் படுகாயம்; பதற்றம் தொடர்கிறது

(வவுனியா)

வவுனியா நலன்புரி முகாம்களில் தங்கவைக்கப்பட்டுள்ள மக்களுக்கும் படையினருக்கும் இடையே நேற்று மோதல்கள் இடம் பெற்றுள்ளதாக அதிகாரிகள் தெரிவிக்கின்றனர். இம் மோதல்களின் போது படையினர் மேற்கொண்ட துப்பாக்கிப் பிரயோகத்தில் இரு பொதுமக்கள் படுகாயமடைந்துள்ளனர். (16ஆம் பக்கம் பார்க்க)

## முகாமில் ஏற்பட்டுள்ள பதற்றத்தை தவிர்க்குமாறு த.தே.கூ. கோரிக்கை

(லண்டன்)

வவுனியா நலன்புரி முகாமில் படையினரிற்கும் பொதுமக்களுக்கும் இடையில் இடம் பெற்ற மோதலில் பொதுமக்கள் இருவர் இறந்தவிட்டதாகவும் மூவர் காயமடைந்துள்ளதாகவும் தனக்கு தகவல் வந்துள்ளதாக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் சிவசக்தி ஆனந்தன் தெரிவித் துள்ளார்.

முகாம் பகுதியில் இடம்பெற்ற மோதல் சம்பவம் தொடர்பாக பி.பி.சிக்கு கருத்துத் தெரிவித்த போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார். இது தொடர்பாக அவர் மேலும் தெரிவித்ததாவது. இந்த மோதல்களில் இரண்டு பேர் இறந்ததாகவும் மூன்று பேர் காயமடைந்த தாகவும் அங்கிருந்து வந்த தகவலில் கூறப் பட்டுள்ளது. ஆனால் அதனை சரியான முறையில் உறுதிப்படுத்த முடியவில்லை.

இந்த மாதம் 17ஆம் திகதியிலிருந்து சமைத்த உணவு வழங்குவதை அரசு நிறுத்தி அவர் களாகவே சமைத்து உண்பதற்கு அரிசி, மா என்பன வழங்கப்படுகின்றன. எனவே அவர் கள் சமைப்பதற்கு விறகு தேவைப்படுகிறது. அதைவிட மரக்கறி, உப்பு, புளி போன்ற பொருட்கள் (16ஆம் பக்கம் பார்க்க)

## தீவகத்தைச் சேர்ந்த 657 பேர் வவு.முகாமிலிருந்து நேற்று வந்தனர்

(யாழ்ப்பாணம்)

வவுனியா நலன்புரி முகாம்களிலிருந்து நேற்று தீவகத்தைச் சேர்ந்த 657 பேர் யாழ்ப்பாணத்திற்கு அழைத்துவரப்பட்டனர் என யாழ். அரச அதிபர் க.கணேஷ் தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் தகவல் தருகையில்;

வவுனியா நலன்புரி முகாம்களில் தங்க வைக்கப்பட்டுள்ள யாழ். மாவட்டத்தைச் சேர்ந்த மக்கள் கட்டம் கட்டமாக சொந்த இடங்களில் குடியமர்த் (16ஆம் பக்கம் பார்க்க)

## மகனுக்காக தந்தையை தண்டிக்கவில்லை
## முகாமில் பிரபாகரனின் பெற்றோரை நன்கு கவனிக்கிறோம்-ஜனாதிபதி



(கொழும்பு)

வவுனியா இடம் பெயர்ந்தோருக்கான முகாம்களில் தடுத்துவைக்கப்பட்டுள்ள தமிழீழ விடுதலைப்புலிகள் அமைப்பின் தலைவர் வே.பிரபாகரனின் பெற்றோரையோ அல்லது புலிகள் அமைப்பின் முக்கிய தலைவர்களின் உறவினர்களோ மோசமான முறையில் நடத்தப்படவில்லை என ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ தெரிவித்திருக்கின்றார். பிரபாகரனின் பெற்றோர், தமிழ்ச்செல்வனின் மனைவி (02ஆம் பக்கம் பார்க்க)

## தடுப்பு முகாமில் இருந்து 3000 பேர் தப்பிவிட்டனர்
### வன்னி கட்டளைத் தளபதி தகவல்

(வவுனியா)

வவுனியாவிலுள்ள இடம்பெயர்ந்தோர் முகாம்களில் தங்கவைக்கப்பட்டுள்ளோர் தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட மீள் கணக்கெடுப்புக்களின் போது, முகாம்களிலிருந்து 3 ஆயிரம் பேர் வரை தப்பிச் சென்றுள்ளதாக தெரியவந்துள்ளது என வன்னி பிராந்திய இராணுவக் கட்டளைத் (16ஆம் பக்கம் பார்க்க)

## தடுப்பு முகாம் மக்கள் குறித்து கிலாறி-கிருஷ்ணா பேச்சு

(நியூயோர்க்)

அமெரிக்காவின் வெளிவிவகார அமைச்சர் கிலாறி கிளின்டனும் இந்திய வெளிவிவகார அமைச்சர் எஸ்.எம்.கிருஷ்ணாவும் நியூயோர்க் கில் சந்தித்து வவுனியா முகாம்களில் உள் ள இடம்பெயர்ந்த மக்களின் பிரச்சினை தொடர்பாக பேச்சுக்களை நடத்தியுள்ளனர்.

நியூயோர்க்கில் நடைபெறும் ஐ.நா. பொதுச் சபைக் கூட்டத்தில் கலந்துகொள்ளும் இருவரும் கூட்டத்தொடருக்கு இடையில் இது தொடர்பாக பேச்சுக்களை நடத்தியுள்ளார்கள்.

இடம்பெயர்ந்து முகாம்களில் தங்கியிருக்கும் 3 இலட்சம் (02ஆம் பக்கம் பார்க்க)

## 1000 மில். ரூபாய் பணம்; 2000 மில். ரூபாய் நகை
## வடபகுதி மக்களின் வங்கி வைப்புகள் உரிமை கோரப்படாமல் உள்ளது!
### அமைச்சர் டக்ளஸ் தகவல்

(யாழ்ப்பாணம்)

வட பகுதியைச் சேர்ந்தவர்களின் ஆயிரம் மில்லியன் ரூபாய் பணமும், 2 ஆயிரம் மில்லியன் ரூபாய் பெறுமதியான தங்க நகைகளும் உரிமை கோரப்படாமல் வங்கிகளில் வைப்பிலுள்ளதாக சமூக சேவைகள் மற்றும் சமூக நலத்துறை அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தெரிவித்தார். இவ்வாறு உரிமை கோரப்படாமலுள்ள வங்கி வைப்புகளை அரசாங்கம் கையேற்று வடபகுதி மக்களின் வாழ்வாதார மேம்பாட்டிற்கு (02ஆம் பக்கம் பார்க்க)

## இலங்கைக்கு செய்ம்மதி சீன அரசு வழங்கும்

(கொழும்பு)

இலங்கையில் தொடர்பாடல் செய்ம்மதி ஒன்றை உருவாக்கி விண்ணில் ஏவுவதற்கு பூரண உதவிகள் வழங்கப்படும் என சீன அரசாங்கம் உறுதியளித்துள்ளது.

இது தொடர்பான உடன்படிக்கை விரை வில் கைச்சாத்திடப்படும் என கொள்கைக் கல்வி மையத்தின் நிறைவேற்றுப் பணிப்பாளர் கலா நிதி சமான் கெலிகம தெரிவித்துள்ளார். (ந-5)



இலங்கையின் முதற் தர SINGER தொலைக்காட்சிகள்

தற்போது விசேட சலுகைகளுடன் யாழ் மக்களுக்காக

www.singersl.com

எந்த மாதிரியிலுமாலான உங்கள் பழைய தொலைக்காட்சிக்கு விலைக்கழிவுடன் புத்தம் புதிய தொலைக்காட்சி

விசேட விலைக்கழிவு

திருப்தி இன்றேல் பணத்தினை மீளப்பெறும் வாய்ப்பு

கிளைகள்: யாழ்ப்பாணம் | நெல்லியடி | சுன்னாகம் | சாவகச்சேரி

SINGER Plus
MORE BRANDS-MORE CHOICE
யாழ் மண்ணின் பரம்பரைத் தோழன்

(C-3343)

# வவு.முகாம்களிலிருந்து 61 ஆயிரம் பேர் யாழ்ப்பாணத்திற்கு அழைத்து வரப்படுவர்

## தீவகத்தில் தங்கவைக்க ஆலோசனை-அமைச்சர் டக்ளஸ்

(யாழ்ப்பாணம்)

வவுனியா நலன்புரி முகாம்களில் தங்க வைக்கப்பட்டுள்ள மக்களில் 61 ஆயிரம் பேர் அடுத்த மாத முற்பகுதியில் யாழ்ப்பாணத்திற்கு அழைத்து வரப்படவுள்ளதாகவும் அவர்களை தீவகத்தில் தங்க வைப்பது உகந்தது என வடக்கு மாகாண ஆளுநருக்கு தாம் ஆலோசனை வழங்கியுள்ளதாகவும். சமூக சேவைகள் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது;

பருவ மழை ஆரம்பமாகவுள்ள நிலையில் வவுனியா நலன்புரி முகாம்களில் தங்க வைக்கப்பட்டுள்ள மக்களில் 61 ஆயிரம் பேர் அடுத்த மாத முற்பகுதியில் யாழ்ப்பாணத்திற்கு அழைத்து வரப்படுவார்கள் என வடக்கு மாகாண ஆளுநர் மேஜர் ஜெனரல் ஜி.ஏ.சந்திரசிறி எனக்கு அறிவித்திருந்தார்.

எனவே அழைத்துவரப்படும் மக்களை எங்கு தங்க வைக்கலாம் என ஆளுநர் தன்னிடம் ஆலோசனை கேட்டார்.

இதற்கு அம் மக்களை தீவகத்தில் தங்க வைப்பது உகந்தது என நான் ஆலோசனை தெரிவித்தேன். இதன் மூலம் தீவகத்தின் துரித அபிவிருத்தியில் அம்மக்களை இணைத்துக் கொள்ள முடியும் என்பது எனது கருத்து என்றார் சமூக சேவைகள் மற்றும் சமூக நலத்துறை அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா. (ந-5)

# அமைச்சரவையின் செயலாளராக ஜெயசுந்தரவை நியமிக்கத் திட்டம்

(கொழும்பு)

அரச பதவிகளை வகிக்க முன்னாள் நிதியமைச்சின் செயலாளர் பீ.பீ.ஜயசுந்தரவுக்கு உயர்நீதி மன்றம் அனுமதி வழங்கியதைத் தொடர்ந்து அவர் அமைச்சரவையின் செயலாளராக நியமிக்கப்பட உள்ளதாக தகவல்கள் வெளியாகியுள்ளன.

தேசத்திற்கு சேவையாற்ற திறைசேரியின் செயலாளர் பதவியை மீண்டும் பெற்றுக் கொள்ளுமாறு ஜனாதிபதி தன்னிடம் கோரிக்கை விடுத்ததாகவும் நீதிமன்றத்தில் தான் வழங்கியுள்ள சத்தியக் கடிதம் காரணமாக அதனை தன்னால் நிறைவேற்ற முடியாது என ஜய சுந்தர நீதிமன்றத்தில் தாக்கல் செய்திருந்த மனுவில் குறிப்பிட்டிருந்தார்.

பீ.பீ.ஜயசுந்தரவுக்கு அமைச்சரவையின் செயலாளர் பதவியை வழங்க வேண்டுமாயின் தற்போது அமைச்சின் செயலாளராகப் பணியாற்றும் சுமித் அபேசிங்கவை வேறு பதவிக்கு மாற்றம் செய்ய வேண்டும். எனினும் அபேசிங்கவுக்கு ஜனாதிபதி இரண்டு வருட கால பணிநீடிப்பை வழங்கியுள்ளார்.

இந்த நிலையில் பீ.பீ.ஜயசுந்தரவை அமைச்சரவையின் செயலாளராக நியமிக்க ஜனாதிபதி திட்டமிட்டுள்ளதாக தகவல்கள் வெளியாகியுள்ளன. அரச நிறுவனம் ஒன்றை தனியார் மயப்படுத்தும் நடவடிக்கையில் தனியார் நிறுவனத்திற்கு சாதகமான முறையில் ஜய சுந்தர செயற்பட்டு நாட்டு மக்களுக்குத் துரோகமிழைத்துள்ளதாக முன்னாள் நீதியரசர் சரத் என். சில்வா உள்ளிட்ட நீதியரசர்கள் குழு தீர்ப்பு வழங்கியிருந்தது.

இந்த குற்றத்திற்காக பீ.பீ.ஜயசுந்தரவை 5 இலட்சம் ரூபா இழப்பீட்டை அரசுக்கு செலுத்துமாறும் நீதியரசர்கள் உத்தரவிட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (ந-5)

## வட பகுதி மக்களின்...

பயன்படுத்த வேண்டுமென ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவிடம் தாம் கோரியுள்ளதாகவும் அமைச்சர் குறிப்பிட்டார்.

சமூக சேவைகள் மற்றும் சமூக நலத்துறை அமைச்சின் யாழ். அலுவலகத்தில் நேற்று நடைபெற்ற பத்திரிகையாளர் சந்திப்பிலேயே அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா மேற்படி தகவலைத் தெரிவித்தார்.

இதுதொடர்பில் அமைச்சர் மேலும் தெரிவிக்கையில்,

வட பகுதியைச் சேர்ந்த மக்களின் வங்கி வைப்புக்கள் 15 ஆண்டுகளுக்கு மேல் உரிமை கோரப்படாமல் உள்ளது.

இவ்வாறு உரிமை கோரப்படாத வங்கி வைப்புகளில் ஆயிரம் மில்லியன் ரூபாபணமும், 2 ஆயிரம் மில்லியன் ரூபாய் பெறுமதி யான தங்க நகைகளும் இருப்பதாக கணக் கிடப்பட்டுள்ளது.

இந் நிதியினை அரசாங்கம் பொறுப் பேற்று வட பகுதி மக்களின் வாழ்வாதார முன்னேற்றத்திற்கு பயன்படுத்த வேண்டு மென ஜனாதிபதியிடம் அண்மையில் கோரிக் கை விடுத்தேன்.

இதனை தற்போது வட மாகாண ஆளுநர் மேஜர் ஜெனரல் ஜி.ஏ.சந்திர சிறியிடமும் தெரிவித்துள்ளேன்.

இந் நிதியின் மூலம் வடக்கு மாகாணத்தில் கூட்டுறவு, விவசாயம், கடற்தொழில், சிறு கைத் தொழில்கள் மற்றும் மக்களின் வாழ்வாதார முன்னேற்ற நடவடிக்கைகளுக்கு பயன்படுத்த வேண்டும் என்பதே எனது கோரிக்கையாகும் என்றார். (ந-5)

## தருப்பு...

மக்களையும் மீளக்குடியமர்த்துவதற்கான நடவடிக்கைகளை உடனடியாக அரசு மேற்கொள்ள வேண்டும் என்பதில் இந்தப் பேச்சுக்களின் போது இருவருக்கும் இடையில் உடன்பாடு காணப்பட்டது எனத் தெரிவிக்கப்படுகிறது. (ந-5)

## மகனுக்காக தந்தை...

மற்றும் புலிகள் அமைப்பின் உயர் தலைவர்களின் நெருங்கிய உறவினர்கள் இடம்பெயர்ந்த மக்களுடன் முகாம்களிலேயே உள்ளனர். எமது படையினர் அவர்களுக்கு உதவி வருகின்றார்கள்.

வவுனியா முகாமில் பிரபாகரனின் பெற்றோர் மோசமான முறையில் நடத்தப்படுவதாக முன்னர் வெளியான செய்திகளை மறுத்த ஜனாதிபதி, இடம்பெயர்ந்த மூன்று லட்சம் மக்களையும் அரசு நட்புறவுடனேயே நடத்துகின்றது எனவும் தெரிவித்தார்.

குறுகிய அரசியல் நோக்கத்தைக் கொண்ட அரசியல்வாதிகள் சிலர் நாட்டின் நற்பெயருக்குக் களங்கத்தை ஏற்படுத்துவதற்கான முயற்சிகளை மேற்கொண்டாலும், மகனுக்காக ஒரு தந்தையை நாம் தண்டனைக்குள்ளாக்கப் போவதில்லை. எனவே பிரப்பாகரனின் பெற்றோரைக் கூட நாம் பராமரிப்போம் எனவும் மகிந்த தெரிவித்தார். (ந-5)

# பத்மநாதனை விசாரணை செய்ய இந்திய விசேட குழு இலங்கை வரும்

(கொழும்பு)

தமிழீழ விடுதலைப் புலிகளின் தலைமைச் செயலாளரும் அனைத்துலக உறவு விவகாரங்களுக்கான இயக்குநருமான செல்வராசா பத்மநாதனை விசாரணை செய்வதற்கான இலங்கை அரசின் அனுமதிக்காக இந்தியா காத்திருக்கின்றது.

1991ஆம் ஆண்டில் இடம் பெற்ற இந்தியாவின் முன்னாள் பிரதமர் ராஜீவ் காந்தி கொலை வழக்கில் சந்தேக நபராக பத்மநாதனும் சேர்க்கப்பட்டுள்ளார். இது தொடர்பாக இந்திய மத்திய புலனாய்வுத்துறை (சி.பி.ஐ.) பத்மநாதனிடம் விசாரணை நடத்துவதற்கு விரும்புகின்றது.

இந்த வழக்கு விசாரணைகள் ஏற்கனவே கிடப்பில் போடப்பட்டிருந்தன. மத்திய புலனாய்வுத்துறையின் பன்முக ஆளுமைக் கண்காணிப்பு முகவர் அமைப்பே இந்த விசாரணைகளை மேற்கொண்டிருந்தது.

அண்மையில் மலேசியாவில் இருந்து பத்மநாதன் இலங்கை அரசால் கைது செய்யப்பட்டு கொண்டு வரப்பட்டதை அடுத்து ராஜீவ் காந்தி கொலையின் பின்னால் இருக்கக் கூடிய சதித்திட்டம் குறித்த விசாரணைகளை பன்முக ஆளுமைக் கண்காணிப்பு முகவர் அமைப்பு மீண்டும் கையில் எடுத்துள்ளது.

பத்மநாதனை விசாரணை செய்வதற்கென ஒரு குழுவை அனுப்புவதற்குத் தாம் தயாராக இருப்பதாக தெரிவித்த பன்முக ஆளுமைக் கண்காணிப்பு முகவர் அமைப்பின் தலைமை விசாரணையாளர் பி.என். மிஸ்ரா இலங்கையிடமிருந்து அரசியல் ரீதியான அனுமதி கிடைத்ததும் தமது குழுவினர் கொழும்பு செல்வார்கள் எனவும் கூறினார்.

இலங்கையின் பாதுகாப்பு அதிகாரிகளுக்கு வினாக் கொத்து ஒன்றை அனுப்பி அதற்கான பதில்களை பத்மநாதனிடம் இருந்து பெறுவது என்பதே தொடக்கத்தில் இருந்த திட்டம் என்று கூறிய மிஸ்ரா பின்னர் ராஜீவ் கொலையில் புலிகளின் பங்கு மற்றும் பத்மநாதனின் பங்கு குறித்து எழுந்த அதீதமான விடயம் காரணமாக விசாரணைக்கு என ஒரு குழுவை அனுப்புவதற்கு முடிபு செய்யப்பட்டது எனவும் கூறினார்.

பத்மநாதனிடம் ஆழமான விசாரணைகளை நடத்துவது என இந்தியப் புலனாய்வுத்துறையினர் தற்போது முடிபு செய்துள்ளனர். விடுதலைப் புலிகளினால் இந்தியா எதிர்நோக்கக்கூடிய ஆபத்துக்கள் குறித்து பத்மநாதனிடம் விசாரணை செய்ய வேண்டி இருப்பதாக இந்திய அதிகாரிகள் கருதுகின்றனர்.

கடந்த 22 ஆம் திகதி புதுடில்லியில் கூடிய மத்திய புலனாய்வுத் துறை (சி.பி.ஐ.) மற்றும் ஏனைய புலனாய்வு அமைப்புக்களின் அதிகாரிகள் கூடி பத்மநாதனிடம் கேட்க வேண்டிய கேள்விகள் குறித்து ஆராய்ந்து அவற்றைத் தயார் செய்துள்ளனர்.

(ந-5)

# இந்திய பாதுகாப்பு ஆலோசகராக அலோக் பிரசாத் நியமனம்

(டெல்லி)

இந்திய பிரதி தேசிய பாதுகாப்பு ஆலோசகராக இலங்கைக்கான இந்திய உயர்ஸ்தானிகர் அலோக் பிரசாத் நியமிக்கப்பட்டுள்ளார்.

இதனடிப்படையில் அலோக் பிரசாத் இந்திய தேசியப் பாதுகாப்பு பேரவையின் தலைவராகவும் நியமிக்கப்பட உள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

தற்போது இந்திய தேசியப் பாதுகாப்பு ஆலோசகராக எம்.கே. நாராயணன் செயற்பட்டு வருகின்றார். அவருக்கு அடுத்த பிரதி தேசியப் பாதுகாப்பு ஆலோசகர் பதவியானது இந்தியாவின் அதி உயர் பதவிகளில் ஒன்று என்பது குறிப்பிடத்தக்கது.

இலங்கையின் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ தலைமையிலான அரசாங்கம் விடுதலைப் புலிகளுக்கு எதிராக யுத்தத்தை பிரகடனப்படுத்தி தீவிர தாக்குதல்களை ஆரம்பித்த காலப் பகுதியில் இலங்கையின் உயர்ஸ்தானிகராலயப் பொறுப்பை ஏற்றுக்கொண்ட அலோக் பிரசாத் கடந்த மூன்று தசாப்த கால இலங்கையின் உள்நாட்டு யுத்த காலப் பகுதிகளில் கடமையாற்றிய உயர்ஸ்தானிகர்களை விடவும் இலங்கையின் உள்நாட்டுப் பிரச்சினையில் இந்திய நிலைப்பாட்டை மிகவும் நுட்பமாகக் கையாண்டு வெற்றி கொண்டவர் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

(ந-5)


## தவறிவிட்டது

5310 இலக்க NOKIA கையடக்கத் தொலைபேசி இராச வீதிக்கும் கோப்பாய் மத்திக்கும் இடையில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் தயவு செய்து கீழ்க்காணும் தொலைபேசி இலக்கத்துடன் தொடர்பு கொள்ளவும் சன்மானம் வழங்கப்படும்.

T.P- 0779229030 (3592)

## விற்பனைக்கு

பொற்பதி வீதி, கந்தர்மடம், மணியகாரன் லேன், ஆனைக்கோட்டை, பிரம்படி லேன், நல்லூர், யாழ்ப்பாணம், பிறவுண் றோட், மாம்பழம் சந்தி, வேம்படி வீதி, சோமசுந்தரம் அவனியூ, கல்வியங்காடு ஆகிய இடங்களில் வீடுகள், காணிகள் விற்பனைக்குண்டு. நல்லூர், யாழ்ப்பாணம் பகுதிகளில் விற்க விரும்புவோரும் தொடர்பு கொள்ளலாம்.

தரகர் தேவையில்லை.

சேவை முகவர்

தொடர்பு : சுந்தரம்

T.P. 021 222 9177

(3590)

## திருமண சேவை

48 வருடங்களாகச் சாதனை படைத்துவரும்

புலவர் திருமண சேவையுடன்

தொடர்பு கொண்டு உங்கள் திருமணங்களை நிறைவேற்றிக் கொள்ளுங்கள்.

மதுரகானம், 238, அரசடிவீதி, கந்தர்மடம், யாழ்ப்பாணம்.

T.P- 021 222 7147

15A,32-வது ஒழுங்கை, வெள்ளவத்தை, கொழும்பு-6.

T.P- 011 2500380

3576

## MIS கணனிக்கல்வி நிறுவனம்

விஜயதசமி புதிய வகுப்புக்கள் ஆரம்பம்

28/09/2009 Monday 3pm & 4 pm

Grade 6, 7, 8, 9

ICT - 10 / 11

குறைந்த கட்டணம்

Mr.R.Kumaran - B.Sc. (Computing & IS)

இராமநாதன் வீதியிலிருந்து 150m தூரம் அல்லது K.K.S வீதியிலிருந்து 200m தூரம்

# 74, சபாபதி வீதி தலையாழி பிரம்படி யாழ்ப்பாணம்

TPNO :- 0213216083 , 0776577359

(3577)


# தகவல் தொழில் நுட்ப ஆளணி மேம்பாட்டிற்கான புதிய செயற்திட்டம்

தகவல் தொழில்நுட்பத் துறையில் உயர் பங்களிப்பினை வழங்கி வரும் மைக்ரோசொப்ற், சண்மைக்ரோ சிஸ்ரம், சிஸ்கோ போன்ற நிறுவனங்கள் தகுதி வாய்ந்த ஆளணியின் தேவை கருதி கற்கை நெறிகளையும் பரீட்சைகளையும் நாடத்தி அங்கத்துவச் சான்றிதழ்களை வழங்கிவருகின்றன. சர்வதேச தொழிற் சந்தையில் தகவல் தொழில் நுட்பத் துறையில் மேற்குறித்த தகைமை உடையோரே உயர் தொழில்களில் பணிக்கமர்த்தப்படுகின்றனர்.

இக்கற்கை நெறிகள் மூலம் யாழ் மாணவர்களும் பயனுற வேண்டும் என்ற நோக்கில் இல. 324 பலாலி வீதியில் அமைந்துள்ள எம்.சி.எஸ்.(MCS) கணினி நிறுவனம் தற்போது உலகின் முன்ணனி நிறுவனங்களின் வலைப்பின்னலுடன் இணைந்துள்ளது. இதனால் எமது பிரதேச மாணவர்களும் நேரடியாக மைக்ரோசொப்ற் (Microsoft), சண்மைக்ரோ சிஸ்ரம் (Sun Micro System), டெல்(DELL), எச்பி(HP), ஓராகிள்(Oragle), ஐபிஎம்(IBM), ஐசிடிஎல்(ICDL) மற்றும் சீமா(CIMA) நிறுவனங்களின் கற்கை நெறியினை இங்கு பயில்வதுடன் மேற்படி நிறுவனங்களின் யாழ்ப்பாணத்தில் அங்கீகரிக்கப்பட்ட பரீட்சை நிலையமாகவும் எம்.சி.எஸ்(MCS) நிறுவனம் விளங்குகின்றது.

தற்போது மூன்றாம் நிலை நாடுகளின் தகவல் தொழில்நுட்ப ஆளணியினை மேம்படுத்தும் செயற் திட்டத்தின் கீழ் எம்.சி.எஸ்(MCS) இனம் காணப்பட்டு, இந்நிறுவனத்தில் மேற்படி நிறுவனங்களின் தகவல் தொழில் நுட்பக்கற்கை நெறியினை பூர்த்தி செய்து அப்பரீட்சைகளில் சித்தியடைவோருக்கு அந் நிறுவனங்களின் பரீட்சைக் கட்டணத்தை முழுமையாகவோ, பகுதியாகவோ மீளளிக்கவுள்ளது.

வெளிநாடுகளில் மாணவர்கள் அதிகூடிய செலவில் பயிலும் இக்கற்கை நெறியினை குறைந்த செலவில் யாழ் மாணவர்களும் பயின்று சிறந்த தகவல் தொழில்நுட்ப வல்லுனர்களாவதற்கு இது ஓர் அரிய சந்தர்ப்பமாகும். (C-3385)

# ஏழாலை கண்ணகி விளையாட்டுக்கழகத்தின் உதைபந்தாட்ட சுற்றின் இறுதிப் போட்டி

(யாழ்ப்பாணம்)

ஏழாலை கண்ணகி விளையாட்டுக் கழகம் நடாத்தும் 7 பேர் கொண்ட உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டியின் இறுதிப் போட்டி இன்று ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 3 மணிக்கு ஏழாலை மகா வித்தியாலய மைதானத்தில் இடம் பெறவுள்ளது.

இவ் இறுதிப் போட்டியில் குருநகர் பாடு மின் அணியை எதிர்த்து மயிலங்காடு ஞான முருகன் அணி மோதவுள்ளது.

கடந்த ஒருமாத காலமாக இடம்பெற்ற உதை பந்தாட்டச் சுற்றுப் போட்டிகளில் நவசக்தி, சென்ற் மைக்கல் யங் ஹென்றிஸ் றோயல் போன்ற அணிகளை எதிர்த்து குரு நகர் பாடுமின் அணி தொடர் வெற்றியீட் டியதன் மூலம் இறுதிப் போட்டிக்குத் தெரி வாகியுள்ளது.

அத்துடன் ஞானமுருகன் அணி அல் வாய் நண்பர்கள், சென் நீக்கிலஸ், றோயல், கலைமதி போன்ற அணிகளை எதிர்த்து வெற்றியீட்டியதன் மூலம் இறுதிப் போட்டிக்கு தகுதி பெற்றுள்ளது.

மூன்றாம் இடத்திற்கான போட்டிக்காக ஊரெழு றோயல் அணியும் கலைமதி (நவிண்டில்) அணியும் மோதவுள்ளன.




இவ் இறுதிச் சுற்றுப் போட்டியின் விசேட நிகழ்வாக பெண்களுக்கான உதைபந்தாட்டப் போட்டியில் கரவெட்டி பொம்மேர்ஸ் பெண்கள் அணியை எதிர்த்து அளவெட்டி பாரதிதாசன் பெண்கள் அணி மோதவுள்ளது. (ஓ-7)

## டான் தொலைக்காட்சியின் பிராந்திய நிலைய திறப்பு விழா

(யாழ்ப்பாணம்)

டான் தமிழ் ஒளி தொலைக்காட்சி நிறு வனம் தனது யாழ்ப்பாண பிராந்திய கலை யகத்தை 27, ஸ்ரேசன் வீதி, கொக்குவில் என்னும் முகவரியில் நாளை திங்கட்கிழமை காலை 9.30 மணிக்கு திறந்து வைக்கப்பட வுள்ளதாக டான் தமிழ் ஒளி தொலைக்காட்சி இயக்குநர் எஸ்.எஸ். குகநாதன் தெரிவித் துள்ளார். (ஓ-4)

## முதியோர்தின விழா

(யாழ்ப்பாணம்)

கைதடி அரச முதியோர் இல்லத்தில் சர் வதேச முதியோர் தின விழா எதிர்வரும் ஒக் டோபர் மாதம் முதலாம் திகதி முதல் 7 ஆம் திகதி வரை காலை 9 மணிமுதல் பிற்பகல் 3 மணிவரை கொண்டாடப்படவுள்ளது.

இதில் எதிர்வரும் முதலாம் திகதி வியாழக் கிழமை காலை 9 மணிக்கு இல்ல அத்தியட் சகர் என். இராசலிங்கம் தலைமையில் நடை பெறவுள்ளது.

நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ். பிராந்திய ஆணையாளர் திருமதி. ப. சிவ லிங்கம் கலந்து சிறப்பிப்பதுடன் சிறப்பு விருந் தினர்களாக சாவகச்சேரி உதவிப் பிரதேச செயலர் செல்வி றஞ்சனா நவரட்ணம், யாழ். சமூக சேவைகள் திட்ட இணைப்பாளர் ரி. கிருபாகரன், முன்னைநாள் இல்ல அத்தியட் சகர் எஸ். யோகானந்தராசா ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர்.

மேலும் நிகழ்வில் செஞ்சொற் செல்வர் ஆறு திருமுகன் சிறப்புச் சொற்பொழிவாற்ற வுள்ளதுடன் கலை நிகழ்வுகளும் இடம்பெற வுள்ளன. (ஓ-4)

## விரிவுரையாளர்களுக்கான விண்ணப்பம் கோரல்

இலங்கை திறந்த பல்கலைக்கழக யாழ்ப் பாணப் பிராந்திய நிலையத்திற்கு சுகாதார விஞ்ஞான பாட சிரேஷ்ட விரிவுரையாளர் தரம் II இடைநிலை மூன்றாம் சிரேஷ்ட விரிவுரையாளர் தரம் I/II விரிவுரையாளர் சமூகவியல் கற்கைநெறி ஆகிய பாடநெறிக ளுக்கு ஒப்பந்த அடிப்படையிலான விரிவுரை யாளர்களுக்கான விண்ணப்பங்கள் கோரப் பட்டுள்ளன.

விண்ணப்பிக்க விரும்புபவர்கள் இலங்கை திறந்த பல்கலைக்கழக நாவல நுகேகொட நிலையத்தில் விண்ணப்பப் படிவங்களைப் பெற்று எதிர்வரும் ஒக்ரோபர் 5 ஆம் திகதிக்கு முன்னர் விண்ணப்பிக்குமாறும் மேலதிக விபரங்களை யாழ்ப்பாணப் பிராந்திய நிலைய விளம்பரப் பலகையில் பார்வையிட லாம் எனவும் பிராந்திய இணைப்பாளர் அறிவித்துள்ளார். (ஓ-4)

## நாய் குறுக்கிட்டதால் முதியவர்கள் படுகாயம்

நாய் குறுக்கே பாய்ந்ததில் மோட்டார் சைக்களில் பயணித்துக் கொண்டிருந்த இரு முதியவர்கள் படுகாயமடைந்துள்ளனர். இச் சம்பவம் நேற்றுக் காலை 8.30 மணியள வில் உடுவிலில் இடம்பெற்றுள்ளது.

புத்தூரிலிருந்து உடுவில் வீதியினூடாக மோட்டார் சைக்களில் சென்று கொண்டிருந்த போது இராணுவ காவலனருகே நின்ற பெரிய இன நாய் குறுக்கே பாய்ந்ததில் இரு முதி யவர்களும் அதே இடத்தில் படுகாயமடைந் துள்ளனர். உடல் முழுவதும் படுகாயங்ளுக் கிலக்கான இரு வயோதிபர்களான எஸ். பால சுப்பிரமணியம் (வயது 59), ஏ. இளையதம்பி (வயது 62) என்பவர்களே யாழ். போதனா வைத்தியாசலையில் அனுமதிக்கப்பட்டுள் ளனர். (ஓ-30)

## மதிப்பீட்டுப் பரீட்சை

(யாழ்ப்பாணம்)

இலங்கை திறந்த பல்கலைக்கழக யாழ். பிராந்திய நிலையத்தில் சட்டவியல் கற்கை நெறி மட்டம் -3 மாணவர்களின் தொடர் மதிப்பீட்டுப் பரீட்சை நாளை திங்கட்கிழமை ஆரம்பமாகு மென இணைப்பாளர் தெரிவித் துள்ளார். (6-14)

## இருபதாம் ஆண்டு நிறைவும் வாணி விழாவும்

(யாழ்ப்பாணம்)

பண்ணாகம் அம்பாள் கலை மன்றம் நடத்தும் வாணிவிழாவும் இருபதாம் ஆண்டு நிறைவு விழாவும் இன்று ஞாயிற்றுக்கிழமை மாலை 6 மணிக்கு கலைமன்ற கலாசார மண்டபத்தில் செல்லன் மு.பாபுஜி தலைமை யில் இடம்பெறவுள்ளது.

இவ்விழாவில் "சரஸ்வதி சபதம்" எனும் நாட கம் மற்றும் கவியரங்கம், பட்டிமன்றம் போன்ற நிகழ்வுகளும் நடைபெறவுள்ளன. (ஓ-30)

## பாலர் மழலைப் பூங்கா அங்குரார்ப்பண விழா

(யாழ்ப்பாணம்)

"பாலர் மழலைப் பூங்கா" சிறுவர் பாட சாலை நாளை திங்கட்கிழமை காலை 9 மணியளவில் திருநெல்வேலி 118/2 சிவராஜா அவெனியூ எனும் முகவரியில் ஆரம்பிக்கப் படவுள்ளது.

விஜயதசமியன்று ஆரம்பமாகும் இக் கால்கோள் விழாவில் புதிதாக பாலர்களை இணைத்துக் கொள்ளலாம் என்பதை பாலர் மழலைப்பூங்கா பொறுப்பாசிரியர் திருமதி நயிணி பிரபாகரன் தெரிவித்துக் கொள்கின் றார். (ஓ-136)

## திருமுறை ஓதுவார்களுக்கான பண்ணிசைப் பயிற்சி வகுப்பு

(யாழ்ப்பாணம்)

அகில இலங்கைத் திருமுறை மன்றம் ஆலயங்களில் திருமுறைகளைப் பாடும் ஓதுவார்களுக்கான தேவாரப் பண்ணிசைப் பயிற்சி வகுப்பை நல்லூர் தேரடிக்கு முன் உள்ள தேரடி சித்தர் செல்லப்பா சுவாமிகள் நினைவாலய மண்டபத்தில் ஞாயிற்றுக் கிழமைகளில் காலை 10 மணிக்கும் புதன் கிழமைகளில் பிற்பகல் 4.30 மணிக்கும் நினைவாலய பரிபாலன சபையினரின் அனு சரணையுடன் நடத்தி வருகின்றது.

இப்பயிற்சி வகுப்பில் ஆலயங்களில் பஞ்சபுராணம் ஓதுவது, ஆலய மஹோற்சவ காலத்தில் கொடி ஏற்றம், கொடியிறக்க தினங் களில் நவசந்தி பண்பாடும் ஒழுங்குமுறை, பன்னிரு திருமுறைப் பாடல்கள் பண்ணோடு பாடும் பயிற்சி ஆகியவை நடைபெற்று வருகின்றது.

துறைசை ஆதீன திருமுறைத் தோன்றல் கலாபூசணம் கே.எஸ். ஆர். திருஞானசம் பந்தன் இப்பண்ணிசைப் பயிற்சி வகுப்பை நடாத்தி வருவது குறிப்பிடத்தக்கது.

இப்பயிற்சியில் ஆண், பெண் இருபால ரும் பங்கு பற்றி பயன் பெறலாம் என மன்ற அமைப்பாளர் சி. கிருஷ்ணமூர்த்தி அழைக் கின்றார். (ஓ)

## இராசி பலன்

27.09.2009
(புரட்டாதி 11, ஞாயிற்றுக்கிழமை)
நவமி பின்னிரவு 3.13 மணிவரை
பூராடம் முன்னிரவு 11.37 மணிவரை
இராகுகாலம் 4.32 - 6.02 மணிவரை
சுபநேரம் 9.02 - 10.32 மணிவரை
மகா நவமி விரதம்
சரஸ்வதி பூசை சித்தாமிர்தம்

| | |
|---|---|
| மேடம் | புதிய முயற்சி, எதிர்பாராத செலவு, ஆன்றோர் சந்திப்பு, கட்டுப்பாடு. |
| இடபம் | எடுத்த காரியம் தாமதமாகும், ஆரோக்கியக் குறைவு, போசன சுகம், வீண்பகை. |
| மிதுனம் | அபூர்வ சந்திப்பு, திடீர் பயணம், தெய்வ சிந்தை, முயற்சி கைகூடும். |
| கடகம் | சத்துரு ஜெயம், தேகநலன், முயற்சி கைகூடும், சுவாரஸ்யம். |
| சிங்கம் | குடும்பக் கவலை, சிறுவியாதி, கடின வார்த்தை, முயற்சி தாமதம். |
| கன்னி | பயந்த சுபாவம், தெய்வ சிந்தை, சுபநிகழ்வு, நல்ல முயற்சி. |
| துலாம் | உறவினர் வருகை, தெய்வ தரிசனம், காரிய அனுகூலம், போசன சுகம். |
| விருச்சிகம் | அமைதிக்குறைவு, முயற்சி தாமதம், தனவிரயம், தெய்வ சிந்தை. |
| தனுசு | தெய்வ தரிசனம், காரிய சிந்தை, போசன சுகம், நண்பர்கள் சந்திப்பு. |
| மகரம் | காரிய சிந்தை, அலைச்சல், சுப செலவு, சயனசுகக்குறைவு. |
| கும்பம் | பெருமையடைதல், எடுத்த காரியம் கைகூடும், தெய்வ சிந்தை, பொருள் சேர்க்கை. |
| மீனம் | தூர தேசச் செய்தி, தெய்வ சிந்தை, காரிய அனுகூலம், பொருள் சேர்க்கை. |

வளவன்



## கொலராடோ நிவாரணப் பொருள் விநியோகத்தில்

# இழுபறிநிலை தொடருமாயின் விநியோக பொறுப்பிலிருந்து விலகிக்கொள்ள முடிவு

### இலங்கை செஞ்சிலுவைச் சங்கம் அறிவிப்பு

கொலராடோ கப்பலில் கொண்டு வரப்பட்டு கொழும்புத் துறைமுகத்தில் தேங்கிக் கிடக்கும் நிவாரணப் பொருட்களை இடம் பெயர்ந்த மக்களுக்கு வழங்குவதில் தொடர்ந்தும் இழுபறி நிலை ஏற்படுமாயின் அப் பொருட்களை விநியோகிக்கும் பொறுப்பில் இருந்து விலகிக் கொள்ளநேரும் என இலங்கை செஞ்சிலுவைச் சங்கம் அறிவித்துள்ளது.

இதுதொடர்பான கடிதம் ஒன்றை அரசாங்கத்திற்கு இலங்கை செஞ்சிலுவைச் சங்கத்தின் தலைவர் அனுப்பிவைத் துள்ளதாக சங்கத்தின் பிரதிப் பணிப்பாளர் நாயகம் சுரேன் பீரிஸ் கூறியுள்ளார்.

அவர் மேலும் கூறியுள்ளதாவது,

சர்ச்சைக்குரிய கொலராடோ கப்பலில் கொண்டு வரப்பட்ட வணங்கா மண் நிவாரணப் பொருட்கள் சுமார் நான்கு மாதங்களாக கொழும்புத்துறைமுகத்தில் தேங்கிக் கிடக்கின்றன. இடம்பெயர்ந்த மக்களுக்காக, புலம் பெயர்ந்த மக்களால் அனுப்பிவைக்கப்பட்ட இந்த நிவாரணம் நலன்புரி நிலையங்களில் உள்ள மக்களை இன்னும் சென்றடையவில்லை. அதுமாத்திரமின்றி அதற்கான எவ்வித அறிகுறிகளும் தென்படவும் இல்லை.

இந்நிலையில், கொலராடோ கப்பலுக்கான துறைமுக அமைச்சு கடந்த வாரம் அறி வித்திருந்த போதிலும் அரசாங்கத்திற்கு செலுத்த வேண்டிய வரிகளுக்கு விலக்களிக் குமாறு விடுக்கப்பட்ட வேண்டுகோளுக்கு இன்னமும் சாதகமான பதில் எதுவும் கிடைக்கவில்லை.

ஜுலை மாத முடிவிலிருந்து செப்டெம்பர் 22 ஆம் திகதி வரைக்குமான பெறுமதி சேர்க்கப்பட்ட வரி மற்றும் தேச நிர்மாண வரிக் கட்டணங்கள் 20 இலட்சம் ரூபா என்று மதிப்பிடப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

எனவே,இதன் இழுபறி நிலை தொடருமாயின் வணங்கா மண் நிவாரணப் பொருட்களை விநியோகிக்கும் பொறுப்பில் இருந்து விலகிக்கொள்வதற்கும் அப் பொறுப்பை அரசாங்கத்திடம் ஒப்படைப்பதற்கும் சங்கம் தீர்மானித்துள்ளது. (ஓ-6)

# தயா மாஸ்டர் மற்றும் ஜோர்ஜ் மாஸ்டர் மீதான விசாரணைகள் தொடர்கின்றன

### குற்றப்புலனாய்வுத் துறை நீதிமன்றத்தில் தகவல்

கைதுசெய்யப்பட்டு பின்னர் பிணையில் விடுதலை செய்யப்பட்ட தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்பைச் சேர்ந்த தயா மாஸ்டர் மற்றும் ஜோர்ஜ் மாஸ்டர் ஆகியோர் அரசுக்கு எதிரான நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ளார்களா என்பதையிட்டு விசாரணைகள் தொடர்ந்தும் நடத்தப்படுவதாகத் தயா மாஸ்டர் மற்றும் ஜோர்ஜ் மாஸ்டர் ஆகியோருக்கு எதிரான வழக்கு கொழும்பு பிரதம நீதிவான் நீதிமன் றத்தில் இது தொடர்பான அறிக்கையொன்றை சமர்ப்பித்துள்ளனர். தயா மாஸ்டர் மற்றும் ஜோர்ஜ் மாஸ்டர் ஆகியோருக்கு எதிரான வழக்கு கொழும்பு பிரதம நீதிவான் நீதிமன்றத்தில் நேற்று முன்தினம் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டபோதே குற்றப்புலனாய்வுத் துறையினர் இந்த அறிக்கையை வெளியிட்டனர்.

தயா மாஸ்டர் மற்றும் ஜோர்ஜ் மாஸ்டர் ஆகியோருக்கு எதிரான வழக்கு கொழும்பு பிரதம நீதிவான் நீதிமன்றத்தில் நேற்று முன்தினம் விசாரணைக்கு எடுத்துக் கொள் ளப்பட்ட போதே குற்றப் புலனாய்வுத் துறையினர் இந்த அறிக்கையை வெளியிட்டனர். தயா மாஸ்டர் மற்றும் ஜோர்ஜ் மாஸ்டர் ஆகிய இருவரும் நேற்று முன்தினம் விசாரணைகள் இடம்பெற்ற போது நீதிமன்றத்தில் சமுக மளித்திருந்தனர்.

குற்றப் புலனாய்வுத்துறையைச் சேர்ந்த காவல்துறை அத்தியட்சகர் ராஜன் இந்த விசாரணை அறிக்கையை நீதிமன்றத்தில் சமர்ப்பித்ததுடன் தயா மாஸ்டர் மற்றும் ஜோர்ஜ் மாஸ்டர் ஆகியோரின் செயற்பாடுகள் தொடர்பாக வவுனியாவில் உள்ள இடம்பெயர்ந்தோருக்கான முகாம்களில் தாம் விசாரணைகளை மேற்கொண்டதாகவும் தெரிவித்த அதேவேளை இந்த விசாரணை அறிக்கைகளை சமர்ப்பிப்பதற்கு மற்றொரு நாளை ஒதுக்குமாறும் அவர் நீதிமன்றத்தை கேட்டுக்கொண்டார்.

இதனையடுத்து ஒக்டோபர் மாதம் 30ஆம் நாளுக்கு வழக்கை ஒத்திவைத்த நீதவான் அன்றைய நாள் இந்த விசாரணை அறிக்கைகளை நீதிமன்றத்தில் சமர்ப்பிக்குமாறு குற்றப்புலனாய்வுத்துறைக்கு உத்தரவிட்டார்.

முல்லைத்தீவு மாவட்டத்தில் போர் தீவிரமாக இடம்பெற்றுக் கொண்டிருந்த காலத்தில் புதுமாத்தளன் பகுதியில் இலங்கை தரைப் படையினரிடம் சரணடைந்த தயா மாஸ்டர் மற்றும் ஜோர்ஜ் மாஸ்டர் ஆகிய இருவரும் கடந்த சுமார் நான்கு மாத காலமாகத் தடுத்துவைக்கப்பட்டிருந்தபின்னர் இரு வாரங்களுக்கு முன்னர் பிணையில் விடுதலை செய்யப்பட்டனர். (ஓ-6)

## டோஹாவில் கொள்ளையில் ஈடுபட்ட இலங்கையர் ஐவருக்கு சிறைத்தண்டனை

டோஹாவில் இடம்பெற்ற கொள்ளைச் சம்பவம் ஒன்றுடன் தொடர்புடைய ஐந்து இலங்கையர்களுக்கு சிறைத் தண்டனை விதிக்கப்பட்டுள்ளதாக இணையத் தளச் செய்தி ஒன்றில் தெரிவிக்கப்பட்டுள்ளது. அச் செய்தியில் ஒரு இலட்சம் கட்டார் ரியால்கள் மற்றும் ஆவணங்களைக் கொள்ளையிட்டதாக குறித்த ஐந்து இலங்கையர்கள் மீதும் குற்றம் சுமத்தப்பட்டுள்ளது. கடந்த பெப்ரவரி மாதம் 27 ஆம் திகதி நள்ளிரவு இந்தக் கொள்ளைச் சம்பவம் இடம்பெற்றது.

முகாமையாளரின் அறையை வேண்டுமென்றே பூட்டாது சென்றுவிட்டு பின்னர் திரும்பி வந்து பணத்தைத் கொள்ளையிட்டுள் ளதாக குறிப்பிடப்படுகின்றது. பணம் வைக்கப் பட்டிருந்த இரும்புப் பெட்டகத்தை திருடி வாகன மொன்றின் மூலம் பாலைவனத்திற்கு எடுத்துச் செல்லப்பட்டதாகவும் பின்னர் குறித்த ஐந்து பேரும் கொள்ளையிட்ட பணத்தை மறுநாள் காலை இலங்கைக்கு அனுப்பி வைத்திருந்தமையும் விசாரணைகள் மூலம் தெரியவந்துள்ளது. குறித்த சம்பவம் தொடர்பாக விசாரணை நடத்திய டோஹா நீதிமன்றம் சந்தேக நபர்களுக்கு மூன்று ஆண்டுகால சிறைத் தண்டனையும் பினனர் நாடு கடத்தப்பட வேண்டுமென்ற உத்தரவனையும் பிறப்பத் துள்ளது எனத் தெரிவிக்கப்படுகிறது.

இந்தத் தீர்ப்பிற்கு எதிராக மேன்முறையீட்டு நீதிமன்றில் மனுத் தாக்கல் செய்ய முடியும் என்பது குறிப்பிடத்தக்கது. (ஓ-6)

## எதிர்வரும் பொதுத் தேர்தலில்

# ராஜபக்ஷ குடும்பத்திலிருந்து ஐந்து பேர் மாவட்டத் தலைவர்களாக போட்டியிடவுள்ளனர்

(கொழும்பு)

எதிர்வரும் பொதுத் தேர்தலின் போது ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பின் சார்பில் ராஜபக்ஷ குடும்பத்தைச் சேர்ந்த ஐந்து பேர் போட்டியிட உள்ளதாகக் குறிப்பிடப்படுகிறது.

இதில் மூத்த சகோதரர் சமால் ராஜபக்ஷ ரத்தினபுரி மாவட்டத் தலைவராகவும் இளைய சகோதரர்களான பசில் ராஜபக்ஷ கம்பஹா மாவட்டத் தலைவராகவும் கோத்தபாய ராஜபக்ஷ குருணாகல் மாவட்டத் தலைவராகவும் சமால் ராஜபக்ஷவின் புதல்வர் சசிந்திர ராஜபக்ஷ மொனராகலை மாவட்டத்தலைவராகவும் அம்பாந்தோட்டை மாவட்டத் தலைவராக ஜனாதிபதியின் புதல்வர் நாமல் ராஜபக்ஷவும் போட்டியிட உள்ளதாக பிரபல சிங்கள இணையத்தளமொன்று செய்தி வெளியிட்டுள்ளது.

இதேவேளை ஏனைய பல மாவட்டங்களில் ராஜபக்ஷ குடும்பத்தாருக்கு நெருங்கியவர்களை தலைமைப் பொறுப்பில் நியமிக்கத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

இந்த நிலைமை கட்சிக்குள் பல்வேறு உட்பூசல்களை ஏற்படுத்த வழிகோலும் எனத் தெரிவிக்கப்படுகிறது. (ஓ-6)


# மதுவரி திணைக்களத்தின் சாவகச்சேரி அலுவலக திறப்புவிழாவில்...




பிரதம விருந்தினர்கள் அழைத்து வரப்படல்



விருந்தினர்கள் கொடியேற்றல்



மதுவரித் திணைக்கள அதிகாரிகளின் அணிவகுப்பு மரியாதை



அமைச்சர் மதுவரித் திணைக்கள அதிகாரியிடம் வாகனம் கையளித்தல்



அலுவலக நினைவுப் பலகையை திரைநீக்கம் செய்தல்



நிகழ்வில் கலந்துகொண்டோரில் ஒரு பகுதியினர்

# வலி கிழக்குப் பிரதேச சபை மாவட்ட மட்டத்தில் முதலிடம்

(யாழ்ப்பாணம்)

உள்ளூராட்சி மன்றங்களுக்கிடையே நடாத்தப்பட்ட 2007 ஆம் ஆண்டுக்குரிய முகாமைத்துவப் போட்டியில் வலி கிழக்கு பிரதேச சபையானது மாவட்ட மட்டத்தில் முதலிடத்தைப் பெற்றுக் கொண்டதோடு, மாகாண மட்டத்திலும் முதலிடத்தைப் பெற்றுள்ளது.

அடுத்த மாதம் யாழ்ப்பாணத்தில் நடைபெறவுள்ள உள்ளூராட்சி மன்றங்களின் மாநாடும் கண்காட்சியும் என்னும் நிகழ்வில் இதற்கான விருது வழங்கும் வைபவமும் இடம் பெறவுள்ளது.

அத்துடன் அண்மையில் பண்டார நாயக்கா சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் நடைபெற்ற உள்ளூராட்சி அமைச்சின் மாநாட்டில் வலி கிழக்கு பிரதேச சபை பாராட்டப்பட்டதுடன் 2007 இல் நிதி சார்ந்த நடவடிக்கைகளில் தேசிய மட்டத்தில் பாராட்டத்தக்க வகையில் இருந்ததாக இலங்கை உள்ளூராட்சி ஆளுகை நிறுவனத்தின் பணிப்பாளரால் தெரிவிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (ஓ)

# கரித்தாஸ் கியூடெக் நிறுவனத்தால் வதிவிட வலுவூட்டற் பயிற்சி

(யாழ்ப்பாணம்)

கரித்தாஸ் கியூடெக் நிறுவனத்தின் வாழ்வாதார செயற்திட்டத்தில் பங்குகொள்ளும் கிராமமட்ட அமைப்புக்களின் உறுப்பினர்கள் மற்றும் தொண்டர்களுக்கான வதிவிட வலுவூட்டல் பயிற்சி நாளை திங்கட்கிழமை முதல் தொடர்ந்து 3 நாட்களுக்கு பண்டத்தரிப்பு தியான இல்லத்தில் நடைபெறவுள்ளது.

சாவகச்சேரி, கரவெட்டி, உடுவில், சங்கானை, சண்டிலிப்பாய் ஆகிய பிரதேச செயலர் பிரிவிற்குட்பட்ட 19 கிராம மட்ட அமைப்புக்களைச் சேர்ந்த 60 தொண்டர்கள் மற்றும் உறுப்பினர்கள் இப்பயிற்சி நெறியில் பங்கு பெறவுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது. (ஓ)

# வாரம் ஒரு தகவல்

## நேரம் வந்தாச்சு

"சேர்! என்ன யோசிக்கிறீங்க?"

"அடுத்ததாக என்ன நாவல் எழுதலாம் என்று யோசிக்கிறேன்."

"நீங்கள் தொடர்ந்து எழுதவேண்டும். நிறைய எழுதிக் குவிக்க வேண்டும். அதுதான் என்னுடைய ஆசை."

"எனக்கு இப்படி ஒரு விசிறியா? ரொம்ப மகிழ்ச்சி! நீங்கள் என்னைப் புரிந்து கொண்ட அளவுக்குக்கூட பத்திரிகையாளர்கள் புரிந்து கொள்கிறார்களில்லையே அதை நினைக்கத்தான் வருத்தமாக இருக்கிறது."

"அதைப் பொருட்படுத்தாதீங்க. நீங்க பாட்டுக்கு எழுதிக் கொண்டே இருங்க! மேல் நாட்டு நாடக ஆசிரியர் ஒருவர் அப்படித்தான்... பல நாடகங்கள் எழுதினார். அவருடைய படைப்புக்களைப் பிரசுரிப்பதற்கு யாரும் முன்வரவில்லை! பசியாலும் பட்டினியாலும் வாடினார். ஒருநாள் அவருடைய நாடகங்கள் அத்தனையையும் ஒரு மூட்டையாகக் கட்டிச் சுமந்து கொண்டுபோய் ஒரு மளிகைக் கடையில் எடை போட்டு விற்று விட்டார்.

மாளிகைக் கடைக்காரர் ஒவ்வொரு ஏடாகக் கிழித்து பொட்டலம் கட்டும்போது சில பக்கங்கள் அவரது கண்ணில் பட்டது. அற்புதமாக தெரிந்தது. உடனே அவரே ஓடிப் போய் ஒரு பதிப்பாளரிடம் சிபாரிசு செய்தார். அது வரைக்கும் பொட்டலம் கட்டப்படாமல் இருந்த பல நாடகங்கள் அச்சாகி வெளிவந்தது. அதன் பின்னர் அந்த நாடக ஆசிரியருக்கு நல்ல கிராக்கி! ஏகப்பட்ட புகழ் பணம் எல்லாம் வந்து சேர்ந்தது."

"யார் அவர்?"

"அவர்தான் பிரபல நாடக ஆசிரியர் இப்சன்"

"அவர் மாதிரியே நானும் ஒருநாள் பிரபலமாவேன்."

"அதற்கு நேரம் வந்தாச்சு! அதுதான் நான் வந்திருக்கிறேன் உங்கள் படைப்புக்களை வாங்குவதற்கு"

"ரொம்ப நன்றி. நீங்க எந்தப் பதிப்பகம்?"

"பதிப்பகம் இல்லை சேர். பலசரக்குக் கடை"

தென்கச்சி கோ.சுவாமிநாதன்

# யாழ்ப்பாணத்தில் பயிற்சி மையம் ஆரம்பிக்க கணனிகள் அன்பளிப்பு

(கொழும்பு)

யாழ்ப்பாணப் பயிற்சி மையத்தை ஆரம்பிப்பதற்கென, ஐக்கிய அமெரிக்க அரசாங்கம் கணனிகளை நன்கொடையாக வழங்கியுள்ளது.

சர்வதேச அபிவிருத்திக்கான ஐக்கிய அமெரிக்க ஏஜென்ஸி (USAID) கணனிப் பயிற்சி மையம் ஒன்றை நிறுவுவதற்கும், யாழ்ப்பாணத்திலுள்ள இளைஞர் யுவதிகளுக்கு தொழிற் திறமைகளில் பயிற்சி அளிப்பதற்காக யாழ்ப்பாணத்திலுள்ள அகில இலங்கை இந்து மாமன்றத்திடம் கணனிகள் வழங்கப்பட்டது.

புதிய வளங்களைப் பயன்படுத்தி, யாழ்ப்பாணத்திலும் அதைச் சூழ்ந்துள்ள கிராமப் பிரதேசங்களிலும், வசதியற்ற நிலையில் உள்ளோருக்கும் உள்நாட்டில் இடம்பெயர்ந்த மாணவர்களுக்கும், இம் மையம் தகவல தொழில்நுட்ப (IT) திறமைகளில் பயிற்சியை வழங்கும்.

விசேஷமாக , ஊடகத் துறையிலும் சுற்றுலாத்துறையிலும் தொழில் வாய்ப்புக்களை அதிகரிப்பதற்கு இப் பயிற்சி உதவும் என இந்துமாமன்றத்தின் செயலாளர் கந்தையா நீலகண்டன் தெரிவித்தார். (ந-5)

# இரத்த தான முகாம்

(குருநகர்)

குருநகர் தூய பியோ விளையாட்டுக் கழகத்தின் 16 ஆவது நிறைவு விழாவையொட்டி இன்று ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணிக்கு குருநகர் கலாசார மண்டபத்தில் இரத்ததான முகாம் ஒன்று கழகத்தினரின் ஏற்பாட்டில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் கழக அங்கத்தவர்களும் பொதுமக்களும் கலந்து கொண்டு உயிர் காக்கும் உன்னத பணிக்கு உதவுமாறு கேட்கப்படுகின்றனர். (ஓ-39)

# சீரடி சாயி பாபா அவதார தின விழா

(யாழ்ப்பாணம்)

திருநெல்வேலி பகவான் ஸ்ரீ சத்திய சாயி சேவா நிலையத்தில் சீரடி சாயி பாபா அவதார தின விழா நாளை திங்கட்கிழமை நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் காலை 9 மணிக்குசீரடி சாயி சற்சரித இறுதி நாள் வாசிப்பு ஆரம்பமாகி தொடர்ந்து ஹோமம் டாக்டர் ஆர். கணேசமூர்த்தியின் விசேட சொற்பொழிவு பஜனை மங்களராத்தி என்பன இடம்பெறவுள்ளது. (ஓ-3)

# நவராத்திரி விழா

(யாழ்ப்பாணம்)

இராமகிருஷ்ண சமிதியின் நவராத்திரி விழா இன்று ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணிக்கு மானிப்பாய் வீதியில் அமைந்துள்ள சமிதி மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் "நவராத்திரி மகிமை" என்னும் விடயம் பற்றி இணுவில் மத்திய கல்லூரி ஆசிரியர் திருமதி ஈஸ்வரி தர்மலிங்கம் விசேட ஆன்மீக உரையை வழங்கவுள்ளதுடன் பஜனை மற்றும் தீப ஆராதனையும் இடம் பெறவுள்ளது. (ஓ-3)

# சித்திர வித்தியாரம்பம்

(யாழ்ப்பாணம்)

கந்தர்மடம் ஆத்திசூடி வீதியில் இயங்கும் ஐ.ஏ.ரி. சித்திரப் பயிற்சி நிறுவனத்தில் விஜய தசமி நாளான நாளை திங்கட்கிழமை சித்திர வித்தியாரம்பம் நடைபெறவுள்ளது.

எனவே இதில் பயில விரும்பும் தரம் 4ற்கு மேற்பட்ட மாணவர்கள் அன்றைய தினம் பிற்பகல் 3.30 மணிக்கு வருகை தருமாறு நிறுவன இயக்குநர் தெரிவித்துள்ளார்.(6-4)

# வாணிவிழா

(யாழ்ப்பாணம்)

கோப்பாய் தெற்கு றோமன் கத்தோலிக்க தமிழ்க்கலவன் பாடசாலையின் வாணி விழா நாளை மறுதினம் திங்கட்கிழமை 10 மணிக்கு பாடசாலை அதிபர் ச. லலீசன் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் பிரதமவிருந்தினராக யாழ். தேசிய கல்வியியற் கல்லூரி விரிவுரையாளர் பா. பாலகணேசன் கலந்து சிறப்பிப்பதுடன் மாணவர்களின் கலை நிகழ்ச்சிகளும் இடம் பெறவுள்ளது. (6-4)

◆ ◆ ◆ ◆

(யாழ்ப்பாணம்)

காரைநகர் M.E.C கல்வி நிலையத்தின் வாணி விழா நிகழ்வு இன்று ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 2மணிக்கு நடைபெறவுள்ளது.


ஆசிரியர் எஸ்.மோகன்ராஜ் தலைமையில் நடைபெறும் இந்நிகழ்வில் சைவப்புலவர் மா. கணநாதனின் சமயச்சொற்பொழிவும் மாணவர்களின் கலைநிகழ்வுகளும் நடைபெறவுள்ளது. (ஓ-246)

# குடாநாட்டு சந்தைகளில் நேற்றைய விலை விபரம்

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | யாழ்ப்பாணம் | சாவகச்சேரி |
|---|---|---|---|
| 1 Kg | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 60 | 70 | 50 |
| உருளைக்கிழங்கு | 70 | 70 | 70 |
| பச்சைமிளகாய் | 50 | 60 | 40 |
| தக்காளி | 40 | 50 | 30 |
| மரவள்ளிக்கிழங்கு | 20 | 40 | 40 |
| கோவா | 110 | 120 | -- |
| கரட் | 60 | 80 | 80 |
| பூசணி | 30 | 40 | 25 |
| புடோல் | 40 | 50 | 30 |
| வாழைக்காய் | 30 | 40 | 30 |
| சின்ன வெங்காயம் | 50 | 60 | 40-60 |
| பெரிய வெங்காயம் | 35-80 | 80 | 50 |
| பாகற்காய் | 60 | 70 | 40 |
| வெண்டிக்காய் | 30 | 40 | 30 |
| கரணைக் கிழங்கு | 35 | 45 | 50 |
| பயிற்றங்காய் | 50 | 60 | 30 |
| லீக்ஸ் | 70 | 80 | 100 |
| பீற்றூட் | 40 | 50 | 40 |
| கறிமிளகாய் | 30 | 40 | 50 |
| முருங்கைக்காய் | 70 | 80 | 60 |
| கீரை - 1 பிடி | 20 | 20 | 20 |
| தேசிக்காய் | 200 | 220 | 160 |
| தேங்காய் (ஒன்று) | 35 | 30 | 35 |

# புற்றுநோய் பற்றிய உண்மைகள்

## ஆரம்பத்திலேயே நோயைக் கண்டுபிடித்தால் நவீன சிகிச்சைகள் மூலம் குணப்படுத்தலாம்



**புற்றுநோய் பற்றி விளக்கம் தரும் டாக்டர் சி.அனுஷ்யந்தன்**

நீரிழிவு நோய், இதயநோய் போன்று தற்போது புற்றுநோயும் பெரியோர் முதல் சிறியோர் வரை அனைவரையும் ஆட்கொள் கின்ற ஒரு நோயாக உள்ளது.

இதுதொடர்பான எமது கேள்விகளுக்கு விளக்கம் அளிக் கின்றார் மகரகம சுகாதாரப் பிரிவு பரி சோதகர் டாக்டர் சிவப்பிரகாசம் அனுஷ்யந்தன் .

**புற்றுநோய் என்றால் என்ன?**

பொதுவாக மனித உடலில் ஒவ்வொரு நிமிடமும் கோடிக்கணக் கான கலங்கள் பிரிகையடைகின் றன.இந்தக் கலங்களின் பிரிகையை நிற மூர்த்தங்கள் என்று சொல்கின்ற DNA ஆனது கட்டுப்படுத்து கின்றது. இந்த நிறமூர்த்தங்களில் ஏற்படுகின்ற விவகாரங்கள் இதன் தாக்கங்களி னால் இந்த கல பிரிகையானது ஒழுங்கு முறையின்றி அளவுக்கதிகமாகப் பெருகுகின்றது.இவ்வாறு நோக்க மின்றி காரணமின்றி மனித உடலுக்கு தீங்கு விளைவிக்கின்ற நோக்கில் பெரு குகின்ற கலங்களின் கூட்டத்த அல்லது விளைவை நாங்கள் புற்றுநோய் என்று கூறுகிறோம்.

**புற்றுநோய் எவ்வாறு உருவாகுகிறது?**

உருவாகும் இடத்தைப் பொறுத்து அதனை நாம் இரத்தப் புற்றுநோய் என்றும் கட்டிப் புற்றுநோய் என்றும் Solitetumare,lieumia அதாவது கட்டிப்புற்றுநோய் இதற்கு உதாரண மாக மார்பகப் புற்றுநோயைக் குறிப் பிடலாம். ஒரு பெண்ணினுடைய மார் பகங்களில் இருக்கின்ற பால் சுரக்கும் கலங்கள் அல்லது பால் சுரக்கும் கலங்களைச் சூழவுள்ள இழையங்கள் பிரிவடைந்து கட்டிகளை உருவாக்கு கின்றன.இவை காலப்போக்கில் வெளித்தெரிகின்றபோது அது மார்பகப் புற்றுநோயாகப் பரிணமிக்கின்றது.

அதேபோல இரத்தப்புற்றுநோய் மனித எலும்பு மச்சையில் உள்ள கொலனி ஸ்டெமிலேடிங் கலங்கள் என்று கூறப்படுகின்றன. புற்றுநோய் ஆரம்பமாகிறது.

அதாவது பிளாஸ் மார்ஷல் என்ற கலங்கள் பிரிவடைந்து

இரத்த அணுக்களாகவும், சிவப்பு அணுக்களாகவும், வெள்ளை அணுக் களாகவும் குருதி சிறுதட்டுக்களாக வும் பிரிகின்றன. இவை அளவுக் கதிகமாக பிரிகின்றபோது

லிக்யூமி னியா என்கின்ற இரத்தப் புற்றுநோய் சிறுவர்களுக்குக் கூட ஏற்படுகின்றது.

**தற்போது அதிகமாக எவ்வகையான புற்றுநோய் காணப்படுகிறது?**

2005 ஆம் ஆண்டு எடுக்கப்பட்ட தேசியப் புற்றுநோய் வைத்திய சாலையின் மகரகமவில் நடத்தப்பட்ட புள்ளிவிபரத்தின்படி பெண்களுக்கு ஏற்படும் மார்பகப் புற்றுநோயே அதிக அளவில் ஏற்படுவதாகக் கண்டறியப்பட்டுள்ளது. அடுத்ததாக கர்ப்பப்பை, வாய்ப்புற்று, கழுத்துப் புற்றுநோய் காணப்படுகிறது. கலப்புற்றுநோய், வாய்ப்புற்றுநோய், தொண்டைப்புற்றுநோய் இறுதியாக இரத்தப்புற்றுநோய் என்பனவும் ஏற்படத்தான் செய்கிறது.

ஆண்களைப் பொறுத்தவரை வாய்ப்புற்றுநோயும், கலப்புற்றுநோயும், சுவாசப் புற்றுநோயும் அதிகளவில் காணப்படுகின்றது. சிறுநீரகப் பை புற்றுநோயும் பொதுவாக ஏற்படுகிறது.

**நோயைக் கட்டுப்படுத்தும் வழிகள்?**

தற்போதுள்ள நவீன சிகிச்சை களின் படி இந்நோயை மிக ஆரம்ப காலத்திலேயே கண்டறியும் பட்சத்தில் நோயிலிருந்து முழுமையாக சுகம் பெறலாம். குறிப்பாக மார்பகப் புற்றுநோய் ஒரு மார்பகத்திலேயே ஏற்படுகின்ற கட்டியை உடனடியாக மெமோகிராம் என்ற பரிசோதனையைச் செய்து அதன்பிறகு இழையப் பரிசோதனை FNC எனப்படுகின்ற பரிசோதனையைச் செய்து அதன்பின்னர் புற்றுநோய் என உறுதிப்படுத்தினால் அந்த மார்பகத்தை அகற்றுவதன்மூலமோ அல்லது அந்தக் கட்டியை அகற்று வதன்மூலமோ கதிர்ச்சிகிச்சை, ஈமோதெரபி எனப்படுகின்ற இரசாயன சிகிச்சை செய்வதன் மூலமோ நோயிலிருந்து முற்றாகப் பாதுகாத்துக்கொள்ளலாம்.மார்பகப்புற்றுநோய் ஏற்பட்டு 30 வருடங்கள் உயிர்வாழ்ந்தவர்களும் இருக்கிறார்கள் அதேநேரம் ஆண்களிலேயே ஏற்படுகின்ற புரோஸ்டேட் எனப்படுகின்ற சிறுநீரகப் புற்றுநோயை சத்திரசிகிச்சை மூலம் அதனை அகற்றி ஹோர்மோன்களை வழங்குவதன் மூலம் சுகப்படுத்தலாம்.

**கர்ப்பைவாய்ப் புற்று பற்றி...?**

கர்ப்பப்பை வாய், கழுத்து புற்றுநோய் என்பது பொதுவாக 20 வயதிலிருந்து 45,50 வயதுள்ள பெண்களுக்கு உருவாகிறது.

சிறுவயதிலேயே பாலியல் தொடர்பு ஏற்படுத்துவதன் மூலம் ஒரு வகை வைரஸ் தாக்கத்தினால் இவர்கள் உந்தப்படுவதாக தற்போது கண்டறியப்பட்டுள்ளது.

கர்ப்பப்பை வாய் கழுத்து புற்றுநோய் உள்ள பெண்களுக்கு மாதவிடாய்க்கு இடைப்பட்ட காலத்தில் இரத்தம் கலந்த கசிவு ஏற்படுதல்,வெள்ளைநிறமான திரவம் வெளியேறுதல், நாரிப்பிடிப்பு, சாப்பாட்டில் விருப்பின்மை,அடிக்கடி சிறுநீர்த் தொற்று, உடலுறவிற்குப் பின்னர் அவர்களுடைய பிறப்புறுப்பின் வாயில் இரத்தம் வெளியேறுதல் போன்ற அறிகுறிகள் காணப்படுகின்றன.

சூலகப் புற்றுநோய் கர்ப்பப்பை கழுத்து புற்றுநோய் ஏற்பட்டவர்களுக்கு வயிறுவீங்குவதும், வயிற்றில் கட்டிகள் தோன்றுவதும் தான் அறிகுறிகள்.

இது நன்றாக முற்றிய பின்னர்தான் கண்டறியப்படுகின்றன.கர்ப்பப்பை வாய், கழுத்துப் புற்றுநோய் மிக ஆரம்பத்திலேயே கண்டறிவதன் மூலம் மிகத் தரமான சிகிச்சைகளை வ்ழங்கி குறைந்தது 15,20 வருடங்கள் வாழக்கூடியதாக உள்ளது.

**ஒரு பெண் கருத்தரிக்கும்போது இவ்வாறான நோய்கள் கண்டறியப்பட்டால் என்ன செய்வது?**

எந்தக் கர்ப்ப காலத்தில் இது நடக்கிறது என்பதைப் பொறுத்தே இது அமையும்.கர்ப்பம் தரித்து மூன்று மாதத்திற்குள் கண்டறியப்பட்டால் கருவில்இருக்கும் குழந்தையை விட தாய்க்கே முன்னிடம் வழங்கப்படும்.தாயைக் காப்பாற்றுவதில் தான் மருத்துவர்கள் ஈடுபடுவார்கள்.

**ஈமோதெரபி சிகிச்சைக்கு உட்பட்ட பெண்கள் குழந்தை தரிக்கலாமா?**

நிச்சயமாக இந்த சிகிச்சைக்குப் பின் அவர்களுடைய தேகாரோக்கியம் நன்றாக இருக்கும் பட்சத்தில் இரண்டு வருடங்கள் கழித்து குழந்தை தரிக்கலாம்.அதற்கு எந்தத் தடையும் இல்லை.

**இளவயதில் மார்பகப்புற்று ஏற்பட்டால் அப் பெண் திருமணம் செய்யலாமா?**

ஆரம்ப காலத்திலேயே ஒரு பெண்ணிற்கு மார்பகப் புற்றுநோயைக் கண்டறிந்தால் இப்போதிருக்கும் அதிநவீன சத்திரசிகிச்சைகள் மூலம் அவருடைய மார்பகங்களை அகற்றாமலேயே சிகிச்சை வழங்க முடியும்.முற்றிய பின் கண்டறியப்பட்டால் மார்பகத்தை அகற்றத்தான் வேண்டும். கட்டி அகற்றப்பட்ட பெண் திருமணம் முடிக்கலாம், தாம்பத்திய வாழ்க்கை யிலும் ஈடுபடலாம்.ஆனால் குழந்தை பிறப்பில் இப்போது முரண்பாடு நிலவுகிறது.அப் பெண்களுக்கு புரிந்துணர்வுடைய கணவன் கிடைத்தால் பிரச்சினை ஏற்படாது.

**ஆண்களுக்கு எவ்வாறான புற்றுநோய் பொதுவாக ஏற்படுகிறது?**

பெரும்பாலும் சிறுநீர்ப் பையின் கீழ்ப் பகுதியில் உள்ள கழுத்துப் புற்றுநோய், சுவாசப்புற்றுநோய் என முக்கியமானவைகள். இவை தவிர வாய்,தொண்டை என்பனவும் அடங்கும். பெரும்பாலும் இவர்கள் மதுபானம், புகைத்தல்,வெற்றிலை மெல்லுதல் போன்ற பழக்கவழக்கத்தால் வீணாக அவர்களே விலைகொடுத்து வாங்குகிறார்கள்.ஒவ்வொரு மனிதனும் தன்னுடைய பழக்கவழக்கங்களை சீரான முறையில் பேணினால் வாழ்க்கை சிறப்புறும்.

**இலங்கையில் இந்நோய்க்கான வைத்தியசாலைகள் எங்கே உள்ளன?**


1950 ஆம் ஆண்டு நிறுவப்பட்டதுதான் மகரகம வைத்தியசாலை.பின்னர் அனுராதபுரம்,கண்டி,பதுளை, யாழ்ப்பாணம், குருநாகல்,காலி,காரகப்பிட்டிய போன்ற சிகிச்சை வழங்குகிற உப நிலையங்கள் நிறுவப்பட்டுள் ளன.

மக்கள் இந் நோயைத் தவிர்த்துக்கொள்ள எப்போதும் அகமகிழ்ச்சியாக இருக்கவேண்டும்.பணம்தேடுவதோ, பொருள்தேடுவதோ பெரிதல்ல.

மனதை மகிழ்ச்சியாக வைத்துக்கொள்ளுங்கள்.

> **“இந்நோயைத் தவிர்த்துக் கொள்ள எப்போதும் அக மகிழ்ச்சியாக இருக்கவேண்டும். பணம் தேடுவதோ பொருள் தேடுவதோ பெரிதல்ல. மனதை மகிழ்ச்சியாக வைத்துக்கொள்ளுங்கள். எந்த நோயும் அண்டாது.”**

# திரை விமர்சனம்



நட்சத்திரங்கள்:கமல்ஹாசன், மோகன்லால், லட்சுமி, ஸ்ரீமன் மற்றும் பலர்
இயக்குநர் -சக்ர டோலேட்டி


கலைப்படமாக இருந்தாலும் கொலைப்படமாளக இருந்தாலும் மக்களுக்கான படமாக இருக்கவேண்டும்...மக்களைப் பிரதிபலிக்கும் படமாக இருக்கவேண்டும்.அவையே மக்களின் வரவேற்பைப் பெறும். இதுதான் நல்ல சினிமாவுக்கான பார்முலா.அதை கமல்ஹாசன் இந்த முறை முயன்று பார்த்து ஜெயித்தும் காட்டியிருக்கிறார்.

" தீவிரவாதத்தின் விளைவுகள் உடனடியாக மக்களைத் தாக்குகின்றன...' ஆனால் அந்தத் தீவிரவாதத்தைத் தந்தவர்களுக்கோ தண்டனைகள் தாமதமாக, வலிக்காமல் வழங்கப்படுகின்றன. தீவிரவாதத்துக்கு உடனடி தண்டனை தீவிரவாதமே..."என்ற ஒரு தனி மனிதனின் கோபம்தான் "உன்னைப் போல் ஒருவன்"

பொதுஜனங்களுள் ஒருவரான கமல்ஹாசன் பல நாள் முயன்று, ஒரு சுப நாளில் வெடிகுண்டு தயாரித்து முடிக்கிறார். ஒருநாள் காலை அவற்றைக் கருப்புப் பைகளில் வைத்து காவல் நிலையம்,ரயில்நிலையம், ஷொப்பிங் மகால் என நகரின் முக்கிய பகுதிகளிளெல்லாம் வைக்கிறார். பின்னர் கூலாக கடைவீதிக்குப் போய் மனைவி போட்டுக்கொடுத்த பட்டியலில் உள்ள காய்கறிகள் வாங்கிக்கொண்டு, பாதி கட்டி முடித்த ஒரு கட்டடத்தின் உச்சிக்குப் போகிறார்.ஒரு பலகையை விரித்துப் போட்டு, கையோடு கொண்டு வந்திருக்கும் அத்தனை கம்ப்யூட்டர் சாதனங்களையும் பரப்பி, அசெம்பிள் செய்து, நிதானமாக மாநகர காவல்துறை கமிஷனர் மோகன்லாலுக்கு போன் செய்கிறார்.தான் குண்டு வைத்திருக்கும் விபரங்களை தெளிவாகச் சொல்கிறார்.

அடுத்த நொடி கமிஷனர் அலுவலகம் பரபரப்பாகிறது. முதல்வர் லைனில் வருகிறார். உள்துறைச் செயலாளர் லட்சுமி,கமிஷனர் அலுவலகத்துக்கு வரழைக்கப்படுகிறார். தீவிரவாத பேரம் ஆரம்பிக்கப்படுகிறது. வைத்திருக்கும் குண்டுகள் வெடிக்காமல் இருக்க மும்பை, கோவை,அசாம் என பல இடங்களில் ஆயிரக்கணக்கான மக்கள் உயிரைக்குடித்த குண்டு வெடிப்புகளுக்குக் காரணமான நான்கு படு பயங்கர தீவிரவாதிகளை விடுவிக்கச் சொல்லி நிபந்தனை விதிக்கிறார் கமல். வேறு வழியில்லை... நிலைமையின் தீவிரம் புரிந்து தீவிரவாதிகளை விடுவிக்க ஒப்புக்கொள்கிறது அரசு.அதேநேரம் கமல்ஹாசனின் இந்த செயலுக்கான பின்னணி, அவர் இருக்கும் இடத்தையும் காண முயற்சிக்கிறார் கமிஷனர். கமல ஹாசனின் நிபந்தனைப்படி தீவிரவாதிகள் நால்வரும் விடுவிக்கப்படுகிறார்கள். ஆனால் அவர்களில் ஒருவனை மட்டும் உடன்செல்லும் அதிரடிப்படை அதிகாரி திடீரென பிடித்துக்கொள்ள மற்ற மூவரும் தப்பித்து அங்கு நிறுத்தப்பட்டுள்ள ஜீப்பில் ஏறுகிறார்கள். அடுத்த நொடியில் ஜீப் வெடித்துச் சிதற அதிர்ச்சியில் உறைந்துபோகிறது காவல்துறை. அந்த நான்காவது நபரையும் கொல்லவேண்டுமென கமலிடமிருந்து அடுத்த போன் வருகிறது. தொடரும் விவாதங்கள், மிரட்டல்களுக்குப் பிறகு அந்த நான்காவது தீவிரவாதியும் கொல்லப்படுகின்றான். என்னநடந்தது? ஏன் விடுவிக்கப்படும் தீவிரவாதிகள் கொல்லப்படுகிறார்கள் என்பது க்ளைமாக்ஸ்.

## உன்னைப் போல் ஒருவன்





மாற்றங்களை உணர்ந்து மாறிக்கொள்பவனே நல்ல கலைஞன் என்பார்கள். அதைத்தான் இந்த முறை கமல் முயற்சித்திருக்கிறார். பெரும்பாலும் தன்னை பின்னுக்கு நகர்த்திக்கொண்டு மோகன்லாலையே பிரதானப்படுத்தியிருக்கிறார் கமல். படத்திற்கு பக்கபலமாக அமைந்து மிரட்டலாக இருக்கிறது இசை. ஒவ்வொரு பிரேமிலும் ஸ்ருதி ஹாசனின் இசை அவரை கமலின் வாரிசு என்பதை மெய்ப்பிக்கத் தவறவில்லை.எந்த வம்பு தும்பிலும் சிக்காமல் படமெடுத்திருக்கும் இயக்குநர் சக்தி டோலோட்டியின் இயக்கத்தில் வேகமும் விவேகமும் கலந்து கட்டி கலக்கியிருக்கிறது. சில காட்சிகளில் பயத்தில் நம் வயிறும், க்ளைமாக்ஸில் கண்களும் சேர்ந்து கலங்குவது இப்படத்தின் பெரும் பலம்!

உன்னைப்போல் ஒருவன்: ***நம்மில் ஒருவன்! நம் "உள்" ஒருவன்!! நாம் எல்லோரும் பார்க்க வேண்டிய ஒருவன்!!!***


## கிரிமினலா யோசிச்சேன் - ஈரம் பற்றி ஆதி



ஈரம் படம் ஹிட் ஆகியிருக்கும் குஷியில் இருக்கிறார் நடிகர்ஆதி.மிருகம் படத்தில் மிருகத்தனமாக நடந்துக்கிட்ட பையனா இது? என்று ஈரம் படத்தைப் பார்ப் பவர்கள் கேட்கும் அளவுக்கு நடிப்பில் அசத்தி யிருக்கிறார் ஆதி.

ஈரம் படத்தில் நடித்த அனுபவம் குறித்து அவர் கூறுகையில் , ஈரம் என்னோட இன்னொரு முகத்தை வெளிப்படுத்தியிருக்கு. படத்துல எனக்கு பொலிஸ் அதிகாரி கேரக்டர் என்றதும், வழக்கமான தமிழ் சினிமா பொலிஸ் மாதிரி வேண்டாம்னு முடிவு பண்ணினோம். நானும், இயக்குநர் அறிவழகனும் எங்க குடும்ப நண்பரான டி.ஜி.பி.ஒருவரை சந்திச்சோம். அவரிடம் கதையை சொல்லி, எப்படி விசாரணை பண்ணுவீங்கனு கேட்டதும், அவர் நிறைய விடயங்களை சொன்னார். பொலிஸ்காரன் எப்போதும் கிரிமினலாத்தான் யோசிக்கனும் என்று சொன்னார்.அவர் சொன்ன சில ஐடியாக்களை வைத்துக் கொண்டு கதை பண்ணினார் இயக்குநர். அதுக்கு பின்னர் எப்படி நடிக்கனும்ங்கிறதையெல்லாம் அறிவழகன்தான் சொல்லிக் கொடுத்தார். நானும் படம் முழுக்க நிஜமான பொலிஸ் அதிகாரி மாதிரி கிரிமினலா யோசிக்கிற மாதிரி நடிச்சேன்: இன்னிக்கு என்னோட கேரக்டர் பேசப்படுது. சந்தோஷமா இருக்கு என்றார்.

## எந்திரன் க்ளைமாக்ஸ்...
## ரஜனி பங்கேற்கும் நெருப்புச் சண்டை



எந்திரன் படத்தில் கிளைமாக்ஸ் காட்சி மிக இரகசியமாக படமாக்கப்பட்டு வருகிறது. படத்தின் இறுதியில் இடம் பெறும் நான்கு நிமிட நெருப்பு சண்டைக் காட்சி. சென்னை பிரசாத் ஸ்டூடியோவில் நடைபெற்றுவருகிறது. பிரமாண் டமாக அமைக்கப்பட்ட விஞ்ஞான ஆய்வுகூடம் ஒன்று தீ வைத்துக் கொளுத்தப்படுவது போலவும் அதில் ரஜனியின் சண்டை இடம்பெறுவது போலவும் இந்தக் காட்சி படமாக்கப்பட்டது.

அத்துடன் எந்திரன் கிராபிக்ஸ் குழு என்ற ஹொலிவுட் நிறுவனம் தேவைக்கேற்ப கிராபிக்ஸ் காட்சிகளை அதனு டன் இணைத்து பிரமாண்டப்படுத்தப்பட உள்ளது. ஜோர்ஜ் லூகாஸ் என்பவரால் ஹொலிவுட்டில் அறிமுகப் படுத் தப்பட்ட உத்தி இது. இந்தியப்படம் ஒன்றில் இந்தத் தொழில் நுட்பம் பயன்படுத்தப்படுவது இதுவே முதல்முறை.

இந்தக் காட்சிகள் படமாகும் போது ரஜினிக்கு கொஞ்ச நேர வேலைதான் என்றாலும், நாள் முழுவதும் படப்பிடிப்பை அருகிலிருந்து கவனித்து வருகிறார்.

## அக்ஷன் ஹீரோவாகிறார் சீமான்



புரட்சியான கருத்துக்களை தைரியமாக சொல்லி சர்ச்சையில் சிக்கிக்கொள்ளும் சீமான் கடைசியாக நடித்த படம் மாயாண்டி குடும்பத்தார். இப்படத்தைத் தொடர்ந்து உத்தரவு என்ற படத்தில் நடிக்கவுள்ளார் சீமான்.

மனோஜ் குமார் இயக்கும் இப்படத்தில் சீமானுக்கு ஜோடியாக முன்னணி நடிகை ஒருவர் நடிக்கவிருக் கிறார் .

மேலும் நாசர் , கஞ்சா கருப்பு, சிங்கம்புலி, சாந்தி வில்லியம்ஸ் , சிங்கமுத்து, சாந்தினி உள்ளிட் டோரும் நடிக்கிறார்கள். வில்லன் பாத்திரத்தில் இயக்குநர் மனோஜ்குமார் நடிக்கிறார்.படத்தில் சீமான் முற்றிலும் வித்தியாசமான அக்ஷன் ஹீரோவாக நடிக்கவுள்ளார்.

## உன்னைப்போல் ஒருவன்...
## கமலை வாழ்த்திய ரஜினி



கமல் நடித்து வெளியாகியுள்ள உன்னைப் போல் ஒருவன் படத்தை சூப்பர் ஸ்டார் ரஜினி பார்த்து ரசித்தார்.ஏவிஎம் வளாகத்தில் உள்ளஏசி திரைய ரங்கில் ரஜினிக்கான பிரத்தியேக காட்சிக்கு ஏற்பாடு செய்திருந்தார் கமல். ஒரிஜினல் படத்துக்கு மரியாதை செய்யும் விதத்தில் கமல் இந்தப் படத்தை எடுத்திருப் பதாக இடைவேளையின் போது கருத்துப் பகிர்ந்து கொண்டார் ரஜினி. ரஜனி படம் பார்த்துக் கொண்டி ருக்கும்போதே வந்துவிட்ட கமல் வெளியில் காத்தி ருந்தார். படம் முடிந்துவெளியில் வந்தவர் கமலை நோக்கி வேகமாகப் போய் கட்டிப் பிடித்துக்கொண்டார். " ஃபன்டாஸ்டிக் கமல்... அருமையா வந்திருக்கு படம். என்னுடைய வாழ்த்துக்கள்!" என ஆத்மார்த்தமாக வாழ்த்த,கமல் முகத்தில் பரவசம்.

## காதல் காட்சிகளில் சிரமப்பட்ட நடிகர்


தைரியம் என்ற திரைப்படத்தில் நடிகை கார்த்திகாவுடன் புதுமுகம் குமார் இணைந்து நடிக்கிறார். இவர் ஒரு தொழிலதிபர். முதன்முறையாக திரைப்படத் தயாரிப்பிலும் நடிப்பிலும் இறங்கியுள்ளார்.



இவருக்கு நடிப்பு சம்பந்தமான எந்தவித அனுபவமும் இல்லாத தால் இவர் காதல் காட்சி களில் நடிக்கும்போது மிகவும் கஷ்டப்பட் டே நடிக்கிறார்.

காதல் உணர்ச் சிகளை வெளிக் காட்டும் காட்சி களில் 21 முறை மாறி மாறி எடுத்திருக்கி றார்கள்.


அப்படியும் அவர் சரி யாக நடிக்க வில் லையாம்.கடைசியில் ஒருவழியாக காட்சி யை எடுத்து முடித்திரு க்கிறார்கள்.



ரேகா -மீராநந்தன்
படம்:- காதலுக்கு மரணமில்லை

# ஈழத் தமிழர்கள் போருக்குப் பின்பும் இன்னல்படுவது கண்டிக்கத்தக்கது

## வைகோ கண்டனம்



(சென்னை)

இலங்கையில் போருக்கு பின்பும் தமிழர்கள் இனப் படுகொலைக்கு ஆளாகி வருகிறார்கள். இது மிகவும் கண்டிக் கத்தக்கது என்று ம.தி.மு.க. பொதுச் செயலாளர் வைகோ டெல்லியில் ஈழத்தமிழர் ஆதரவாளர்கள் சார்பில் நடைபெற்ற க்ருத்தரங்கில் கலந்துகொண்டு உரையாற்றுகையில் தெரி வித்துள்ளார்.

இலங்கை தமிழர்களுக்கு எதிரான இனப்படுகொலையை நிறுத்த வேண்டும் என்ற தலைப்பில் டெல்லியில் ஈழத்தமிழ் ஆதரவாளர்கள் சார்பில் கருத்தரங்கும் நடைபெற்றது. இதில் உரையாற்றி வைகோ தெரிவித்ததாவது,

இலங்கையில் போருக்கு பின்பும் தமிழர்கள் இனப்படுகொலைக்கு ஆளாகி வருகிறார்கள். ஈழத் தமிழர்களின் இந்த நிலை பற்றி தேசிய அளவில் விழிப்புணர்வை ஏற்படுத்த ஈழ ஆதரவாளர்கள் திட்டமிட்டுள்ளனர்.

இலங்கையில் ஆயிரக்கணக்கான தமிழர்கள் முள்வேலி முகாம்களில் பல்வேறு சித்திரவதைக்கு உள்ளாக்கப்படுகின்றனர். அவர்களை மீட்டு பூர்வீகக் குடியிருப்புகளுக்கு பாதுகாப்புடன் அனுப்பி வைக்க வேண்டிய பொறுப்பு சர்வதேச சமூகத்திற்கு உண்டு. மத்திய அரசு உடனடியாக இதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும்.

இலங்கைக்கு பாராளுமன்ற குழுவை அனுப்ப வேண்டும் என்று பிரதமரிடம் தி.மு.க. கூட்டணி எம்.பிக்கள் விடுத்த கோரிக்கை கண்துடைப்பு நாடகம் அதை மக்கள் நம்ப மாட்டார்கள்.

ஈழத் தமிழர் நிலைமை பற்றி அமெரிக்காவை சேர்ந்த சமூக ஆர்வலர் எளின்சாந்தர் நேரில் நடத்திய ஆய்வு குறித்து இந்திய மக்களுக்கு விளக்க விருப்பம் தெரிவித்தார். ஆனால் அவருக்கு வழங்கப்பட்ட விசாவை திடீரென்று மத்திய அரசு ரத்து செய்து விட்டது. இது மிகவும் கண்டிக்கத்தக்கது என்று தெரிவித்தார். (ஓ-6)

# இலங்கை போரில் அனாதையான குழந்தைகளை தத்தெடுப்பேன்

## தமிழக நீதிக் கட்சித்தலைவர் ஏ.சி. சண்முகம்



இலங்கைப் போரில் அநாதையான குழந்தைகளை தத்தெடுப்பேன் என்று நீதி கட்சித் தலைவர் ஏ.சி.சண்முகம் கூறியுள்ளார். தமிழக நீதிக்கட்சித் தலைவர் ஏ.சி.சண்முகம் தனது 58 ஆவது பிறந்த நாளை நேற்று முன்தினம் கொண்டாடினார். இதனை யொட்டி அவர் தெரிவிக்கையில், இலங்கையில் தமிழ்மக்கள் படும் வேதனையின் காரணமாக இந்த ஆண்டு பிறந்த நாளை எளிமையாகக் கொண் டாடும்படி நிர்வாகிகளிடம் கேட்டுக்கொண்டுள்ளேன்.

இலங்கையில் சிங்கள இராணுவத் தாக்குதலில் அநா தையான குழந்தைகளைத் தத்தெடுத்து வளர்க்க திட்டமிட்டுள் ளேன். எத்தனை குழந்தைகளானாலும் ஏற்றுக்கொள்வேன். அனைவரையும் படிக்கவைத்து வேலை வாய்ப்பு வழங்குவேன். (ஓ-6)

# தமிழக முகாம்களில் ஈழ அகதிகள் சட்டத்திற்கு புறம்பாக நடத்தப்படுகின்றனர்

## உயர் நீதிமன்றில் வழக்கு தாக்கல்

இலங்கையில் இருந்து அகதிகளாக தமிழகம் வந்துள்ளவர்கள் முறையாக பதிவு செய்த பின்னரும் அவர்களை சுதந்திரமாக நடமாடவிடாமல் முகாம்களில் அடைத்து வைத் துள்ளனர் என்றும், அவர்களை முகாம்களில் இருந்து விடுவிக்க வேண்டும் என்றும் சென்னை உயர் நீதிமன்றத்தில் வழக்குத் தொடரப்பட்டுள்ளது.

இளந்தமிழர் இயக்கம் சார்பில் அதன் ஒருங்கிணைப்பாளர் அருணபாரதி இந்த வழக்கைத் தொடர்ந்துள்ளார்.

இலங்கை நாட்டின் உள்நாட்டின் போர் காரணமாக அகதிகளாக தமிழ் நாட்டிற்கு வந்துள்ள ஈழ அகதிகள் தமிழகம் முழுவதிலு முள்ள 117 முகாம்களில் அடைத்து வைக்கப் பட்டுள்ளனர். ஐ.நாவின் அகதிகளுக்கான நடைமுறை விதிகளின் படி நடத்தாமல், கைதிகள் போல முகாம்களில் இவர்கள் அடைத்து வைக்கப்பட்டுள்ளனர் என்று தனது மனுவில் அருணபாரதி கூறியுள்ளார்.

எந்த ஒரு முகாமிலும் அவர்களுக்கு உரிய வசதிகள் செய்து தரப்படவில்லை. மோசமான சூழலிலேயே அவர்கள் அடைத்து வைக்கப்பட்டுள்ளனர். அப்படி அவர்களை அடைத்து வைத்திருப்பது இந்திய அரசமைப் பின் 14 மற்றும் 21 பிரிவுகளுக்கு எதிரானதா கும் என்றும், சட்டப்படி தங்களைப் பதிவு செய்த பின்னரும் அவர்களை சுதந்திரமாக வாழ அனுமதிக்காமல் கைதிகளைப் போல நடத்தப்படுகிறார்கள் என்றும் கூறியுள்ளார்.

இந்தியாவில் பர்மா, திபெத் அகதிகள் கூட உள்ளனர். ஆனால் அவர்களுக்கு எல்லா வசதிகளும் உள்ளது. முறையாக நடத்தப்படு கின்றனர். ஆனால் ஈழத் தமிழ் அகதிகள் மட்டும் பயங்கரவாதிகளாக சித்தரித்து மத்திய, மாநில அரசுகள் நடத்துகின்றன என்று அம்மனுவில் கூறப்பட்டுள்ளது.


எவ்வித வழக்குகளும் இன்றி சந்தேகத் தின் பேரில் பல ஈழத் தமிழர்களை செங்கல் பட்டு மற்றும் பூவிருந்தவல்லி முகாம்களில் அடைத்து வைத்துள்ளனர். இவர்கள் மீது எந்த குற்றமும் சாற்றப்படவில்லை. வழக்கும் பதிவு செய்யப்படவில்லை.

ஆனால் சட்டத்திற்குப் புறம்பாக அடைத்து வைக்கப்பட்டுள்ள இவர்களுக்கு சட்ட நிவார ணம் பெறவும் வழியில்லாத நிலை உள்ள தென அம்மனுவில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

தமிழ் நாட்டிலுள்ள ஈழ அகதிகள் முகாம்க ளின் நிலை குறித்து ஆய்வு செய்த மனித உரிமை அமைப்புகள் கோவை சட்டக் கல் லூரி மாணவர்கள் தமிழக சட்டப் பேரவை உறுப்பினர் ரவிக்குமார் ஆகியோர் வெளி யிட்ட அறிக்கைகளும் இம்மனுவுடன் இணைத்து தாக்கல் செய்யப்பட்டுள்ளது. (ஓ-6)

# இலங்கை கடற்படையினரிடமிருந்து தமிழக மீனவர்களை பாதுகாக்க அவர்களுக்கு ஏ.கே.47 வழங்க வேண்டும்

## பா.ம.க. நிறுவுனர் ராமதாஸ்



இலங்கை இராணுவத்திடம் இருந்து தமிழக மீனவர்களுக்கு பாதுகாப்பு அளிக்க அவர்களுக்கு எந்திரத் துப்பாக்கி வழங்குவ தைத் தவிர வேறு வழியில்லை என்றும் இது குறித்து தமிழக அரசு உடனடியாக பரிசீலித்து நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் பா.ம.க நிறுவனர் ராமதாஸ் கூறியுள்ளார்.

வேலூரில் செய்தியாளர்களிடம் பேசிய அவர் தெரிவித்ததாவது, இலங்கைத் தமிழர் கள் பிரச்சினை தமிழக மீனவர்கள் பிரச்சினை என தமிழக உரிமைகள் சம்பந்தமான எந்த பிரச்சி னையிலும் முதலமைச்சர் கருணாநிதி மத்திய அரசுக்கும் பிரதமருக்கும் கடிதம் எழுது வதையே வாடிக்கையாக கொண்டிருக்கிறார்.

கடந்த 3 ஆண்டுகளில் இதுபோல அவர் குறைந்தது 30 முறையாவது கடிதங்களை எழுதியிருப்பார். இப்படி கடிதங்கள் எழுதி அவர் சாதித்தது என்ன என்பதை அவர் தான் விளக்க வேண்டும்.

தமிழக மீனவர்கள் மீது இலங்கை இராணு வம் தொடர்ந்து தாக்குதல்களையும் துப்பாக் கிச் சூடுகளையும் நடத்தி வருகிறது. போர் முடிந்த பிறகும் தமிழக மீனவர்கள் மீதான இலங்கை இராணுவத்தின் தாக்குதல்கள் தொடர்கதையாகியுள்ளன. தமிழக மீனவர் கள்தாக்கப்படும்போது நமது எல்லையில் உள்ள இந்திய கடற் படையோ கடலோர காவல் படையோ இது வரை எந்த நடவடிக் கையும்எடுக்கவில்லை அது ஏன் என்றும் புரி யவில்லை.

எனவே நமது மீனவர்களின் பாதுகாப்புக்குஅவர்களுடன் நமது காவலர்களுக்கு எந்திரத் துப்பாக்கி களை கொடுத்தனுப்பி தமிழக மீனவர்களை பாதுகாக்க வேண்டும். அல்லது மீன்பிடிக்கச் செல்லும் மீனவர்களுக்கு ஒவ்வொரு படகுக் கும் ஏ.கே. 47 போன்ற ஒரு எந்திரத் துப்பாக்கி எடுத்துச் செல்ல மீனவர்களுக்கு அனுமதி வழங்க வேண்டும்.

நமது மீனவர்களை பாதுகாக்க இதைத் தவிர சேறு வழியில்லை .தமிழக அரசு இதனை உடனடியாக பரிசீலிக்க வேண்டும். தமிழர் களை பாதுகாக்க மத்திய அரசு ஒன்றும் செய் யாது. டெல்லியியில் அதிகார பீடத்தில் இருப் பவர்கள் தமிழர்களுக்கு எதிரானவர்களாக இருக்கிறார்கள் என்று ராமதாஸ் கூறினார். (ஓ-6)

# ஈழத்தமிழர்களை விடுவிக்கக் கோரி மதுரையில் உண்ணாவிரதம்



இலங்கை வவுனியா முகாம்களில் அடைத் துவைத்துள்ள தமிழர் களை விடுவிக்கக் கோரி அனைத்திந்திய இளை ஞர் பெருமன்றம் சார்பில் மதுரையில் வெள்ளிக் கிழமை உண்ணாவிரதப் போராட்டம் நடைபெற் றது.

முகாம்களில் அடைத்து வைத்துள்ள தமிழர்களை அவர்களின் வாழ்விடங்களுக்கு விரைவில் அனுப்பி வைக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என இந்திய அரசையும் இந்தப் போராட்டத்தில் ஈடுபட்டோர் வலியுறுத்தினர்.

உண்ணாவிரதத்தை உயர் நீதிமன்ற மதுரைக் கிளை வழக்கறிஞர்கள் சங்கச் செயலர் சாமிதுரை தொடங்கி வைத்தார். மாணவர் பெருமன்றத்தில் மாநிலச் செயலர் வெங்கட்ராமன் தலைமை வகித்தார்.

தமிழர் தேசிய இயக்கப் பொருளாளர் பரந் தாமன் உண்ணாவிரதத்தை முடித்து வைத்தார். மதுரை நகர் புறநகர் பகுதிகளில் இருந்து அனைத்திந்திய மாணவர் பெரு மன்றம் சார்பில் ஏராளமானோர் பங்கேற்றனர். (ஓ-6)

பாரதச் செய்திகள்

# ஐந்து பேர் தங்கும் சிறையில் 200 பேர் ; இலங்கை கடற்படையினர் சித்திரவதை

## தமிழக மீனவர்கள் வேதனை

(மண்டபம்)

ஐந்து பேர் தங்கும் சிறையில் 200 தமிழர்களை அடைத்து இலங்கை கடற்படை சித்திரவதை செய்ததாக இந்தியா திரும்பிய மீனவர்கள் தெரிவித்தனர். கடந்த 16 ஆம் திகதி இராமேஸ்வரம் மீனவர்கள் 21 பேர் ஐந்து படகில் மீன்பிடிக்க கடலுக்குச் சென் றனர்.

இவர்கள் தனுஷ்கோடி கச்சதீவு இடையில் மீன்பிடித்துக் கொண்டிருந்த போது அங்கு வந்த இலங்கை கடற்படையினர் தமிழக மீனவர்கள் 21 பேரையும் கைது செய்து அனுராதபுரம் சிறையில் அடைத்தனர். தண்டனை முடிந்து விடுதலை செய்யப்பட்ட மீனவர்கள் நேற்று முன்தினம் படகு மூலம் தமிழகம் வந்தனர்.

விடுதலை செய்யப்பட்ட மீனவரில் ஒரு வரான ஆறுமுகம் கூறுகையில், "ஐந்து பேர் மட்டுமே தங்கக்கூடிய அறையில் 200 பேரை அடைத்தனர்.

எங்களுடன் இலங்கை தமிழர்களும் இருந்தனர். புலிகளுக்கு ஆதரவாக இருந்த தாக கூறி இலங்கை தமிழர்கள் 5 ஆயிரம் பேரை இலங்கை இராணுவம் சிறையில் அடைத்துள்ளது.

எங்களுடன் அவர்களையும் சாப்பாடு, கழிப்பறை வசதி இல்லாமல் மிகவும் துன் புறுத்தினர். பல்வேறு சிரமங்களுக்கு மத்தி யில் நாட்களை கடத்தி தமிழகம் திரும்பி னோம் என்றார். (ஓ-6)

# வாய்க்கால் அமைக்கும் பணிகளால் சங்கரத்தை மக்கள் பெரும் அவஸ்தை



(யாழ்ப்பாணம்)

வலிமேற்கு பிரதேச செயலகத் திற்குட்பட்ட வட்டுக்கோட்டை சங்க ரத்தைப் பகுதியில் திடீரென வீதியின் ஒருபக்க கரைப் பகுதியில் நீண்ட தூரத்திற்கு அகழப்பட்டுள்ள வாய்க் காலில் அப்பகுதி மக்கள் பெரும் அவஸ்தைக்கு உள்ளாகியுள்ளனர்.

உலக உணவுத் திட்ட நிவார ணம் பெறும் மக்களைக் கொண்டு எந்தவித முன்திட்டமிடனும் சீரான வடிகால் அமைப்பும் இன்றி அமைக் கப்பட்டுள்ள இவ் வாய்க்காலினால் நீர் வடிந்து ஓடக்கூடிய எந்தச் சூழ் நிலையும் காணப்படவில்லை.

இவ் வேலைத் திட்டத்தை மேற் கொண்டபோது அப் பகுதியில் வசித்த மக்கள் தமக்கு இடையூறாக உள்ள இவ் வாய்க்கால் அமைக்கும் பணியை நிறுத்துமாறு கோரிய போதும் தமக்கு அதிகாரிகள் வழங் கிய பணிப்பின் பேரிலேயே இவ் பணியை மேற்கொள்வதாக வாய்க் கால் அமைக்கும் பணியில் ஈடுபட்ட மக்கள் தெரிவித்தனர்.

பருவமழை ஆரம்பிக்கவுள்ள சூழ்நிலையில் எந்தவொரு வடிகால் அமைப்பும் இன்றி சீரான முறை யில் பல ஆண்டுகளாக நீர் வடிந் தோடிய இவ்வீதியில் திட்டமிடல் இன்றி அகழப்பட்டுள்ள இவ் வடிகா லினால் நீர் தேங்கி நின்று மக்க ளுக்கு பல்வேறு அசௌகரியங் களை ஏற்படுத்தவுள்ளது.

எனவே இவ்வாறான வேலைத் திட்டங்களை மேற்கொள்கின்ற போது பிரதேச மக்களுக்கு இடை யூறு இன்றி மேற்கொள்வதற்கும் அகழப்பட்டுள்ள வாய்க்காலின் நிலையை நேரில் சென்று பார்வை யிட்டு மக்களின் தேவைகளை நிறைவு செய்வதற்கும் வலி மேற்கு பிரதேச செயலர் மற்றும் அதிகாரி கள் நடவடிக்கை எடுக்க வேண் டுமென பொதுமக்கள் வேண்டிக் கொள்கின்றார்கள். (ஓ-27)

## பாம்புக் கடிக்கு இலக்காகிய குடும்பஸ்தர்

துப்புரவுப் பணியில் ஈடுபட்டுக் கொண்டிருந்த குடும் பஸ்தரை பற்றையினுள்ளிருந்த புடையன் பாம்பு தீண்டிய நிலையில் யாழ். போ தனா வைத்திய சாலையில் அனும திக்கப்பட்டுள்ளார். உடுவிலில் வசித்து வருகின்ற இ.ரவிக்குமார் (வயது 48) என்பவரே பாம்புக்கடிக்கு இலக்கானவராவார். குறித்த நபர் நேற்று மானிப்பாயில் உள்ள வீடொ ன்றில் வேலை செய்து கொண்டிரு ந்தபோது பற்றையில் இருந்து வந்த நீளமான பாம்பு இவரது கைகளில் கடித்துள்ளதாகவும் அப் பாம்பினை மண்வெட்டியால் வெட் டியதால் பாம்பு இறந்துள்ள தாகவும் பிரஸ்தாப குடும்பஸ்தர் யாழ். போத னா வைத்தியசாலையில் அதிதீவிர சிகிச்சைப் பிரிவில் அனுமதிக்கப்பட் டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகி றது. (ஓ-30)

## சர்வதேச சிறுவர் தினத்தை முன்னிட்ட போட்டிகள்

(அல்வாய்)

சர்வதேச சிறுவர் தினம் எதிர் வரும் ஒக்டோபர் மாதம் முதலாம் திகதி அனுஷ்டிக்கப்பட இருப்பதால் ஒவ்வொரு பிரதேச செயலாளர் பிரிவிலும் நிகழ்ச்சிகள் நடத்தப்பட வுள்ளது.

எனவே "வெற்றி பெற்ற தேசத் தில் சிறுவர்களை கட்டியெழுப்பு வோம்" என்ற கருப்பொருளை மையமாகக் கொண்டு சிறுவர்களது உரிமைகள், அவற்றைப் பாதுகாத் தில் என்பவற்றை பிரதிபலிக்கும் வகையில் மாணவர்களிடையே கட்டுரை, கவிதைப் போட்டிகளை நடத்தத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

இந்நிகழ்ச்சிகள் பிரதேச கல்விப் பணிப்பாளரின் ஒத்துழைப்புடன் நடத்துவது சிறந்ததாகையால் பிர தேச கல்விப் பணிப்பாளரினால் பாடசாலை மாணவரிடையே கட்டு ரை, கவிதைப் போட்டிகளை நடத்தி சிறப்பான 3 கட்டுரை, கவிதைக ளைத் தெரிவு செய்து பிரதேச செய லாளரினால் நடத்தப்பெறும் சிறுவர் தின விழாவுக்கு ஒத்துழைப்பு வழங் குமாறு வடமாகாண நன்னடத்தை சிறுவர் பராமரிப்பு சேவைகள் திணைக்கள ஆணையாளர் தி.விஸ்வரூபன் அறிவித்துள் ளார். (ஓ-4-19)

## நவராத்திரி பாமாலை



### வரம் தருவாய் !

வெள்ளைக் கலையுடுத்து
வேண்டும் கல்வி வரம் தருவாள்
தோன்றும் ஐயம் தீர்த்து
நிறை கல்வி வரம் தருவாள்
நாளும் நவராத்திரியே - எம்முள்
சேர்த்திடம்மா கல்விச் செல்வமதை

நா.கஸ்தூரி, யா/ சங்கானை சிவப்பிரகாசம் மகா வித்தியாலயம்

### கல்வி, செல்வம், வீரம், அத்தனையும் தருபவளே



வெண்தாமரை தனில் வீற்றிருப்பவளே
தாயே சரஸ்வதி
மூத்தெய்வத்தினுள் கல்வித் தெய்வமே
தாயே சரஸ்வதி
செந்தாமரையில் வீற்றிருப்பவளே- தாயே
இல்லத் தெய்வமாய் துலங்கி
செல்வம் எல்லாம் அள்ளித்தருபளே
தாயே லக்சுமி
வீரம் என்ற மூன்றெழுத்தை தன்னுள்
அடக்கிய தாயே துர்க்கா
தாருக சூரனின் வலிய மார்பினை கிழித்தவளே
தாயே துர்க்கா
உம் போர் தினத்தினிலே -நாம்
சிறையில் இருந்து அனுட்டிப்போம்
உமக்காய் கொண்ட விரதத்தை.

த.கோகுலநாத், குருநகர் நலன்புரி நிலையம்

### கருணை மழை பொழிந்திடம்மா ...



நவ என்னும் ஒன்பது தினத்திலும்
வீரத்தின் அதிபதியே துர்க்கா
வெற்றியின் கதாநாயகியே துர்க்கா
செல்வத்தின் இருப்பிட அன்னையே லட்சுமி
கல்வி வித்தகியே தாயே சரஸ்வதி
முச்செல்வமும் செம்மையுற
தனிமையிலே சிறையில் வாழும் எனக்கு
நல்வரம் தந்திடம்மா...-

இ.திலீபன், குருநகர் நலன்புரி நிலையம்

## வாணி விழா

(யாழ்ப்பாணம்)

சித்தங்கேணி சுப்ரா கல்வி நிறுவனத்தின் வாணி விழா இன்று ஞாயிற்றுக்கிழமை பிற் பகல் 3 மணிக்கு நிறுவன மண்டபத்தில் நடை பெறவுள்ளது.

நிறுவனத்தின் சிரேஷ்ட ஆங்கில ஆசிரியர் எஸ்.ரட்ணம் தலைமையில் இடம்பெறும் இவ் விழாவிற்கு யாழ்.கல்வியியற் கல்லூரி பதிவா ளர் சி.சிவநாதன் பிரதம விருந்தினராகவும் சிவசிதம்பரேஸ்வரர் ஆலய குரு சிவஸ்ரீ ச. வாசுதேவக்குருக்கள், வலிகாமம் கல்வி அதிகாரி ச.கைலாசநாதன் ஆகியோர் சிறப்பு விருந்தினராகவும் தென்னிந்திய திருச்சபை வணபிதா அன்ரனி அடிகளார், கிராம அலு வலர் களான எஸ்.சிவரூபன், திருமதி பிரதீபா பரமேஸ்வரன் ஆகியோர் கௌ ரவ விருந்தினரா கவும் கலந்து சிறப்பிக்கவுள்ள னர்.

நவராத்திரி மகிமை பற்றி சமய பாட ஆசிரியர் அ. குணதாசன் விசேட உரை நிகழ்த்துவதுடன் மாணவர் கலை நிகழ்வுகளும் இடம்பெறவுள் ளன. (ஓ-30)

## வாழ்வகத்தில் வாணிவிழா

(யாழ்ப்பாணம்)

சுன்னாகம் வாழ்வகத்தில் இன்று ஞாயிற் றுக்கிழமை காலை 8 மணிக்கு வாணி விழா நடைபெறவுள்ளது.

இதில் மறைந்த நிறுவுனர் செல்வி அன்ன லக்சுமி சின்னத்தம்பியின் பாத வணக் கத்தைத் தொடர்ந்து பூஜைகள் இடம் பெறும்.

தொடர்ந்து திருநெல்வேலி அ.த.க. பாடசாலை அதிபர் ந.விஜயசுந்தரம் "சக்தியின் மகிமை" பற்றி சொற்பொழிவும், வாழ்வக சிறார்களின் கலை நிகழ்ச்சிகளும் இடம் பெறவுறள்ளது. (ஓ-6)


COMPUTER EXPRESS
Institute of Information Technology
No 167, Kasthuriyar Road, Jaffna.
T.P-0212228250

யாழ் நகரில் முதன்முறையாக, தொழில்சார் கணனிக்கற்கை நெறிகள் கணனி ஆர்வலர்களிற்கும், A/L பரீட்சை எழுதிய மாணவர்களிற்கான புதிய பிரிவுகள் மாபெரும் கட்டணக்கழிவுடன் ஆரம்பமாகின்றன.

80% OFF

PROFESSIONAL DIPLOMA IN MICROSOFT OFFICE 3,500/= 3 Months
DIPLOMA IN PRINTING TECHNOLOGY & DESK TOP PUBLISHING ~~22,500/=~~ 4,500/= 4 Months
DIPLOMA IN SERVER TECHNOLOGY & WEB PAGE DESIGNING ~~22,500/=~~ 4,500 /= 3 Months
DIPLOMA IN GRAPHIC DESIGNING & ADVERTISEMENT MARKETING ~~22,500/=~~ 4,500 /= 4 Months
DIPLOMA IN HARDWARE ENGINEERING & NET WORKING ~~20,000/=~~ 4,000 /= 3 Months
DIPLOMA IN AUTO CAD & ARCHITECTURE DESIGNING ~~22,500/=~~ 4,500 /= 3 Months
DIPLOMA IN COMPUTERIZED ACCOUNTING & E-COMMERCE ~~22,500/=~~ 4,500 /= 3 Months
DIPLOMA IN COMPUTER SCIENCE & PROGRAMMING ~~22,500/=~~ 4,500 /= 4 Months
HONOURS DIPLOMA IN INFORMATION TECHNOLOGY ~~32,500/=~~ 6,500 /= 6 Months
DIPLOMA IN FILM TECHNOLOGY & VIDEO EDITING ~~10,000/=~~ 5,000 /= 4 Months
DIPLOMA IN STUDIO TECHNOLOGY & MULTI MEDIA ~~9,500/=~~ 4,750 /= 4 Months

50% OFF

புதிய பிரிவுகள் ஆரம்பம்
30/09/2009 Batch i- 09AM Batch ii- 03PM
03/10/2009 Batch I- 09AM Batch II- 02PM
(C-3377)



ஐங்கரன் திருமண சேவை

மணமகள் தேவை
எங்களிடம் யாழ். இந்து உயர்குலம் U.K Citizen 31, 35,37,39,வயது, Canada Citizen 30,35 வயது, Holand Citizen , 36 வயது,America Green Card 36 வயது ஆகிய மணமகன்மார் உள்ளனர். தகுந்த மணமகள்மாரை எதிர்பார்க்கின்றனர். 24 மணிநேர தொலைபேசி வசதி உண்டு. பதிவுக் கட்டணம் எதுவும் இல்லை. தொடர்பு :- லண்டன் ஐங்கரன்
T.P No.-0044-7535384166
-0044 - 7508295863
Fax No-0044-2086810701
-0044 -2086720673
(3503)

மணமகன் தேவை
எங்களிடம் யாழ். இந்து உயர்குலம் U.K Citizen 25,29, 33,36 வயது, (M. SC) Canada Citizen 30,34,37,39, வயது Swiss Citizen 26 வயது Austerliya Citizen 31 வயது , France Citizen 32 வயது ஆகிய மணமகள்மார் உள்ளனர். தகுந்த மணமகன்மாரை எதிர்பார்க்கின்றனர். 24மணிநேர தொலைபேசி வசதி உண்டு. பதிவுக் கட்டணம் எதுவும் இல்லை. தொடர்பு :-லண்டன் ஐங்கரன்
T.P No.-0044-7535384166
-0044 - 7508295863
Fax No-0044-2086810701
-0044 -2086720673
(3503)

# ஆஸ்துமா ஜீன் கண்டுபிடிப்பு



உயிரினங்களின் மரபுப் பண்புகள் ஜீன்கள் என்னும் நுண்ணிய செல்களில் பதிந்துள்ளது. இவற்றில் எவை எந்தெந்தப் பண்புகளைக் கொண்டன. எந்த வியாதிகளோடு தொடர்பு உடையவை என்று கண்டு பிடித்தால் அந்த வியாதிகளை அடியோடு விரட்டிவிடலாம்.

மேலும் ஊனம் மற்றும் சில மரபுக் குறைபாடுகளையம் நீக்கிவிடலாம் என்பது விஞ்ஞானிகளின் கணிப்பு.

சமீபகாலங்களில் ஜீன் தெரபியில் மறு மலர்ச்சியாக சில ஜீன்கள் எதற்குரியவை என்று அடையாளம் காணப்பட்டுவிட்டன. வழுக்கையை ஏற்படுத்தும் ஜீன்கள் (சோக்ஸ்-2), உடல் பருமனுக்கு காரணமாக இருக்கும் ஜீன்கள் (ஐ.கே.கே.இ) போன்றவை அவற்றில் குறிப்பிடத்தக்கவை.

தற்போது நுரையீரலில் பாதிப்பை ஏற்படுத்தும் ஆஸ்துமா போன்ற சில வியாதிகளுக்குக் காரணமான ஜீன்கள் அடையாளம் காணப்பட்டுள்ளன. சுவாசம் மூலம் உள்ளிழுக்கப்படும் தூசுகள் மற்றும் சளி ஆகியவை நுரையீரலைப் பாதிக்கின்றன. இந்தப் பாதிப்புகள் நாளடைவில் ஆஸ்துமா வியாதியை ஏற்படுத்துகின்றன. மேலும் சில குழந்தைகளுக்கு பிறப்பின்போதே சிஸ்டிக் பைபிரோசிக் எனப்படும் கொடிய நோயும் ஏற்படுகிறது.

அமெரிக்காவின் சின்சினாட்டி நகரில் நானோ டெக்னோலஜி நிபுணர்களும், குழந்தை மருத்துவ மையமும் இணைந்து ஆய்வு நடத்தியதில் இத்தகைய பாதிப்புக்களுக்குக் காரணமாக இருக்கும் ஜீன்கள் அடையாளம் காணப்பட்டன.

சுவாசம் வழியாகச் செல்லும் தூசுகள் ஒருவித ஒவ்வாமையை ஏற்படுத்தி தடிமனான சளிப்படலத்தை உருவாக்குவதாக இதுவரை எண்ணப்பட்டு வந்தது. இத்தகைய மாற்றங்கள் ஹைபர்பிளேசியா என்று கூறப்பட்டது. தற்போது ஒருவகை செல்வகை இந்தப் பாதிப்புக்களால் கோப்பை வடிவமான வேறுவித செல்களாக மாறுவதாக கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

அந்த செல்களை கிளாரா செல்கள் என்று குறிப்பிடுகிறார்கள். இந்த மாற்றம் மெட்டாபிளாசியா எனப்படுகிறது. இந்த செயலில் ஒரு டசின் ஜீன்கள் பங்குபெறுகின்றன. இவற்றை எஸ்.பி.டி..இ.எப். என்று குறிப்பிடுகிறார்கள்.


எலிகளில் இந்த வகை ஜீன்களை குறைத்து ஆய்வு செய்தபோது கிளாரா செல்கள் கோப்பை வடிவ செல்களாக மாறுவது தடைப்பட்டு பாதிப்புகள் கட்டுப்படுத்தப்பட்டது. எனவே கிளாரா செல்கள் மாற்றம் அடைவதை தடுப்பதன் மூலம் ஆஸ்துமா, நெஞ்சுச் சளி,பொதுவான, ஜலதோஷம் மற்றும் பிறப்பில் ஏற்படும் சிஸ்டிக் பைபிரோசிக் போன்ற வியாதிகளை தடுக்க முடியும் என்று ஆய்வாளர்கள் கூறுகிறார்கள்.

இந்த ஆய்வு முடிவால், எதிர்காலத்தில் மேற்கண்ட வியாதிகளுக்கு நிரந்தரத் தீர்வு காணமுடியும் என்று தெரிகிறது.




ஆர்.யூ.பாலமுருகன்

# அடடே...



- ஊர்வன இல்லாத கண்டம் அண்டார்டிகா .
- எத்தனை நாட்கள் ஆனாலும் கெட்டுப் போகாத ஒரே உணவுப்பொருள் தேன்.
- முதன்முதலில் அரசியல் கார்ட்டூனை வரைந்தவர் பெஞ்சமின் பிராங்க்ளின்.
- கடற்கரையை தேசியச் சின்னமாகக் கொண்ட நாடு டென்மார்க்.
- ஷெப்பர்ட் எனப்படும் நாயின் தாயகம் சுவீடன் .

# ஆபத்தை அறியும் கண்கள்



நம்முடைய உடலில் மிக இன்றியமையாத உறுப்பு கண் ஆகும். கண் இல்லாமல் உலகில் நடக்கும் எந்தவொரு செயலையும் நம்மால் காண முடியாது. கண்களால் பார்த்து, மூளையால் உணரப்பட்டுஅதன் பின்னரே உடலின் இயக்கங்கள் நடைபெறுகின்றது.


ஆனால் திடீரென்று கண் களை தாக்கும் அளவுக்கு ஏதாவது ஆபத்து ஏற்பட்டால் இமைகள் தானாக மூடி பாது காத்துக்கொள்ளும். இதற்கு அனிச்சை செயல் என்று பெயர். இதுபோன்ற அனிச்சை செயல் நடைபெற என்ன காரணம்? என்பதற்கு விஞ்ஞானிகள் ஒரு புதிய முடிவைக் கூறு கிறார்கள். அதாவது, ஆபத்தை அறியும் தன்மையில் மூளையைவிட கண்கள் வேகமாக செயல்படுகின்றது என்கிறார்கள் அவர்கள். சுவிட்சர்லாந்தின் பாசல் நகரில் உள்ள பிரைட் ரிச்மைஸ்சர் உயிர் மருத்துவ ஆராய்ச்சி நிறுவனத்தைச் சேர்ந்த ஆராய்ச்சியாளர்கள் இதை கண்டறிந்துள்ளனர்.

இதற்காக போடோண்ட் ரோஸ்கா என்பவர் தலைமையிலான குழு சுண்டெலியின் கண்களில் உள்ள செல்களை ஆராய்ச்சி செய்தது. ஆராய்ச்சியின் முடிவில் பாலூட்டிகளின் விழித்திரையில் உள்ள ஒரு வகை செல்கள் தனக்கு அருகில் வரும் பொருட்களை எளிதில் உணர்ந்து ஆபத்து என்றால் விரைந்து செயல்படக் காரணமாக இருக்கின்றன.

இந்தச் செயல் மூளையின் உதவி இல்லாமலேயே நடைபெறுகிறது. இதனால் ஆபத்திலிருந்து விரைவில் தப்பிக்க முடிகிறது.

இந்த எச்சரிக்கை அமைப்பு எல்லா உயிரினங் களுக்கும் இயற்கையாகவே அமைந்துள்ளது என்பதை அவர்கள் கண்டுபிடித்துள்ளனர்.

# இரண்டு மரணங்கள்



ஒருவர் விடும் மூச்சு நின்றுவிட்டால் அதையே நாம் மரணம் என சொல்கிறோம். ஆனால் உடல் செல்களின் இயக்கம் நின்றுபோவது தான் மரணம் என்று மருத்துவ நூல்கள் குறிப்பிடுகின்றன. ஒவ்வொருவருக்கும் மருத்துவ ரீதியாக இரண்டு மரணங்கள் உண்டு.

ஏதேனும் ஒரு காரணத்தால் இதயம் செயல்படாமல் நின்று விட்ட பின்னரும் மூளையானது சிறிது நேரம் இயங்கிக் கொண்டிருக்கும். சில நேரங்களில் 1/2 மணி நேரம் முதல் சுமார் 2 மணி நேரம் வரை இயங்கிக் கொண்டிருப்பதும் உண்டு. இது "கிளினிக்கல் டெத்" எனப்படுகிறது.

பின்னர் மூளையின் இயக்கமும் நின்று போகிறது. இதை செரிபரல் டெத் என்று குறிப்பிடுகிறார்கள். அப்போது தான் ஒருவர் முழுமையான மரணம் அடைந்தவராகாகக் கருதப்படுகிறார்.


# மின்சாரம் இல்லாமலேயே சார்ஜ் செய்யலாம்!

மின்சார உற்பத்தி குறைவாக இருப்பதால் அடிக்கடி மின் தட்டுப்பாடு ஏற்படுகிறது. அறிவிப்பு ஏதுமின்றி அடிக்கடி மின்சாரம் துண்டிக்கப்படுவதால் நம்முடைய அன்றாட வேலைகள் பாதிக்கப்படுவதுடன் மன உளைச்சலுக்கும் ஆளாக நேரிடுகிறது. மின்சாரத்துக்கு மாற்றாக இயற்கையான சூரிய ஆற்றலைப் பயன்படுத்தி இயங்கக் கூடிய பல சாதனங்கள் சந்தைக்கு வந்துவிட்டன. அந்த வரிசையில் தற்போது மின்சாரம் இல்லாமலேயே பயன்படுத்தக் கூடிய புதுமையான சார்ஜரும் இடம் பிடித்துள்ளது.



இது சுரியஆற்றலை மின் ஆற்றலாக மாற்றித் தருகிறது. மூன்று இடங்களில் பலவிதமான பிளக்குகளைப் பொருத்தி பயன்படுத்தும் வசதி இதில் உள்ளது.மேலும் எங்கு சென்றாலும் எளிதில் எடுத்துச் செல்ல முடியும்.

உதாரணமாக நீங்கள் கடற்கரைக்குச் செல்லும்போது இந்த சார்ஜரையும் எடுத்துச் சென்று வெயிலில் வைத்தால் போதும். அதிலிருந்து கிடைக்கும் மின் ஆற்றல் மூலம் உங்களின் மொபைல் போன், கேமரா, ஐபாட் போன்றவற்றை சார்ஜ் செய்து கொள்ளலாம்.



தற்போது வெளிநாடுகளில் பயன்படுத்தப்படும் இந்த சார்ஜர் விரைவிலேயே இந்தியாவுக்கும் வர இருக்கிறது.

# சாதி, சமயம், மொழி என்பவற்றைவிட மனிதாபிமானமே முக்கியமானது

நாம் பெற்றுக்கொண்ட இந்த சமாதா னத்தை தொடர்ந்தும் பாதுகாப்பது சிங்கள, தமிழ், முஸ்லிம் மற்றும் அனைத்து இனத் தலைவர்களினதும், சமயத் தலைவர்களினதும், அரசியல் தலை வர்களினதும் கடமையாகும். அந்தக் கடமையை சரியான முறையில் நடைமுறைப்படுத்த வேண்டிய காலகட்டம் இதுவே.
இல்லாவிட்டால் மீண்டும் பழைய நிலைமை ஏற்படலாம். எங்கள் மத்தியில் இருக்கும் அனைத்துப் பேதங்களையும் களைத்தெறிந்து மனிதாபிமானத்துடன் இலங்கையராக வாழ வேண்டும் என்பதே எமது பிரார்த்தனையாகும். இதில் தான் நாட்டின் எதிர்காலம் தங்கியுள்ளது.

இவ்வாறு சொல்கிறார் பதுளை முதியன்கன பௌத்த விகாரையின் பிக்குவான வண. முறுதெனிய தர்மரத்ன. பதுளை முதியன்கனை பௌத்த விகாரை மிகவும் பிரசித்தி பெற்றது. 150 ஆண்டுகள் பழமை வாய்ந்தது.

இந்த விகாரையின் பிரதம பிக்குவைச் சந்தித்து அவரோடு சில வார்த்தைகள் பேசும் வாய்ப்பு எமக்குக் கிடைத்தது. யுத்தத்தினால் பாதிக்கப்பட்டு இடம்பெயர்ந்த மக்கள் தொடர்பில் மிகுந்த கரிசனம் கொண்ட இவர், அது தொடர்பாகப் பல விடயங்களை எங்களுடன் பகிர்ந்து கொண்டார்.

கடந்த மூன்று தசாப்தங்களாக இலங்கையில் இடம்பெற்று வந்த தொடர் மோதல்கள் தமிழ் பேசும் மக்களுக்கு உடல் ரீதியாகவும் உளவியல் ரீதியாகவும் ஏற்படுத்திய தாக்கம் மிக மோசமானது.

இதனை இலகுவில் அளவிட்டுக் கூறிவிட முடியாது. இந்நிலையில் இவர்களுக்கு ஏனைய மனிதாபி மான நிவாரண உதவிகளை விட தற்போது முக்கியமாகத் தேவைப் படுவது ஆற்றுப்படுத்தல். இதனை வழங்கக்கூடியவர்களாக இருப்ப வர்கள் மதகுருக்களே என்று குறிப் பிடுகிறார் அவர்.



பதுளை முதியன்கன பௌத்த விகாரையின் வெளிப்புறத் தோற்றம்



புதுக்குடியிருப்பு போன்ற பிரதேசங்களில் ஒரு சிறிய நிலப்பரப்புக்குள் ஆயிரக்கணக்கான மக்கள் அடைந்திருக்க வேண்டிய சூழ்நிலையும் ஏற்பட்டிருந்தது. இது எத்தனை சிரமத்திற்குரியது என்பதை நாம் அறிவோம் என்றார் தர்மரத்ன தேரர்.

சிங்களவராகவோ, தமிழராகவோ அல்லது முஸ்லிமாகவோ எவரும் பிறப்பதில்லை. சுதந்திர மனிதர்க ளாகவே நாம் பிறக்கிறோம்.

"பெற்றோர் தமிழர்களானால் நாம் தமிழ் கதைக்கிறோம். அவர்கள் சிங்களவர்களானால் சிங் களம் கதைக்கிறோம். பெற்றோர் பின்பற்றும் சமயங்களை நாங்கள் பின்பற்றுகிறோம்"

இவ்வாறான விடயங்களை மக்கள் மத்தியில் பேதத்தை வளர்ப்பதற்கோ, ஒருவரையொருவர் கொல்வதற்கோ அல்லது பிரச்சி னைகளைத் தோற்றவிப்பதற்கோ காரணமாக எடுத்துக் கொள்ள வேண்டியதில்லை. சாதிக்கும் சமயத்துக்கும் மேலாக மனிதாபிமானமே முக்கியமானது.

இந்த நாட்டில் வாழும் சிங்களவர்கள், தமிழர்கள், முஸ்லிம்கள் மற்றும் பறங்கியர்கள் அனைவரும் தமக்குக் கிடைத்த சுதந்திரத்தை நிரந்தரமாகப் பெற்றுக் கொள்ள வேண்டும். புராதன காலங்களில் இருந்தது போல அவர்கள் மத்தியில் புரிந்துணர்வு, நட்பு ஆகியவற்றை மீண்டும் ஏற்படுத்த வேண்டும் என ஆசைப்படுகிறார் முறுதெனிய தர்மரத்ன தேரர்.

அவ்வாறு செய்யாமல் மொழிப் பிரச்சினைகள்

**வயிற்றுக்கு எந்த விதமான சாதிபேதமும் இல்லை. பசி அனைவருக்கும் பொதுவாக ஏற்படுகிறது. அடிப்படைத் தேவைகள் அனைவருக்கும் பொதுவானவை. அவை கிடைக்காதபோதே பிரச்சினைகளும், போராட்டங்களும் ஏற்படுகின்றன.**

காரணமாகவோ மதப் பிரச்சினைகள் காரணமாகவோ அல்லது சாதிப் பிரச்சினைகள் காரணமாகவோ பிரிந்தோமானால் மீண்டும் இந்த நாட்டில் கொடிய யுத்தம் ஏற்படும் என்று அவர் எச்சரிக்கிறார்.

"மொழிதான் இன்று பெரும் பிரச்சினையாக இருக்கிறது. இந்தச் சிறிய நாட்டில் இவ்வளவு பெரிய பிரச்சினை தோன்றுவதற்கு காரணம் மொழிதான்.

மொழி காரணமாகத் தான் எம் இரு இனங்களுக்கிடையில் தொடர்புகள் அற்றுப் போனது. அதனை அகற்றிவிட்டுப் பார்த்தால் நாம் அனைவரும் மனிதர்கள்"

"யுத்த முனையில் இருந்து அந்த மக்கள் விடுவிக்கப்பட்டு வந்தபோது நாட்டு மக்கள் அவர்களால் முடிந்த உதவிகளை வழங்கினார்கள். இதில் தமிழர்கள், சிங்களவர்கள், முஸ்லிம்கள் என்ற பாகுபாடு இருக்கவில்லை.

அநாதரவான நிலையில் நிற்கும் மக்களுக்கு ஏதாவது செய்ய வேண்டும் என்று தான் அனைவரும் யோசித்தார்கள் என்று கூறிய அவர், கிராமங்களில் சில மக்கள் தமக்கென வைத்திருந்த உணவைக் கூட அவர்களுக்கு கொடுத்தாகச் சொன்னார்,

இந்த நாட்டிலுள்ள சில சுயநலம் மிக்க அரசியல்வாதிகள் தான் சிங்கள, தமிழ் மக்களிடையே பிரச்சினையைத் தூண்டி விட்டதாகவும் அவர் குறிப்பிட்டார்.

"வடக்கில் உள்ள சில அரசியல் வாதிகள் அங்கு சென்று மக்களைக் குழப்புகின்றனர். கொழும்புக்கு வந்ததன் பின்னர் அவர்கள் அது குறித்து கவனிப்பதில்லை. சிங்கள அரசியல் வாதிகளும் அப்படித்தான்.

தேர்தலில் வெல்லுவதற்காக இனத்துவேசத்தை தூண்டுகின்றனர். தமது சுகதுக்கங்கள் குறித்து தான் யோசித்தார்களே தவிர மக்கள் குறித்து அவர்கள் நினைப்பதே இல்லை"

"வயிற்றுக்கு எந்தவிதமான சாதிபேதமும் இல்லை. பசி அனைவருக்கும் பொதுவாக ஏற்படுகிறது.

அடிப்படைத் தேவைகள் அனை வருக்கும் பொதுவானவை. அவை கிடைக்காதபோதே பிரச்சினைகளும், போராட்டங்களும் ஏற்படுகின்றன" என்று கூறும் தேரர்,

இவ்வாறான சந்தர்ப்பங்களில் பொறுப்பாக இருப் பவர்கள் ஒன்றிணைந்து சமாதான மாகச் செயற்படாவிட்டால் பிரச்சினைகள் தோன்றலாம் என்கிறார்.

வடக்கின் வன்னிப் பிரதேசத்திலிருந்து இடம்பெயர்ந்து இடைத்தங்கல் முகாம்களில் தங்க வைக்கப்பட்டுள்ள சுமார் 3 இலட் சம் மக்கள் காலதாமதமின்றி அவர்களது சொந்த இடங்களில் குடியேற்றுவது அரசாங்கத்தின் கடமை எனவும் தர்மரத்ன தேரர் வலியுறுத்தினார்.

# புரட்டாதி மாதப் பலன்கள்

## துலாம்

(சித்திரை 3, 4 பாதங்கள், சுவாதி, விசாகம், 1,2,3 பாதங்கள் வரை)

**நீதிக்கும் நேர்மைக்கும் முக்கியத்துவம் கொடுக்கும் துலாம் ராசி நேயர்களே!**

புரட்டாசி மாதக் கிரக நிலைகளை ஆராய்ந்து பார்க்கும் பொழுது ஏழரைச் சனியின் தொடக்கம் என்பதை அறிந்து கொள்வீர்கள். முதலில் விரயச் சனி, பிறகு ஜென்மச் சனி, அதன் பிறகு குடும்பச் சனி என்று அடுக்கடுக்காக மூன்று வித பரிமாணத்தில் சனி பகவான் சஞ்சரிப்பார். அதில் முதலில் விரயச் சனி தொடங்கும் மாதமிது, இதில் முதற்சுற்றும், மூன்றாம் சுற்றும் நடப்பவர்கள் முன்னெச்சரிக்கையுடன் நடந்து கொண்டால் தான் முன்னேற்றத்திற்கான வழி பிறக்கும்.

இரண்டாவது சுற்று நடப்பவர்கள் இனிய பலன்களைக் காணப் போகிறார்கள். குறிப்பாக சனியின் நட்பு கிரகத்தின் தசாபுத்தி நடப்பவர்கள் தொட்ட காரியங்களில் தடை இருந்தாலும் மறு முறை முயற்சிக்கும் போது நடை பெற்று விடும்.

அதே நேரத்தில் குரு இம்மாதத்தில் வக்ர நிவர்த்தியாகிறார். மாதக் கடைசியில் குரு பலம் பெறப் போவதால், உறவினர் பகைகளும் உருவாகலாம். வரவு - செலவுகளைக் கவனிப்பதா? உறவினர்களைக் கவனிப்பதா? தொழிலை கவனிப்பதா? தொழில் சேர்ப்பதில் அக்கறை காட்டுவதா? என்று சிந்தித்துக் கொண்டேயிருப்பீர்கள்.

லாப ஸ்தானத்தில் விரயாதிபதி இருப்பதால் லாபத்திற்கேற்ற விரயம் வந்து விடும். பூமிப் பிரச்சினையைச் சுமூகமாக முடித்துக் கொள்வது நல்லது.

செப்டெம்பர் 26 ஆம் திகதி கன்னி ராசியில் சனி சஞ்சரிக்கப் போகிறார். 4,5க்கு அதிபதியான சனி பகவான் விரய ஸ்தானத்தில் சஞ்சரிக்கும் பொழுது இடம், பூமி விற்பனைகள் ஏற்படும். தாய் வழியில் விரயங்கள் வந்து சேரும். வாகன மாற்றம் செய்ய உகந்த மாதமிது. பழைய வாகனங்களால் பழுதுச் செலவு அதிகரிக்கும்.

பிள்ளைகள் நலன் கருதி எடுத்த முயற்சிகளிலும் சிறு தடவைகள் ஏற்பட்டு அகலும். சனியின் வழிபாட்டை முறையாக மேற்கொண்டால் சஞ்சலங்கள் தீர்ந்து சந்தோஷங்கள் வந்து சேரும்.

விரயாதிபதியாகவும், 9 ஆமிடத்திற்கு அதிபதியாகவும் விளங்கும் புதன் அக்டோபர் 2 ஆம் திகதி உச்சம் பெறப் போகிறார். எனவே, இந்த நேரத்தில் விலை உயர்ந்த பொருட்களை வாங்கி மகிழும் வாய்ப்பு கிட்டும். அத்தியாவசிய பொருட்களையும் வாங்குவீர்கள். ஆடம்பரப் பொருட்களையும் வாங்குவீர்கள். அக்டோபர் 7 இல் கடக ராசியில் செவ்வாய் சஞ்சரிக்கப் போகிறார். 2, 7க்கு அதிபதி நீச்சம் பெறுவதால் குடும்பத்தில் பிரச்சினைகள் அதிகரிக்கும். அருகில் இருப்பவர்களை அனுசரித்துச் சென்றால் தான் ஆதாயத்தை அடைய முடியும். பயணங்களை மாற்றி அமைப்பீர்கள்.

3,6க்கு அதிபதியான குரு வக்ர நிவர்த்தியாகிறார். எனவே, எதிரிகளின் பலம் மேலோங்கும். இந்த நேரத்தில் கடன் சுமை திடீரென கூடலாம். உடன் பிறப்புகள் உங்களுக்கு கட்டுப்பட மறுப்பர். நீங்கள் உருவாக்கியவரே உங்களுக்கு எதிரியாகும் சூழ்நிலை உண்டு. அக்டோபர் 8 இல் குரு வக்ர நிவர்த்தியாகிறார். அதே நேரத்தில் அக்டோபர் 10 இல் சுக்ரன் கன்னி ராசியில் நீச்சம் பெறப் போகிறார்.

எனவே, மாதத்தின் கடைசி ஏழு நாட்கள் இல்லத்தில் மகிழ்ச்சி குடியேறும். மாற்று மருத்துவத்தால் உடல் நலம் சீராகும். வீடு, வாசல் என்று வாங்குவதற்கான ஆயத்தங்கள் செய்வீர்கள்.

இம்மாதம் முப்பெரும் சக்திகளை வழிபட்டு முன்னேற்றம் காணுங்கள். சரஸ்வதியை வழிபட்டு சந்தோஷமும், இலக்குமியை வழிபட்டு இன்பங்களையும், துர்க்கையை வழிபட்டு தொடர்ந்து நற்பலன்களையும் பெற்று கொள்ளுங்கள்.

## விருச்சிகம்

(விசாகம் 4 ஆம் பாதம், அனுஷம், கேட்டை வரை)

**வெற்றி ஒன்றையே குறிக்கோளாகக் கொண்டு செயல்படும் விருச்சிக ராசி நேயர்களே!**

புரட்டாதி மாதக் கிரக நிலைகளை ஆராய்ந்து பார்க்கும் பொழுது பொருளாதார விருத்தி இரு மடங்காகும் விதத்திலேயே இருக்கிறது. வாழ்க்கைத் தேவைகள் பூர்த்தியாகும். வளர்ச்சி கூடும். எதிர்பார்ப்புகள் அனைத்தும் நிறைவேறும் விதத்தில் இம்மாத கிரக நிலைகள் உங்களுக்கச் சாதகமாக உலா வருகின்றன.

பொதுவாக சகாய ஸ்தானாதிபதி லாப ஸ்தானத்தில் சஞ்சரிக்கும் பொழுது தொழில் வளம் மேலோங்கும். தொகை வரவு கூடிக் கரைந்த சேமிப்புகளை ஈடுகட்டுவீர்கள். வசதி, வாய்ப்புகள் பெருகும். அந்த அமைப்பு இம்மாதம் வரும் சனிப் பெயர்ச்சியால் உருவாகப் போகிறது.

இலாப ஸ்தானத்திற்கு சனி வரும் பொழுது, தொழில் வைத்திருப்போர்க்கு இலாபம் கூடும். உத்யோகம் பார்ப்பவர்களுக்கு ஊதிய உயர்வு கிடைக்கும். கட்டிடம் மற்றும் நிலம் விற்பனையில் கவனம் செலுத்துபவர்களுக்கு எதிர்பாராத அளவுக்கு இலாபம் வந்து சேரும். சனி வழிபாட்டில் கவனம் செலுத்துவதன் மூலமும், ஆனை முகப் பெருமான், ஆஞ்சநேயப் பிரபு ஆகிய தெய்வங்களின் வழிபாட்டிலும் கவனம் செலுத்துவதன் மூலமும் வாய்ப்புகளை வாயில் தேடி வர வழைத்துக் கொள்ளலாம்.

செப்டெம்பர் 26 ஆம் திகதி லாப ஸ்தானத்தில் சனி சஞ்சரிக்கப் போகிறார். எனவே உங்கள் கனவுகள் எல்லாம் நனவாகப் போகின்றது.

3,4 க்கு அதிபதியான சனி உங்கள் ராசிக்கு 11 இல் சஞ்சரிக்கும் பொழுது புதிய ஒப்பந்தங்கள் வந்து சேரும். வசூலாகாத பாக்கிகள் வசூலாகும். பணியாளர் தொல்லை அகலும். பாதியில் நின்ற பணி மீதியும் தொடரும். நண்பர்கள் நல்ல தகவலைக் கொண்டு வந்து சேர்ப்பர். வீடு கட்டும் முயற்சிக்கு வித்திடுவீர்கள். உடன் பிறப்புகள் உங்களோடு இணக்கமாக நடந்து கொள்வர். வழக்குகளில் வெற்றி கிடைக்கும். வருங்கால நலன் கருதித் தீட்டிய திட்டங்களை பரிசீலனை செய்து பார்ப்பீர்கள். வெளிநாட்டு அனுகூலம் உண்டு.

அக்டோபர் 2 ஆம் திகதி கன்னி ராசியில் புதன் சஞ்சரிக்கப் போகிறார். 11 க்கு அதிபதி 11இல் சஞ்சரிக்கும் இந்த நேரத்தில் பயணங்கள் அதிகரிக்கும். விழிப்புணர்ச்சி காட்டாது செயல்பட்ட காரியத்தில் கூட வேண்டும் அளவிற்கு லாபம் கிடைக்கும். மாமன், மைத்துனர் வழி ஒத்துழைப்போடு மகத்தான காரியத்தைச் செய்து முடிப்பீர்கள்.

### சிவல்புரி சிங்காரம்

உங்கள் ராசிக்கு செவ்வாய் ராசி நாதனாக மட்டுமல்லாமல் 6 க்கு அதிபதியாகவும் விளங்குகிறார். 6க்கு அதிபதி நீச்சம் பெறும் பொழுது திட்டமிடாது செய்யும் காரியங்கள் வெற்றி பெறும். எதிரிகள் உதிரியாவர். அரசியல்வாதிகளுக்கு இலாகா மாற்றங்கள் உருவாகலாம்.

அக்டோபர் 8 ஆம் திகதி 2, 5-க்கு அதிபதியான குரு வக்ர நிவர்த்தியாகிறார். தனாதிபதி வக்ர நிவர்த்தியாகும் பொழுது, பண வரவு அதிகரிக்கும்.

தொழில் வளம் மேலோங்கும். சமூகத்தில் மதிப்பும், மரியாதையும் கூடும். அக்டோபர் 10 இல் சுக்ரன் கன்னி ராசியில் சஞ்சரிக்கும் பொழுது பழைய ஆபரணங்களைக் கொடுத்து விட்டுப் புதிய ஆபரணங்களை வாங்குவீர்கள். குரு வழிபாடு குதூகலம் வழங்கும்.

இம்மாதம் எல்லா நாட்களும் இனிய நாட்களாக மாற, அம்பிகை வழிபாட்டில் ஆர்வம் காட்டுங்கள். முப்பெருந் தேவியரை ஆலயத்தில் சந்தித்தால் ஒப்பற்ற வாழ்க்கை அமையும்.

(தொடரும்)

# கிழக்கு மாகாணமும் வன்னி பிரதேசமும் உள்ளடங்கும் விதத்தில் நீதிமன்ற எல்லைகள்

(கொழும்பு)

நாட்டின் புதிய நீதிமன்ற எல்லைகள் ஜனவரி மாதம் முதல் நடைமுறைக்கு வருமென நீதி மற்றும் சட்ட மறுசீரமைப்பு அமைச்சு தெரிவித்துள்ளது.

இதற்கான வர்த்தமானி அறிவித்தல் நவம்பர் மாதம் முதலாம் திகதி வெளியிடப்படவுள்ளது. இதன்பின் புதிதாக 50 நீதிமன்றங்கள் அமைக்கப்படவுள்ளன.

சுமார் 30 வருடங்களின் பின்னர் நீதிமன்ற எல்லைகள் வகுக்கப்படுகின்றன. முன்னாள் மேல் நீதிமன்ற நீதியரசர் நிசங்க உடல்லாகம தலைமையில் இயங்கும் குழு இது பற்றிய விதந்துரைகளை முன்மொழிந்துள்ளது.

புதிய திட்டத்தின் மூலம் நிதிமன்றத்தை நாடும் ஒருவர் பிராயணம் செய்ய வேண்டிய தூர எல்லை 25 கிலோ மீற்றருக்கு மட்டுப்படுத்தப்படும்.

கிழக்கு மாகாணமும் வன்னி பிரதேசமும் உள்ளடங்கும் விதத்தில் நீதிமன்ற எல்லைகள் வகுக்கப்பட்டுள்ளன. நீதிச்சேவைகள் ஆணைக்குழு இதற்கான நீதிபதிகளை நியமிக்கும் என தெரிவிக்கப்படுகிறது. (ஓ-4)

# மலேசியா மற்றும் இந்தோனேஷியாவில் புலிகளின் வான் படையினருக்கு பயிற்சி

## சிங்கள ஊடகம் தகவல்


(கொழும்பு)

மலேசியா மற்றும் இந்தோனேஷியா ஆகிய நாடுகளில் விடுதலைப் புலிகளின் வான் படையினர் பயிற்சிகளைப் பெற்றுக் கொண்டுள்ளதாக சிங்கள ஊடகமொன்று செய்தி வெளியிட்டுள்ளது.

தற்போது அரசாங்கத்தின் தடுப்புக் காவலில் உள்ள விடுதலைப் புலிகளின் சர்வதேச விவகாரப் பொறுப்பாளர் குமரன் பத்மநாதனிடம் நடத்தப்பட்ட விசாரணைகளின் போது இந்தத் தகவல்கள் கிடைக்கப் பெற்றுள்ளதாகவும் விடுதலைப் புலிகளின் இரண்டு விமானிகளை படையினர் கைது செய்துள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

விமானப் பயிற்சிகளைப் பூர்த்தி செய்த இன்னும் பல விடுதலைப் புலி உறுப்பினர்கள் அகதி முகாம்களில் தங்கியிருப்பதாக குறிப்பிடப்படுகிறது.

குறித்த வான்படை உறுப்பினர்களை கைது செய்யும் நடவடிக்கைகள் தொடர்ச்சியாக முன்னெடுக்கப்படும் என பொலிஸார் அறிவித்துள்ளார். (ஓ-5)





க.பொ.த உயர்தர வகுப்புகளில் கற்பிக்கும் ஆசிரியர்களுக்கான பயிற்சிக் கருத்தரங்கு நேற்று முன்தினம் யாழ்.மத்திய கல்லூரியில் ஆரம்பித்து வைக்கப்பட்டது. இந்நிகழ்வில் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்ட சமூக சேவைகள் மற்றும் சமூக நலத்துறை அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா உரை நிகழ்த்துவதையும் பயிற்சியில் கலந்து கொண்ட ஆசிரியர்களையும் படங்களில் காணலாம்.

# வாணிவிழா

(யாழ்ப்பாணம்)

தொண்டைமானாறு வீரகத்திப் பிள்ளை மகா வித்தியாலயத்தின் வாணி விழா நாளை திங்கட்கிழமை காலை 9 மணிக்கு வித்தியாலய அதிபர் வ. கணேசமூர்த்தி தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக ஆசிரியர் க. நவரத்தினம் கலந்து சிறப்பிப்பதுடன் சந்நிதியான் ஆச்சிரமத்தின் ஆதரவுடன் நடைபெற்ற திருக்குறள் மனனப் போட்டியில் வெற்றி பெற்ற மாணவர்களுக்கான பரிசளிப்பு வைபவமும் இடம்பெறவுள்ளது. (ஓ-4)

# இலங்கையில் மனித உரிமைகள் மீறப்படுவதாக குற்றம் சாட்டுவதற்கு அமெரிக்காவுக்கு அருகதையில்லை

## வாசுதேவ நாணயக்கார தெரிவிப்பு

(கொழும்பு)

இலங்கை அரசாங்கத்தை கவிழ்த்து ரணில் விக்கிரமசிங்கவின் ஆட்சியினை உருவாக்க அமெரிக்கா முயற்சிக்கிறது என்று ஜனாதிபதியின் ஆலோசகரும் ஜனநாயக இடதுசாரி முன்னணியின் தலைவருமான வாசுதேவ நாணயக்கார தெரிவித்துள்ளார். இதுகுறித்து அவர் மேலும் கூறியதாவது,

உலகின் எந்தவொரு நாட்டுக்கும் அல்லது அமைப்புக்கும் வேறொரு நாட்டில் நடைபெறும் விடயங்கள் தொடர்பாக கேள்விகளை எழுப்ப முடியும். இது சர்வதேச ரீதியாக அங்கீகரிக்கப்பட்ட விடயமாகும்.

ஆனால் எமது நாட்டுப் பிரச்சினையில் தலையிட்டு இங்கு மனித உரிமைகள் மீறப்படுவதாக குற்றம் சாட்டுவதற்கு அமெரிக்காவுக்கு எதுவிதமான அருகதையும் கிடையாது. இன்று உலகில் பல்வேறு நாடுகளில் பலாத்காரமாக புகுந்து மக்களை கொன்றொழித்து பாரிய மனித உரிமைகளை அமெரிக்காவே மேற்கொண்டு வருகிறது.

எனவே இதனை திருத்திக் கொள்ள வேண்டும். அதனை விடுத்து எமக்கு அறிவுரை கூறமுற்படலாகாது. எமக்கு குறைபாடுகள் இருக்குமானால் அதனை நாம் திருத்திக் கொள்வோம். மனித உரிமைகள் பிரச்சினையை முன்னெடுத்து அரசியல் ரீதியாக எமது நாட்டில் நெருக்கடிகளை ஏற்படுத்தி ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ தலைமையிலான அரசாங்கத்தை கவிழ்ப்பதற்கு அமெரிக்கா முயற்சி செய்து வருகின்றது.

இன்றைய அரசாங்கம் ஏகாதிபத்திய விரோதக் கொள்கையை கடைப்பிடிப்பதே இதற்கு காரணமாகும். எனவே, இந்த அரசாங்கத்தை கவிழ்த்து மேற்கத்தையத்திற்கு ஆதரவான ரணில் விக்கிரமசிங்க தலைமையிலான அரசாங்கத்தை அமைக்கவேஅமெரிக்கா முயற்சிக்கின்றது என்றார். (ஓ-6)

## ஐ.நா. நிறைவேற்றுக் குழுக்கூட்டத்தில் அமைச்சர் சமரசிங்க விசேட உரை

ஜெனிவாவில் நாளை திங்கட்கிழமை நடைபெறவுள்ள அகதிகள் தொடர்பான ஐக்கிய நாடுகள் சபையின் உயர்ஸ்தானிகராலயத்தின் நிறைவேற்றுக் குழுக் கூட்டத்தில் மனித உரிமைகள் மற்றும் இடர் முகாமைத்துவ அமைச்சர் மஹிந்த சமரசிங்க கலந்து கொண்டு விசேட உரையொன்றை நிகழ்த்தவுள்ளார்.

இந்த நிறைவேற்றுக் குழுக் கூட்டத்தில் ஐக்கிய நாடுகள் சபையில் அங்கத்துவம் வகிக்கும் 100க்கும் மேற்பட்ட நாடுகளில் அமைச்சர்கள் கலந்து கொள்ளவுள்ளனர்.

இலங்கையில் இடம்பெயர்ந்துள்ள மக்களுக்கான வசதிகள், மீட்கப்பட்ட பிரதேசங்களில் நிலக்கண்ணி அகற்றும் வேலைத்திட்டங்கள் மற்றும் இடம்பெயர்ந்த மக்களை மீள் குடியேற்றும் செயற்பாடு போன்றவை தொடர்பில் அகதிகள் தொடர்பான ஐக்கிய நாடுகள் சபையின் உயர்ஸ்தானிகராலயத்தின் நிறைவேற்றுக் குழுக் கூட்டத்தில் அமைச்சர் சமரசிங்க விளக்கிக் கூறவுள்ளார் என அமைச்சுத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

அண்மையில் ஜெனிவாவில் இடம்பெற்ற ஐக்கிய நாடுகள் சபையின் மனித உரிமை பேரவையின் அமர்வில் அமைச்சர் மஹிந்த சமரசிங்க கலந்து கொண்டு விசேட உரையாற்றியமை குறிப்பிடத்தக்கது. (ஓ-6)

## இந்திய எல்லையில் மீன்பிடித்த 6 இலங்கை மீனவர்கள் கைது

இந்திய பகுதியில் மீன் பிடித்துக் கொண் டிருந்த இலங்கை மீனவர்கள் 6 பேர் கைது செய்யப்பட்டு சென்னையில் புழல் சிறையில் அடைக்கப்பட்டுள்ளனர்.

சென்னை அருகே இந்திய கடல் பகுதியில் நேற்றுக்காலை இலங்கை மீனவர்கள் 6 பேர் ஒரு படகில் மீன் பிடித்துக் கொண்டிருந்தனர். அவர்களை இந்திய கடலோர காவல் படையினர் பிடித்து படகுடன் சென்னைக்குக் கொண்டு வந்தனர்.


பின்னர் அவர்கள் புது வண்ணாரப் பேட்டை மீன்பிடி காவல் நிலையத்தில் ஒப்படைக்கப்பட்டனர். அவர்கள் வந்த படகு மீன்பிடித் துறைமுகத்தில் நிறுத்தி வைக்கப் பட்டது. பின்னர் 6 பேரும் எழும்பூர் தலைமை மெட்ரோ பொலிட்டன் நீதிமன்றில் ஆஜர் படுத்தப்பட்டனர். அவர்களை புழல் ஜெயிலில் காவலில் வைக்க நீதிபதி உத்தரவிட்டார். (ஓ-6)

## விவசாயிகள் கவனத்திற்கு

(கோண்டாவில்)

யாழ். மாவட்டத்தில் அண்ணளவாக 5 ஆயிரம் ஹெக்ரேயர் மேட்டு நிலம் எந்த கால போகத்திலும் எந்த பயிரும் செய்கை பண்ணப்படாமல் தரிசாக விடப்பட்டுள்ளது. இத்தரிசு நிலங்களில் உழுந்து, நிலக்கடலை, சோளம் போன்ற பயிர்களை எதிர்வரும் மழை காலத்தில் இலாபகரமாக பயிரிட முடியும்.

குறைந்த செலவில் கூடிய இலாபத்தை தரக்கூடிய இவ் மானாவாரி பயிர்ச் செய்கையினால் குடாநாட்டின் தானிய அவரை தேவைகள் பூர்த்தியாகும் என்பதனால் இப் பயிர்ச் செய்கையை மேற்கொள்ள விவசாயிகள், நில உரிமையாளர்கள் முன்வர வேண்டும் என திருநெல்வேலி விவசாய ஆராய்ச்சி நிலையம் கேட்டுள்ளது. (ஓ-4-36)



நல்ல செயல் எப்பொழுதும் உலகில் தனக்கு ஓரிடம் உண்டாக்கிக் கொள்ளும்.

—எமர்சன்

வலம்புரி

## மின் அடுப்பில் உடல் எரித்தால் தோடுடைய செவியன் என்ன செய்வார்?

எதில் மாற்றம் செய்தாலும் அதனால் பாதிக்கப்படுபவர்கள் இந்துக்களாகவே இருக்கின்றனர். இவ்வாறான மாற்றங்களால் இந்துக்கள் பாதிக்கப்படுவது தொடர்பில் எவரும் எதிர்ப்புத் தெரிவிப்பது கிடையாது.

சமய நடைமுறைகள், பண்பாட்டு விழுமியங்கள் என்பவற்றை தொலைத்து விடுவதில் எந்த கவலையும் இல்லாத எம்மவரின் எதிர்கால வாழ்வை நினைத்துப்பார்க்கும் போது கன்னத்தின் ஓரங்கள் நனைகின்றன.

சமயம், பண்பாடு, இறைநம்பிக்கை என்பவற்றில் ஊறித்திளைத்த இந்துக்கள் சிலர் கவலைப்படுவதை தவிர வேறு வழி எதுவும் இல்லை என்ற பெருமூச்சோடு தங்கள் கவலையை எரித்துக் கொள்கின்றனர்.

ஸ்ரீலஸ்ரீ ஆறுமுக நாவலர், சைவப்பெரு வள்ளல் சேர் பொன் இராமநாதன் போன்ற இந்து மதத்தின் பெருந்தலைவர்கள் இன்றில்லை என்ற குறைபாட்டினால் விஞ்ஞானமும், மருத்துவமும் கலந்து வாழ்விற்கு ஞானத்துவத்தை தரும் இந்து மதம் இலங்கையில் இடர்படும் சமயமாகிவிட்டது.

ஓரளவேனும் இந்துப் பண்பாட்டுக்கொடி யாழ்ப்பாணத்தில் ஆங்காங்கே படர்ந்துள்ளதென்ற திருப்திக்கு ஆப்புவைக்கும் வகையில்,

யாழ்ப்பாணத்தின் முக்கிய மயானங்களில் மின்சாரத்தில் உடல் எரிக்கும் நடைமுறை கொண்டு வரப்படவுள்ளதான செய்திகள் அமைந்துள்ளன.

விறகுத்தட்டுப்பாடு, மர அழிப்பு போன்றவற்றுக்கான மாற்றுவழியாக மின்சாரத்தில் பூதவுடலைத் தகனம் செய்வதுதான் ஒரேவழி என்ற கண்டுபிடிப்பின் காரணமாக மின்சார அடுப்பில் இந்துவின் உடலம் கருக்கப்படவுள்ளது.

விறகுத்தட்டுப்பாடு, மரஅழிப்பு என்ற விடயங்கள் ஏற்றுக்கொள்ளப்படவேண்டியதும், அதற்கு மாற்றுவழி காணப்படவேண்டும் என்பதிலும் இரு வேறு கருத்திற்கிடமில்லை.

அதேநேரம் சமயத்தத்துவம் குறித்தும் கவனத்தில் கொள்வது கட்டாயமானதாகும்.

இந்து சமயத்தில் இறந்தவருக்கு கிரியை செய்யப்படும். இக்கிரியையை இறந்தவரை இறைவனாகப் பாவனை செய்து அவரை அக்கினி குண்டத்தில் இட்டு இறை உலகாகிய சுவர்க்க லோகத்தில் சேர்பிப்பதாகும்.

இத்தத்துவத்தில் சாணத்திலான விறாட்டிகளைக் கொண்டே அக்கினிப்பிரவாகம் செய்ய வேண்டும்.

இவ்வாறு எரிக்கப்பட்ட விறாட்டி திருநீறாக,

தோடுடைய சிவன் காடுடைய சுடலைப் பொடியை (திருநீற்றை) தன் உடலில் பூசி திரு நடனம் புரிகின்றார் என்பது தத்துவம்.

இந்தத் தத்துவம் விறகடுக்கி உடலை எரிக்கும் நடைமுறையில் இழக்கப்படுவதாயினும், மின் அடுப்பில் உடலை எரித்தால் நிலைமை என்னவாகும்?

ஆக, மின் அடுப்பில் உடல் எரிக்கும் திட்டத்தை கைவிட்டு விறாட்டியின் பயன்பாட்டை அமுலாக்கினால், அதனால் ஒரு தொழில் முயற்சியும் புத்துயிர் பெறும். சமயதத்துவமும் நிலை பெறும் அல்லவா? செய்வது யார்?

# இடறலா...? இயந்திரக்கல்லா...?


## பரமபிதா காட்டிய பாதை

மனிதர்கள் அனைவரும் நல்லவர்களாக வாழ வேண்டும் என்பதுதான் படைத்தவன் நியதி. அதனால் தான் மனிதனை தன் சாயலகாவும், பாவனையாகவும் படைத்தான். ஆனால் மனிதனுக்குள் நல்லவைகளைவிட, தீயவைகளே மிகுந்து காணப்படுவது ஏன்?

எல்லா உயிர்களையும் அன்பு செய்ய வேண்டும் என்பது தான் எல்லா சமயங்களின் போதனை. பின் அன்பை விட ஆணவம் ஏன் தலை தூக்கி நிற்கின்றது? ஆம், அனைத்து தீமைகளுக்கு அடிப்படை ஆணிவேர் ஆணவம் தான். இந்த ஆணவம் தலைக்கேறிவிட்டால் பொறாமை என்ற தீ கொழுந்து விட்டு எரிகின்றது. பொறாமை வந்துவிட்டால் நினைப்பதெல்லாம் கொடுதலாகத்தான் இருக்கும்.

ஆம், ஆணவமும் அதன் வெளிப்படான பொறாமையும் தான், ஒருவனை வாழவும் விடாமல் அடுத்தவனையும் வாழ விடாமல் செய்வன. ஆணவமும், பொறாமையும் தான் பிரிவினையின் சக்திகள். இவை மனிதனின் அரசியல், பொருளாதார, சமூக, சமயம் போன்ற எல்லா நிலைகளிலும் விரவிக் கிடக்கின்றன.

ஆம். இன்றைய நற்செய்தியிலும் இதைத்தான் மையக் கருத்தாகப் பார்க்கின்றோம். ஒருவருடைய செயல் அடுத்தவருக்கு இடறலாகக் கருதினால், என்ன செய்ய வேண்டும் என்று இன்றைய நற்செய்தி தெளிவாகக் கூறுகிறது. இன்றைய நற்செய்தியிலே இரண்டு வகை இடறல்களை இயேசு குறிப்பிடுகிறார் ஒன்று அடுத்தவருக்கு இடறல், மற்றையது தனக்குத்தானே இடறல்.



இங்கு இயேசு கூறுகிறார். ‘‘என்மீது நம்பிக்கைக் கொண்டுள்ள சிறியோருள் எவரையாவது பாவத்தில் விழச் செய்வோருடைய கழுத்தில் ஓர் எந்திரக் கல்லைக் கட்டி, கடலில் தள்ளிவிடுவதே அவர்களுக்கு நல்லது’’ இது முதல்வகை இடறல்.

அடுத்து இரண்டாவது வகை இடறல் என்பது ஒருவர் தனக்குத்தானே இடறலாய் இருப்பது. இதையும் ஆண்டவர் கண்டிக்கிறார். எந்த உடல் உறுப்பாவது ஒருவனுடைய வளர்ச்சிக்கோ, மகிழ்ச்சிக்கோ தடையாக இருந்தால் அதை வெட்டியெறியச் சொல்கின்றார்.

எங்கு நன்மைகள் நடந்தாலும், எங்கு எல்லோரும் சந்தோஷமாக இருந்தாலும், அங்கு நாம் இடறலாய் இல்லாமல் இருக்கப் பார்த்துக் கொள்ள வேண்டும்.


*எனவே பிறர்மீது இடறல்படுவதைத் தடுப்போம்.*

*வீணாக இயந்திரக்கல்லை சுமப்பதைத் தவிர்ப்போம்.*

ஜோன் றொபேட்

# உலகப் பொருளாதாரம் சீரடைவதற்காக பொருளாதார சலுகைகளை தொடர தீர்மானம்

## ஜி-20 தலைவர்கள் முடிவு



(பிட்ஸ்பர்க்)

உலகப் பொருளாதார நிலை சீரடைவதற்காக, பொருளாதா ஊக்கச் சலுகைகளைத் தொடர்வது என, ஜி -20 நாடுகளின் தலைவர்கள் இடையே தீர்மானிக்கப்பட்டது. அமெரிக்காவின் பிட்ஸ்பேர்க் நகரில் ஜி-20மாநாடு நடைபெறுகிறது. இதில், அமெரிக்கா, ரஷ்யா, பிரான்ஸ் மற்றும் சீனா உட்பட பல்வேறு நாடுகளின் தலைவர்கள் கலந்து கொண்டனர். இவர்களிடையே உலகப் பொருளாதாரம் சீரடைவதற்கான ஊக்கச் சலுகைகளைத் தொடர்ந்து பின்பற்றுவது என தீர்மானிக்கப்பட்டது..

இதையொட்டி வெள்ளை மாளிகையில் இருந்து வெளியிடப்பட்ட அறிக்கையில், பல்வேறு நாட்டுத்தலைவர்களும் சர்வதேச அளவிலான பொருளாதார ஒத்துழைப்பு குறித்து விவாதிப்பதற்கான சிறந்த இடமாக ஜி-20 மாநாட்டைக் கருதுகின்றனர்.

நிதிஅமைப்பைச் சீரமைத்து ஏழைகளின் வாழ்க்கையை மேம்படுத்தவே, பொருளாதார ஊக்கச் சலுகைகள் தொடர தீர்மானிக்கப் பட்டது எனத் தெரிவிக்கப்பட்டது.

மேலும், அடுத்த மூன்று ஆண்டுகளில், வங்கிகள் செயல்படுவதற்கான ஒழுங்குமுறை விதிகள், புதிதாக உருவாக்க ஜி-20 நாடுகளின் தலைவர்கள் இடையே வரைவு தீர்மானம் கொண்டு வரப்பட்டது. இதில் வங்கிகள் கடன் வழங்குவது நிர்வாகம் உட்பட பல்வேறு நடவடிக்கைகளை ஒழுங்குபடுத்துவதற்கான விதிமுறைகள் வகுக்கப்படும் என தெரிவிக்கப்பட்டுள்ளது. இது வங்கிகளின் கடன் வழங்கும் முறைகளில் மாற்றம் கொண்டு வருவதை வலியுறுத்துவதாக உள்ளது. (ஓ-6)

# மைக்கேல் ஜாக்சன் இறுதியாக பாடிய பாடல்



மரணம் அடைவதற்கு முன்பு மைக்கேல் ஜாக்சன் கடைசியாகப் பாடிய ''திஸ் இஸ் இட்'' என்ற பாடல் எதிர்வரும் 12 ஆம் திகதி வெளியாகிறது.

இந்தத் தகவலை சோனி மியூசிக் என்டெர்டெய்ன்மெண்ட் கம்பனி அறிவித்துள்ளது. இந்தப் பாடலில் ஜாக்சனின் சகோதரர்களும் பாடியுள்ளனர். இதில் இசை உலகில் மறு அவதாரம் எடுப்பதற்காக இறுதி காலத்தில் அவர் ஒத்திகை செய்த காட்சிகள் படமாக பாடலின் பின்னணியில் இடம் பெற்றுள்ளன. (6)

# பாகிஸ்தான் தீவிரவாதிகளால் சர்வதேச நாடுகளுக்கு அச்சுறுத்தல்

பாகிஸ்தானில் செயல்படும் பயங்கரவாதிகள் சர்வதேச நாடுகளுக்கு பெரும் அச்சுறுத்தலாக உள்ளனர் என அமெரிக்க அதிபர் ஒபாமா தெரிவித்துள்ளார். நியூயோர்க்கில் நடந்த கூட்டத்தில் அமெரிக்க அதிபர் ஒபாமா உரையாற்று கையில்,

பாகிஸ்தானில் செயல்படும் பயங்கரவாதிகள் அந்த நாட்டுக்கு மட்டுமல்லாது அமெரிக்கா உட்பட சர்வதேச நாடுகளின் பாதுகாப்புக்கும் பெரும் அச்சுறுத்தலாக உள்ளனர். சர்வதேச நாடுகள் ஒருங்கிணைந்து செயல்படுவதன் மூலம் மட்டுமே இந்த சவாலை முறியடிக்க முடியும். பாகிஸ்தான் மக்களின் வளமான எதிர்காலம் அமையவேண்டும் என்பதில் அமெரிக்கா உறுதியாக உள்ளது. பாகிஸ்தானின் பாதுகாப்பை உறுதி செய்வதற்காக அமெரிக்கா உதவி செய்கிறது.




பயங்கரவாதத்தை ஒழிப்பதற்கு இது உதவும். இவ்வாறு ஒபாமா தெரிவித்தார். (ஓ-6)

# அமெரிக்காவின் பாகிஸ்தானுக்கான நிதியுதவிக்கு

## இந்தியா கடும் எதிர்ப்பு

(நியூயோர்க்)

அமெரிக்காவில் நடக்கும் ஜி-20 மாநாட்டில் கலந்துகொள்ள சென்றுள்ள இந்திய வெளியுறவு அமைச்சர் எஸ்.எம்.கிருஸ்ணா நியூயோர்க்கில் நிருபர்களிடம் கூறுகையில், பாகிஸ்தானுக்கு அமெரிக்கா ரூ.7500 கோடி நிதி உதவி அளிக்க உள்ளது.

இந்தப் பணத்தை பாகிஸ்தான் தவறான முறையில் பயன்படுத்த வாய்ப்பு உள்ளது. ஏற்கனவே அமெரிக்கா தீவிரவாதிகளை ஒடுக்குவதற்காக கொடுத்த பணத்தை இந்தியாவுக்கு எதிராக பயன்படுத்தியதாக முன்னாள் அதிபர் முஷரப் கூறி இருக்கிறார்.

இப்போது கொடுக்கும் பணமும் இந்தியாவுக்கு எதிராகவே பயன் படுத்தப் படும். எனவே இந்த உதவியை நிறுத்த வேண்டும்.

அணுபரவல் தடுப்பு ஒப்பந்தத்தில் கையெழுத்திட வேண்டும் என்று இந்தியாவை வற்புறுத்துவது நியாயமானது அல்ல. இதில் கையெழுத்து இடுவது இல்லை என்ற இந்திய நிலைப்பாட்டில் எந்த மாற்றமும் இல்லை. இது இந்தியாவின் கொள்கை முடிபு. அதை மீற முடியாது இவ்வாறு அவர் கூறினார். (ஓ-6)

# அணு ஆயுதங்கள் தொடர்பில் முடிவெடுக்க ஈரானுக்கு ஐ.நா.சபை ஒரு வார காலக்கெடு

(நியூயோர்க்)

ஈரானானது எதிர்வரும் ஒரு வார காலப் பகுதியில் தனது அணு ஆயுதங்கள் தொடர்பில் பேச்சுவார்த்தைகளை முன்னெடுக்க தயாராகாவிட்டால் புதிய தடைகளை எதிர் கொள்ள நேரிடும் என உலகத் தலைவர்கள் எச்சரிக்கை விடுத்துள்ளனர்.

அமெரிக்க ஜனாதிபதி பராக் ஒபாமா பிரித்தானிய பிரதமர் கோர்டன் பிறவுண் ஆகியோர் எதிர்வரும் வியாழக்கிழமைக்குள் ஈரான் தனது அணு ஆயுத விவகாரம் தொடர்பில் முடிவெடுக்க வேண்டும் என இறுதி எச்சரிக்கை விடுத்துள்ளனர்.

ஐக்கிய நாடுகள் சபையில் இடம்பெற்ற கூட்டத்தில் உரையாற்றுகையிலேயே அவர்கள் இவ்வாறு எச்சரிக்கை விடுத்துள்ளனர். (6)

# உலகிலேயே திமிங்கலங்களுக்கான முதலாவது சரணாலயம்



(பலாவ்)

பசுபிக் பெருங்கடலில் 130 வகை திமிங்கலங்கள் உள்ளன இவற்றை ஆழியாமல் பாதுகாக்க சரணாலயம் அமைக்கப்ப உள்ளது. இது பசுபிக்கடலில் உள்ள பலாவ் நாட்டில் உருவாக்கப்படுகிறது. இந்த தகவலை ஐ.நா பொதுச்சபை கூட்டத்தில் அந்நாட்டு அதிபர் தெரிவித்தார்.

# மெலிவான உடல்வாகு கொண்டவர்கள் பருமனானவர்களுடன் உணவு உண்ண வேண்டும்

## ஆய்வில் தகவல்

(லண்டன்)

மெலிதான உடல்வாகு கொண்டவர்கள் அதைத் தக்க வைத்துக்கொள்வதற்கு உடல் பருமனான நண்பர்களுடன் அமர்ந்து உணவு உண்ண வேண்டும் என்று ஆய்வுத் தகவல் தெரித்துள்ளது.

நாம் சாப்பிடும் உணவின் அளவை விட, நம்முடன் சாப்பிடுபவர்களின் உடல் அளவு பெரிதாக இருப்பதுதான் முக்கியம் என்று அமெரிக்கா மற்றும் லண்டன் பல்கலைக்கழக ஆராய்ச்சியாளர்கள் தெரிவித்தனர்.

உடல் பருமனான நண்பருடன் சேர்ந்து சாப்பிடும்போது அவர் அதிகளவு சாப்பிட்டால், நாம் குறைந்த அளவே சாப்பிடுவோம்.

ஏனெனில் உடல் பருமனானவர், அவர் உடல் வாகுக்கு ஏற்றவாறு சாப்பிடுகிறார். நம் உடல்வாகுக்கு ஏற்றவாறு நாம் குறைவாக சாப்பிட்டால் போதும் என்ற எண்ணம் வரும். இதையே மெலிந்த உடல்வாகு கொண்ட நண்பருடன் சாப்பிடும்போது அவர் நிறைய சாப்பிட்டால் நாமும் நிறைய சாப்பிடுவோம்.

ஏனெனில் மெலிந்த உடல்வாகு கொண்ட அவரே அதிகமாக உண்ணும்போது நாம் ஏன் உண்ணக்கூடாது என்று எண்ணி, அதிகமாகச் சாப்பிடத் தோன்றும். அதனால் உடல் பருமனாகக் கூடும் என்று ஆராய்ச்சியாளர்களின் ஆய்வில் தெரியவந்துள்ளது.

இந்த ஆய்வில் 200க்கும் மேற்பட்ட மாணவர்களை இரண்டிரண்டு பேராக அமர வைத்து சாப்பிடச் செய்ததாக ஆராய்ச்சியாளர்கள் தெரிவித்தனர். (ஓ-6)

# பாகிஸ்தானில் ஆளில்லாத விமானம் மூலம் தாக்குதல் ; 12 பேர் பலி

(இஸ்லாமாபாத்)

பாகிஸ்தான் எல்லையில் அமெரிக்காவின் ஆளில்லாத விமானம் ஏவுகணைத் தாக்குதல் நடத்தியதில் 12 பயங்கரவாதிகள் பலியாகினர்.

ஆப்கானிஸ்தானில் கடந்த 2001 ஆம் ஆண்டு அமெரிக்கா தாக்குதல் நடத்திய பின் பாகிஸ்தான் எல்லையில் முகாமிட்டுள்ள தலிபான்களை ஒடுக்க அமெரிக்கப் படைகள் ஆளில்லாத விமானம் மூலம் தாக்குதல் நடத்தி வருகின்றன.

சமீபத்தில் பாகிஸ்தான் தலிபான் தலைவர் ரபதுல்லா மசூத் இதுபோன்ற தாக்குதலில் கொல்லப்பட்டார். இந்த மாதத்தில் மட்டும் பாகிஸ்தான் எல்லைப் பகுதியான வாசிரிஸ்தானில் அமெரிக்காவின் ஆளில்லாத விமானம் நான்கு முறை தாக்குதல் நடத்தியுள்ளது.

மிரான்ஷா என்ற இடத்தில் தலிபான் பயங்கரவாதிகளில் முக்கிய புள்ளியான ஜலாலுதீன் ஹக்கானி ஒளிந்துள்ள இடத்தில் கடந்த வியாழக்கிழமை ஆளில்லாத விமானம் மூலம் ஏவுகணை வீசப்பட்டதில் பல வீடுகள் தரைமட்டமாயின. இதில் 12 பேர் பலியாகினர். (6)

# இங்கிலாந்து அணி வெற்றி இலங்கை அணி அதிர்ச்சி

(ஜோகனஸ்பேர்க்)

கொலிங்வூட்டின் சகலதுறை ஆட்டத்தின் மூலம் இங்கிலாந்து அணி 6 விக்கெட்டுக்கள் வித்தியாசத்தில் இலங்கை அணியை வீழ்த்தியது.

எட்டு அணிகள் மோதும் சம்பியனஸ் கிரிக்கெட் தொடர் தென்னாபிரிக்காவில் நடைபெற்று வருகின்றது. இதில் நேற்று முன்தினம் ஜோகனஸ்பேர்க்கில் நடைபெற்ற லீக் சுற்றின் 4 ஆவது போட்டியில் பிரிவு பி யைச் சேர்ந்த இலங்கை-இங்கிலாந்து அணிகள் மோதின.

இப் போட்டியில் நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்ற இங்கிலாந்து அணி முதலில் களத்தடுப்பை தீர்மானித்தது.

### ஆரம்பமே சொதப்பல்

இதனடிப்படையில் முதலில் துடுப்பெடுத்தாடிய இலங்கை அணி முன்னணித் துடுப்பாட்ட வீரர்களின் விக்கெட்டுக்களை மள மள வென இழந்து தத்தளித்தது.

இதில் ஜெயசூரியா பூச்சியத்துடனும் டில்சான் 2 ஓட்டங்களுடனும் ஜெயவர்த்தனா 9 ஓட்டங்களுடனும் அணித்தலைவர் சங்கக்கார ஒரு ஓட்டத்துடனும் ஆட்டமிழக்க இலங்கை அணி 5.2 ஓவர்களில் 17 ஓட்டங்களை மாத்திரம் எடுத்து 4 விக்கெட்டுக்களை இழந்தது.

இந்நிலையில் 5 ஆவது விக்கெட்டுக்காக இணைந்த சமரவீர-கண்டம்பி ஜோடி நிதானமாகத் துடுப்பெடுத்தாடி அணியை சரிவில் இருந்து மீட்டெடுத்தனர்.

இந்த ஜோடி மூன்றாவது விக்கெட்டுக்காக 64 ஓட்டங்களை நிதானமாக எடுத்தபோது சமரவீர 30 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்தார்.

### கண்டம்பி-மத்யூஸ் ஆறுதல் தந்தனர்

தொடர்ந்து 6 ஆவது விக்கெட்டுக்காக இணைந்த கண்டம்பி-மத்யூஸ் ஜோடி சிறப்பாகத் துடுப்பெடுத்தாடி ஆறுதலளித்தனர். இந்த ஜோடியின் அதிரடி கைகொடுக்க இலங்கை அணி 22.5 ஓவர்களில் 100 ஓட்டங்களைக் கடந்தது.

இதில் கண்டம்பி 71 ஆவது பந்தில் அரைச்சதம் கடந்து கைகொடுத்தார். மறுமுனையில் மத்யூஸ் 64 பந்துகளில் அரைச்சதம் கடந்து அசத்த இலங்கை அணி 34.3 ஓவர்களில் 150 ஓட்டங்களைத் தொட்டது.

இதில் கண்டம்பி 82 பந்துகளில் (5 பவுண்டரி உட்பட) 53 ஓட்டங்களுடனும் மத்யூஸ் 73 பந்துகளில்(6 பவுண்டரி உட்பட) 52 ஓட்டங்களை எடுத்து ஆட்டமிழக்க இலங்கை அணி 40.5 ஓவர்களில் 176 ஓட்டங்களை எடுத்து 7 விக்கெட்டுக்களையிழந்தது.




தொடர்ந்து களமிறங்கிய குலசேகர பிரகாசித்த போதும் இலங்கை அணி 47.3 ஓவர்களில் 212 ஓட்டங்களை எடுத்து சகல விக்கெட்டுக்களையும் இழந்தது.

இதில் குலசேகர ஆட்டமிழக்காமல் 17 ஓட்டங்களையும் முரளிதரன் 10 பந்துகளில் (2 பவுண்டரிகள், ஒரு சிக்ஸர் உட்பட) 18 ஓட்டங்களையும் எடுத்தனர்.

பந்துவீச்சில் ஜேம்ஸ் அன்டர்ஷன், பிரோட் ஆகியோர் தலா 3 விக்கெட்டுக்களையும் ஒனியன்ஸ் 2 விக்கெட்டுக்களையும் ரைட் ஒரு விக்கெட்டையும் வீழ்த்தினர்.

### இங்கிலாந்து ஆரம்பம் மோசம்

பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய இங்கிலாந்து அணியின் ஆரம்பத் துடுப்பாட்ட வீரர்களான டென்லி 5 ஓட்டங்களுடனும் அணித்தலைவர் ஸ்ரொரஸ் 9 ஓட்டங்களுடனும் அடுத்தடுத்து ஆட்டமிழந்து வெளியேற 7.3 ஓவர்களில் 19 ஓட்டங்களை எடுத்து 2 விக்கெட்டுக்களையிழந்தது.

இந் நிலையில் 3ஆவது விக்கெட்டுக்காக இணைந்த ஓவைஸ் ஷா-கொலிங் வூட் ஜோடி சிறப்பான இணைப்பாட்டத்தை வழங்க இங்கிலாந்து அணி சரிவிலிருந்து மீண்டது.

இந்த ஜோடி 3ஆவது விக்கெட்டுக்காக 63ஓட்டங்களை இணைப்பாட்டமாக எடுத்த போது கொலிங் வூட் 51 பந்துகளில் (5 பவுண்டரிகள், 3 சிக்ஸ்சர்கள் உட்பட) 46 ஓட்டங்களை எடுத்து ஆட்டமிழந்தார்.

தொடர்ந்து களமிறங்கிய மோர்கன்ஷாவுடன் இணைந்து சிறப்பான ஆட்டத்தை வெ ளிப்படுத்த இங்கிலாந்து அணி 33.4 ஓவர்களில்150 ஓட்டங்களைத் தொட்டது.

இதில் ஓவைஸ் ஷா 74 பந்துகளில் (3 பவுண்டரிகள் ஒரு சிக்ஸ்சர் உட்பட) 44 ஓட்டங்களை எடுத்து ஆட்டமிழக்க இங்கிலாந்து அணி 34.5 ஓவர்களில் 158 ஓட்டங்களை எடுத்து 4ஆவது விக்கெட்டையிழந்தது.

இந்நிலையில் 5ஆவது விக்கெட்டுக்காக இணைந்த மோர்சன்-பிறிர் ஜோடியின் சிறப்பான இணைப்பாட்டத்தின் மூலம் இங்கிலாந்து அணி 45 ஓவர்களில் 4 விக்கெட்டுக்களையிழந்து 213 ஓட்டங்களை எடுத்து 6 விக்கெட்டுக்களால் வெற்றிபெற்றது.

இதில் மோர்கன் 83 பந்துகளில் (7 பவுண்டரிகள் உட்பட) 62 ஓட்டங்களும் பிறிர் 27 பந்துகளில் (3 பவுண்டரிகள் உட்பட) 28 ஓட்டங்களையும் ஆட்டமிழக்காமல் எடுத்தனர்.

பந்துவீச்சில் குலசேகர 2 விக்கெட்டுக்களையும் மலிங்க, முரளிதரன் ஆகியோர் தலா ஒரு விக்கெட்டையும் கைப்பற்றினர். இவ் வெற்றியின் மூலம் இங்கிலாந்து அணி 2 புள்ளிகளைப் பெற்றது.

இப்போட்டியில் இங்கிலாந்து அணியின் சகலதுறை வீரர் கொலிங் வூட் ஆட்டநாயகனாகத் தெரிவானார்.

இப் போட்டியில் தோல்வியடைந்த இலங்கை அணி நாளைமறுதினம் நியூசிலாந்து அணியுடன் நடைபெறும் போட்டியில் கட்டாயம் வெற்றி என்ற இலக்குடன் களமிறங்கும்.


## நன்றி நவில்கின்றோம்



கோம்பயன்மணல் மயான அபிவிருத்தி வேலைகளுக்கு 1கோடி ரூபாய் நிதியினை வழங்கியமைக்காக சமூக சேவைகள் மற்றும் சமூக நலத்துறை அமைச்சர் கே.என் டக்ளஸ் தேவானந்தா அவர்களுக்கும் மற்றும் யாழ். நகர மேயர் திருமதி யோகேஸ்வரி பற்குணராசா அவர்களுக்கும் எமது மனமார்ந்த நன்றியினைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

கோம்பயன்மணல் இந்து மயான பரிபாலன சபை அங்கத்தவர்கள்.

3585


# அவுஸ்திரேலிய அணி அசத்தல் மேற்கிந்தியத் தீவுகள் தோல்வி

(ஜோகனஸ்பேர்க்)

ஜோன்ஸனின் அதிரடியான அரைச்சதம் கைகொடுக்க அவுஸ்திரேலிய அணி 50 ஓட்டங்கள் வித்தியாசத்தில் மேற்கிந்தியத் தீவுகள் அணியை வீழ்த்தியது.

தென்னாபிரிக்காவில் நடைபெற்று வரும் சம்பியன்ஸ் கிரிக்கெட் தொடரில் நேற்று நடைபெற்ற லீக் சுற்றின் 5 ஆவது போட்டியில் பிரிவு ஏ யைச் சேர்ந்த அவுஸ்திரேலியா-மேற்கிந்தியத் தீவுகள் அணிகள் மோதின.

இப் போட்டியில் நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்ற மேற்கிந்தியத் தீவுகள் அணி முதலில் களத்தடுப்பைனைத் தெரிவு செய்தது. இதனடிப்படையில் முதலில் துடுப்பெடுத்தாடிய அவுஸ்திரேலிய அணி அணித்தலைவர் பொன்டிங்-ஜோன்சனின்




சிறப்பான துடுப்பாட்டத்தின் மூலம் 50 ஓவர்களில் 8 விக்கெட்டுக்களை இழந்து 275 ஓட்டங்களை எடுத்தது.

இதில் அணித்தலைவர் ரிக்கி பொன்டிங் 95 பந்துகளில் (9 பவுண்டரிகள், ஒரு சிக்ஸர் உட்பட) 79 ஓட்டங்களையும் ஜோன்ஸன் ஆட்டமிழக்காமல் 47 பந்துகளில்(8 பவுண்டரிகள், 3 சிக்ஸர்கள் உட்பட) 73 ஓட்டங்களையும் பெய்ன் 33 ஓட்டங்களையும் எடுத்தனர்.

பந்து வீச்சில் றோஷ், பேர்னாட், மில்லர் ஆகியோர் தலா 2 விக்கெட்டுக்களையும் சமி ஒரு விக்கெட்டையும் வீழ்த்தினர்.

பதிலுக்கு துடுப்பெடுத்தாடிய மேற்கிந்தியத் தீவுகள் அணி 46.5 ஓவர்களில் 225 ஓட்டங்களை மாத்திரமெடுத்து சகல விக்கெட்டுக்களை இழந்து 50 ஓட்டங்கள் வித்தியாசத்தில் தோல்வியடைந்தது.

இதில் டெளலின் 87 பந்துகளில் (5 பவுண்டரிகள் உட்பட) 55 ஓட்டங்களையும் பிளேற்சர் 77 பந்துகளில் (4 பவுண்டரிகள், ஒரு சிக்ஸ்சர் உட்பட) 54 ஓட்டங்களையும் அணித்தலைவர் ரீபெர் 28 ஓட்டங்களையும் எடுத்தனர். உதிரிகளாக 36 ஓட்டங்களை அவுஸ்திரேலியா அணி வழங்கியது.

பந்துவீச்சில் சிடில், வோட்ஷன், ஹயூரிச் ஆகியோர் தலா 2 விக்



கெட்டுக்களையும் பிரெட் லீ, ஹேறாப்ஸ் ஆகியோர் தலா ஒரு விக்கெட்டுக்களையும் வீழ்த்தினர். இவ் வெற்றியின் மூலம் அவுஸ்திரேலிய அணி 2 புள்ளிகளைப் பெற்றது.

இப் போட்டியிலும் தோல்வியடைந்த மேற்கிந்தியத்தீவுகள் அணி தொடரில் இரண்டாவது தோல்வியை சந்தித்து அரையிறுதி வாய்ப்பை இழந்தது.




## ஒற்றுமை காண்போம்

காலம் : 27.09.2009

நேரம் : மு.ப. 10.00 மணிமுதல் பி.ப. 03.00 மணிவரை

இடம் : கொக்குவில் இந்துக் கல்லூரி மைதானம்

**விருந்தினர்கள்**

திருமதி சுகுணரதி தெய்வேந்திரம்
பிரதேச செயலர் - பிரதேச செயலகம் யாழ்ப்பாணம்

திரு. S. பரராஜசேகரம்
RDO - பிரதேச செயலகம் சாவகச்சேரி

திரு. T. உமாபாலன்
RDO - பிரதேச செயலகம் கரவெட்டி

**நிகழ்வுகள்**

மங்கல விளக்கேற்றல்
வரவேற்புரை
தலைமையுரை
விருந்தினர்கள் உரை
நிகழ்வுகள்
நன்றியுரை

அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்
நன்றி.

60,அரசடி வீதி,
யாழ்ப்பாணம். 021 222 6700

(3589)

SOND

## முகாமில் ஏற்பட்டுள்ள...

வாங்குவதற்கு 80 சதவீதத்திற்கு மேற்பட்ட மக்களிடம் பணம் இல்லை. மற்றையது மழை தொடங்கிவிட்டால் யாரும் சமைத்து சாப்பிட முடியாத நிலை ஏற்படும். இவ்வாறான நெருக்கடியில் விறகுத் தேவைப்பாடுகள் காரணமாக அவர்கள் விறகு உள்ள முகாம் பகுதிக்குச் செல்லவேண்டியிருக்கிறது. தற்போது அப்பகுதியில் பெருமள வான இராணுவம் குவிக்கப்பட்டிருப்பதாக பொது மக்கள் தெரிவித்துள்ளனர். (ந-5,14)


## A/L பௌதிகவியல் வகுப்புகள்

### 2010, 2011 தமிழ் / ஆங்கில மொழிகளில்

பிரபல கல்லூரிகளில் பௌதிகவியல் கற்பித்து அனுபவம் பெற்ற ஆசிரியரினால் ஏராளமான பயிற்சிகளுடன் 20 வருட A/L வினாக்கள் உட்பட M.C.Q விளக்கவிடைகளுடன் குறுகியகாலத்தில் முழுப்பாடத்திட்டமும் முடித்துக் கொடுக்கப்படும். வெளிமாவட்ட வினாத்தாள்களும் செய்யப்படும். பயிற்சிகள் திருத்தப்படும். தனிப்பட்ட முறையிலும் கற்பிக்கப்படும்.

உடன் தொடர்பு : 0776648751 அல்லது நேரில்.

ஆசிரியர்

R. பாலசுப்பிரமணியம் B.Sc(Cey), Dip.in.Ed

42/1, இந்துக்கல்லூரி ஒழுங்கை, நீராவியடி,

யாழ்ப்பாணம். (3591)



## புதிய பிரிவுகள் ஆரம்பம்

Diploma Courses... 28.09.2009 முன் பதிபவர்களுக்கு விசேட கட்டணசலுகை

*MS Office *English*Computerised Accounting

*DTP,Hardware * Web Development

* Video Editing *AutoCAD * VB.net,LINUX

International Courses...

MCP_Microsoft..Professional,Cisco-CCNA,

MCSE_Microsoft...Engineer,ICDL,CIMA

Java programmer(SCJP)

Free Courses ICDL,DHT Sun Java 50%Off

MCS Supported By UNDP/JRRP

Degree Course

* BIT *FIT Semester 1,3 & 5,Project

மேலதிக விபரங்களுக்கு நேரில்,

324, பலாலி வீதி,பரமேஸ்வராசந்தி அருகில்

யாழ்ப்பாணம், 0772395895

(C-3386)



## உடனடி தேவை

### காணி/கட்டிட நிலையம்

இலங்கையின் முன்னணி கூட்டு வர்த்தக நிறுவனத்தின் வடமாகாண வர்த்தகத்திற்கு உகந்த காட்சி அறை மற்றும் களஞ்சிய தேவைகளுக்கு ஏற்ற இடம் தேவை.

நீண்ட வருட குத்தகையின் அடிப்படையில் சுமார் 1000 தொடக்கம் 3000 சதுரஅடி பரப்புடைய யாழ் நகர எல்லைக்குள், நகர மத்தியில், பிரதான வீதியில் அமைந்த இடமாக இருத்தல் வேண்டும்.

உடனடி பார்வைக்கு அழையுங்கள்

Mobile: 0772539466

மனோ

Office: 0115448833

பிரசாந்தி

(C-3362)


## 31ஆம் நாள் நினைவஞ்சலி



மலர்வு 10 03 1943

உதிர்வு 28 08 2009

அமரர்

### தம்பியப்பா தெட்சணாமூர்த்தி அவர்கள்

(இளைப்பாறிய திட்டமிடல் உதவிப் பணிப்பாளர்

பிரதேச செயலகம், வேலணை)

அகவை அறுபத்தாறினிலே
ஆண்டவனைச் சென்றடைந்தீர்
அவன் சித்தம் அதுவானால்
அதைத் தடுக்க யார் இங்கே
இறகொடிந்த பறவைகளாய் நாங்கள்
ஏங்குகின்றோம் இங்கே
உறக்கமில்லை உம் நினைவால்
உவப்புமில்லை இனி எமக்கு
உள்ளமொன்று உள்ளவரை உம்மை நாம்
எம் நினைவினிலே ஏந்தி நிற்போம்
உம் ஆத்மா அமைதியுற
அந்த ஆண்டவனை இறைஞ்சுகிறோம்.
சாந்தி! சாந்தி! சாந்தி!

19/2, பெருமாள் கோவில்

தெற்குவீதி, யாழ்ப்பாணம்.

-குடும்பத்தினர்.

(C-3382)

# வவுனியா நலன்புரி முகாமில்...

வவுனியா இராமநாதபுரம் முகாமிலிருந்து ஆனந்த குமாரசாமி முகாமிற்கு விறகுகள் கொண்டு சென்ற மக்களை படையினர் தடுத்து நிறுத்தியமையால் அப்பகுதியில் படையினருக்கும் பொது மக்களுக்குமிடையில் முறுகல் நிலை தோன்றியதையடுத்து ஏற்பட்ட மோதலில் இரண்டு பொது மக்கள் காயமடைந்துள்ளனர்.

இம் மோதல் சம்பவம் தொடர்பாக முகாமிலுள்ள பொது மக்கள் சிலர் பி.பி.சிக்கு கருத்துத் தெரிவித்துள்ளனர். இது தொடர்பாக அவர்கள் தெரிவித்ததாவது;

படையினர் இன்று (நேற்று) அடித்ததில் இரண்டு பொது மக்கள் காயமடைந்துள்ளனர். படையினர் துப்பாக்கி பிரயோகம் மேற்கொண்டனர். இதனையடுத்து மக்கள் எல்லோரும் நிலத்தில் விழுத்து படுத்தனர். இல்லை என்றால் பெரும் ஆபத்து ஏற்பட்டிருக்கும். ஆனாலும் இரண்டு பேரிற்கு காயம் எனத் தெரிவித்து தூக்கிச்சென்று விட்டார்கள். தற்போது (நேற்றிரவு) கூடுதலான படையினர் சுற்றிவர நிற்கிறார்கள். புலனாய்வாளர்களும் நிற்கிறார்கள். எங்களையும் வந்து வெருட்டி விட்டுச் சென்றனர். தற்போது இங்கு எவ்வாறு இருப்பது என்று தெரியவில்லை இரவில் ஒரே அநியாயம். நாங்கள் எதுவும் கதைக்கக் கூடாது.

முகாமைச் சுற்றி முள்ளுக்கம்பி போடப்பட்டிப்பதால் விறகு கொண்டு செல்வதற்காக வேலியை உடைத்துத்தான் செல்ல வேண்டும். வேலியை உடைத்ததால்தான் பிரச்சினை உருவானது. ஆண்கள் இங்கு கதைக்கமுடியாது. அவர்களிற்கு கடுமையான தண்டனை வழங்கப் படுகிறது. ஐந்தாறு பஸ்களில் இராணு வத்தை கொண்டுவந்து இறக்கியுள்ளார்கள். நாங்கள் ஒளித்து நின்றுதான் உங்களோடு கதைக்கிறோம்.

விறகு கொண்டு சென்றவர்களை முதலில் அடித்தார்கள். பின்னர் கற்களால் எறிந்தார்கள். அதன்பின் சுட ஆரம்பித்து விட்டார்கள். பெருமளவான இளைஞர்களைப் பிடித்து முழங்காலில் நிற்க வைத்துள்ளார்கள். அவர்களிற்கு [illegible] வசதியில்லை. பொருட்கள் அரிசி, மா என்பன கொடுத்தாலும் கறிவாங்க முடியாது விறகுவெட்டி விற்றுத் தான் பிழைக்கிறார்கள். இந்த முகாமிலிருந்து அந்த முகாமிற்கு விறகு கொண்டு செல்வார்கள். அவர்க ளைப் படையினர் பிடித்து அடிப்பார்கள்.

இராணுவம் தான் முதலில் தாக்கியது. காலையிலிருந்து மாலை வரை அடிப்பார்கள். தற்போது நிலைமை கொந்தளிப்பாக உள்ளது. பெருமளவு படையினர் குவிக்கப்பட்டுள்ளார்கள். பிடித்த இளைஞர்களை விடவில்லை.

இரண்டுமுறை படையினர் வானை நோக்கிச் சுட்டார்கள். பின்னர் மக்களை நோக்கிச் சுட்டார்கள். மக்கள் எல்லாரும் விழுந்து படுத்து விட்டார்கள் யாரும் இறந்ததாக தெரியவில்லை. இரண்டு பேரிற்கு காயம் என கூறுகின்றார்கள். படையினர் சுட்டதால்தான் காயம் ஏற்பட்டதாக கூறுகிறார்கள் என்று முகாம்களிலுள்ளமக்கள்சிலர்தெரிவித்துள்ளனர்.

**இராணுவப் பேச்சாளர் மறுப்பு**

வவுனியா நலன்புரி முகாமில் படையினர்-பொதுமக்கள் இடையே மோதல்கள் எதுவும் இடம் பெறவில்லை என இராணுவப் பேச்சாளர் பிரிகேடியர் உதய நாணயக் கார தெரிவித்துள்ளார். இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது; வவுனியா நலன்புரி முகாமில் மோதல்கள்எதுவும் இடம் பெறவில்லை. நடந்தது என்ன வென்றால் முதலாவது முகாமிலிருந்து இரண்டாவது முகாமிற்கு சிலர் தப்பிச் செல்ல முயன்றார்கள். அப் பொழுது அங்கு காவல் கடமையிலி ருந்த படையினர் அப்படிச் செல்ல முற்பட்டவர்களைத் தடுத்துள்ளார்கள். இதன் போது அங்கு பெரும் மக்கள் கூட்டம் கூடியது. அவர்கள் பாதுகாப்புப் படையினரை நோக்கி கற்களை வீசியுள்ளார்கள் எனவே பாதுகாப்புப் படையினர் தற்காப்பு நடவடிக்கையாக துப்பாக்கிச் சூடு நடத்தி அவர்களை விரட்டியுள்ளார்கள். இதன் போது இரண்டு பொது மக்களுக்குகாயம் ஏற்பட்டுள்ளது. அவர்கள் செட்டிக்குளம் வைத்தியசாலையில் அனுமதிக்கப் பட்டுள்ளார்கள். அத்துடன் பாதுகாப்புப் படையினரைத் தாக்க முயன்ற 19 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர். தற்பொழுது விசாரணைகள் நடைபெற்று வருகின்றன. அங்கு நிலைமைகள் கட்டுக்குள்திரும்பியுள்ளது எனஇராணுவப்பேச்சாளர்பிரிகேடியர் உதய நாணயக்கார தெரிவித்தார். (ந-5,3,14)

## துப்புமுகா...

தளபதி மேஜர் ஜெனரல் கமல் குணரத்ன தெரிவித்துள்ளார். வவுனியா மாவட்ட அரசாங்க அதிபர் இதற்கு முன்னர் வெளியிட்டிருந்த அறிக்கையில், முகாம்களிலிருந்து 10 ஆயிரம் பேர் தப்பிச் சென்றுள்ளதாக தெரிவிக்கப்பட்டிருந்தது. இந்த அறிக்கை சமர்ப்பிக்கப் பட்ட பின்னர் வன்னிக் கட்டளைத் தளபதியின் கீழ் மீண்டும் கணக் கெடுப்புக்கள் ஆரம்பிக்கப்பட்டன. இதனடிப்படையில் ஏற்கனவே சமர்ப் பிக்கப்பட்ட அறிக்கை பிழை யானது என கமல் குணரத்ன கூறி யுள்ளார். ஒரே நபரை இரண்டு தடவைகளுக்கு மேல் கணக்கிட்டமை உள்ளிட்ட பல தவறுகளை ஏற்கென வே சமர்ப்பிக்கப்பட்ட அறிக்கையில் அடையாளம் கண்டுள்ளதாகவும் அவர் கூறியுள்ளார். (ந-5)

## தீவகத்தைச்...

தப்படும் நடவடிக்கை கடந்த இரு மாதகாலமாக நடைபெற்று வருகிறது. இந்நிலையில்நேற்றும் வவுனியா நலன்புரி முகாம்களிலி ருந்து தீவகத்தைச் சேர்ந்த 657 பேர் அழைத்துவரப்பட்டு வேலணை, காரைநகர் ஆகிய இடங்களில் தற்காலிக இடைத்தங்கல் முகாம்களில் தங்க வைக்கப்பட்டனர். இம் மக்கள் இன்று அவர்களின் சொந்த இடங்களில் குடியமர்த்தப் படுவர்கள் எனவும் யாழ். அரச அதி பர் க.கணேஷ் குறிப்பிட்டார். (ந-5)


## நியூ சிற்றி றேடேர்ஸ் இடமாற்றம்

சொனி, பனசொனி, சொனிக்கா ரேடியோ ,கசற் ரெக்கோடர் சொனி,பைனியர்,ஆரெக் கார் ரேடியோ,சொனி,பனசொனிக், LG கலர் டிவி ,டிஸ்TV கிரோகோல்ட் ரிசீவர், சொனி, பனசொனிக், அட்லாண்டா DVD பிளேயர் மற்றும் சகல விதமான இலத்திரனியல் உதிரிப்பாகங்களை பெற்றுக் கொள்ளவும் மேற்குறிப்பிட்ட பொருள்களை திருத்திக் கொள்ளவும் நாடுங்கள்

நியூ சிற்றி றேடர்ஸ்,

T.P.:- 021 222 3226

319 A, K.K.S. வீதி, யாழ்ப்பாணம்.

(மேற்படி ஸ்தாபனத்துக்கு யாழ்.நகரில் வேறு கிளைகள் இல்லை. இந்த ஸ்தாபனம் K.K.S. வீதியில் ஸ்ரான்லி வீதி சந்தியில் இருந்து உட்புறமாக 6 ஆவது கடை)

(C-3354)


# மரண அறிவித்தல்கள்

## திருமதி இராசையா வசந்தலெட்சுமி



மண்டைதீவு 7-ம் வட்டாரத்தைப்பிறப்பிடமாகவும் பருத்தித்துறை வீதி, நல்லூரை வசிப்பிடமாகவும் கொண்ட இராசையா வசந்தலெட்சுமி அவர்கள் நேற்று சனிக்கிழமை (26-09-2009) காலமானார்.

அன்னார் இராசையாவின் அன்பு மனைவியும், தேன்மொழி (கனடா), கிருபாகரன் (சுவிஸ்), சுதாகரன், பிரபாகரன் (ஜேர்மனி), ஐங்கரன் (தினக்குரல்) ஆகியோரின் பாசமிகு தாயாரும் ஆவார்.

அன்னாரின் ஈமக்கிரியைகள் பற்றிய விபரம் பின்னர் அறியத்தரப்படும்.

இல. 442, பருத்தித்துறை வீதி,

நல்லூர், யாழ்ப்பாணம்.

தகவல்:

குடும்பத்தினர்.

(C-3384)

## நடராசா ஞானசம்பந்தன்

அச்சுவேலியை பிறப்பிடமாகவும் இலண்டனை வதிவிடமாகவும் கொண்ட நடராசா ஞானசம்பந்தன் 14.09.2009 திங்கட்கிழமை இலண்டனில் இறைவனடி எய்திவிட்டார். அன்னார் அச்சுவேலியைச் சேர்ந்த பவளம்மா நடராசா தம்பதிகளின் புதல்வரும், மதியின் அன்புக்கணவரும், பூர்ணிமாவின் தந்தையும், சாராவின் பேரனும், டரன் பெஸ்ற்றின் மாமனாரும், காலஞ்சென்ற மாணிக்கநடராசாவினதும், ஞானசுந் தரம் (பிரேம்ஜி), கருணாதேவி ஆகியோரினதும் சகோதரரும், கமலி, சிவகுருநாதன், ஆனந்தசங்கரி, சகாதேவசங்கரி, பரதசங்கரி, லோகநாயகி, திருநல்நாயகி, காலஞ்சென்றவர்களாகிய ஜெகசோதி, தர்மசங்கரி, கணேசசங்கரி, இராசசங்கரி, ஞானசங்கரி, துருவசங்கரி, மங்கையற்கரசி ஆகியோரின் மைத்துனருமாவார்.

அன்னாரின் ஈமக்கிரியைகள் 20.09.2009 ஞாயிற்றுக்கிழமை இலண்டனில் நடைபெற்றது. இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:

வீ.ஆனந்தசங்கரி

(C-3383)

இப்பத்திரிகை வலம்புரி அன்.கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 27.09.2009 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.